# நாடக மாலை

'ஜாபன்னு'

வெளியீடு:

சனசமூக நிலயம்

கந்தரோடை, சுன்னுகம்.

ஆனி. 1962] [விலை ரூபா. 1-50

கந்தரோடை சனசமூகநிலைய வெளியீடு ஒன்று

என்றும் இளமை குன்றா
இன்றமிழ் அன்னையின்
இணைமலர்த் தாள்களுக்கு
இச்சிறு நூலைச் சமர்ப்
பிக்கிறேன்.

[உரிமை ஆசிரியருக்கு]

அச்சுப் பதிவு:-
கலாதேவி அச்சகம், சுன்னாகம்.

சிறந்த நாடகாசிரியரும், திறமைமிக்க நடிகரும்,
பிரபல எழுத்தாளரும்,
யாழ்-தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமாகிய
திரு. இ. மகாதேவா (தேவன்-யாழ்ப்பாணம்) அளித்த

# முன்னுரை

தமிழ் நாடக நூல்களை வெளியிடத்துணிவுள்ள பிரசுரகர்த்தர்கள் மிகக்குறைவு. சிறு நாடகங்கள், ஓரங்க நாடகங்கள் நூல் வடிவம் பெறுவது இல்லையென்றே சொல்லலாம்.

அப்படியிருக்க நண்பர் 'ஐயன்ன'வின் நாடகமாலை வெளிவருவது பாராட்டத்தக்கது; வரவேற்க வேண்டியது. பரிசளிப்புவிழா, ஆண்டுவிழா, கதம்பக்கச்சேரி போன்ற பல வைபவங்களில் நடிப்பதற்கு ஏற்ற நாடகங்கள் இல்லாத குறையை இத் தொகுதி ஓரளவுக்கு நிவர்த்தி செய்யும்.

எந்த இலக்கிய சிருஷ்டியிலும் நோக்கம் இருக்க வேண்டும் என்று கருதுகிறவர்கள் இத்தொகுதியிலுள்ள பத்து நாடகங்களிலும் கருத்துப்பிரசாரம் அப்பட்டமாகச் செய்யப்பட்டிருப்பதைக் காண்பார்கள்.

நாடகங்களில் இரண்டு வகை. ஒன்று படிப்பதற்காக. மற்றது நடிப்பதற்காக. ஆனால் நண்பர் 'ஐயன்ன'வின் நாடகங்கள் (அங்கவினை நாடகத்தைத் தவிர) இரண்டுக்கும் பொருத்தமான ஒரு உருவத்தைப் பெற்றுள்ளன. அங்கவினை நாடகம் படிப்பதற்காக மட்டும் எழுதப்பட்டது போலுள்ளது.

எந்த நாடகாசிரியனும் நடிப்பது, காட்சியமைப்பு உணர்ச்சி பற்றிய விளக்கங்களை கூடியவரை குறைத்துக் கொள்ளவேண்டும். கதைக்கும் நாடகத்துக்கும் வித்தியாசம் வேண்டாமா? பாத்திரங்களின் வசனங்களிலிருந்தே

யாவும் புலனாக வேண்டும். இந்த நியதியை 'ஐயனா' நன்கு கடைப்பிடிப்பதிலிருந்தே நாடகம் எழுதும் கலை அவருக்கு நன்கு கைவந்திருக்கிறது என்று தெளிவாகிறது.

முதலாவது நாடகம் 'மலர்ந்ததுதவம்' சமய சம்பந்த மானது. மார்க்கண்டன் என்றும் பதினாறு ஆனான். அப்புறம்...? ஆசிரியரின் கற்பனை தொடர்கிறது.

இரண்டாவது 'பெருமிதம்' இலக்கியப் பாடல் ஒன்றை ஒட்டி எழுந்தது. 'கொடுக்கக் குமணன் என்றொரு வள்ளல் இருக்கிறான். கிடைத்ததை நீ மற்றவருக்கு வாரி வழங்கு' என்று ஒரு புலவன் மனைவியிடம் சொல்கிறான்.

மற்ற எட்டு நாடகங்களும் சமூக நாடகங்கள். அவற்றுள் சகோதரபாசமும் சந்தேகமும்தலை நிமிர்ந்துநிற்கின்றன.

சகோதரி மீது கொண்ட அன்பினால் மனைவியை அலட்சியம் செய்தவன், மனைவி தன் சகோதரன் மீது செலுத்தும் அன்பை சகிக்காதவன் தன் சகோதரியின் கணவனால் சீர் திருத்தப் படுகிறான். இது 'சகோதரபாசம்,

அயலில் நடக்கும் கல்யாணப் பேச்சின்போது சந்தேகப் பட்டவர் தன்மகனையும் சந்தேகித்து தவறு செய்யப் போய் தன் குற்றம் உணர்ந்ததை 'சந்தேகம்' விளக்குகிறது.

சீதனத்தைப் பெரிதென நினைத்து தன் தமையன் மகளை அலட்சியம் செய்தபெண், மூத்தமகன் மனைவியின் போக்கால் மனம்மாறி இளையமகனுக்குத் தமையன் மகளைத் திருமணம் செய்து கொடுத்ததைச் 'சீதனத்திலும்' நெருங்கிப் பழகும் பெண்ணைத்தவறாய் அர்த்தம் பண்ணிக் கொண்டவனை 'கா(த)ல் முறிவிலும்' கறுப்புப் பெண்ணைக் காட்டக்கூடாதென்றவன் கையொடிந்தபின் அவளை மணப்பதை 'கறுப்பிலும்' பணமே பெரிது, அயல் தேவையில்லை யென்றவள் தன் கருத்து பிசகென்றுணர்வதை 'பெட்டகம் வாழ்க' விலும் புகழுக்காகப் பணத்தை வாரியிறைத்து சீரழிந்து, ஒருகமக்காரனிடம் பண்ணையையும், பணத்தையு,ம்மருமகளையும் பெறுபவ

ரை 'நல்லபாடத்திலும்' மகன் முதளாளியின் மகளைக் காதலிக்கப் போக முதலாளியின் மனைவியால் வேலை நீக்கப்படும் தொழிலாளியை 'அங்கவீனை நாடகத்திலும்' காணகின்றோம

தெரிந்த பழகிய பாத்திரங்கள் மட்டான கொச்சைப் பிரயோகம், புரிந்த பிரச்சனைகள் 'ஐயன்று' தெரிந்துதொகுத்தவை நல்லவை. வாசகருக்குப் பிடிக்கும்.

சிலவற்றில் நாடகத்திருப்பங்கள் அழுத்தமாய் விழவில்லை. சில காட்சிகளின் நீளம் நடிப்பதற்கு போதுமானதாயில்லை. இவை குறைகள்.

குட்டிநாடகங்கள் தயாரிப்போர் கையில் கட்டாயம் 'நாடகமாலை' மிளிரும்.

தேவன்-யாழ்ப்பாணம்

ராஜேஸ்வரிபவனம்,
பரமேஸ்வரக் கல்லூரிவீதி,
யாழ்ப்பாணம்.
1.6.62.

# என் உரை

இயலையும், இசையையும் தன்னகத்தேகொண்டு மிளிரும் நாடகத் தமிழின் பெருமையை நாடு நன்கறியும். பற்பலநூல் கற்றுணர்ந்த பண்டிதர்முதல் படித்தறியாப் பாமரர்வரை ஏத்திப் போற்றுவது நாடகம்; இன்பம் தருவது நாடகம்; வாழ்வுப்பயன் அருள்வது நாடகம். நாடு + அகம் என்னும் இரண்டு சொற்களும் சேர்ந்து நாடகம் என வந்ததுபோலும். நாட்டில் நடப்பவற்றைத் தன்பாற் பெற்றுப் படிப்போர்க்கும் பார்ப்போர்க்கும் மட்டில்லா இன்பத்தையும், நல்லறிவையும், சகரசத்தையும் அளிக்க வல்லனவாய் நாடகங்கள் அமைந்திருப்பது விரும்பத்தக்கதாகும். ஆனால் இன்று நாடகத்தமிழ் இருக்கும் நிலையை நினைக்கும்போது மனம் வெந்தணற் புழுப்போல் வேகாநிற்கின்றது! வியாபாரத்தை நோக்கமாகக்கொண்டு, மக்கள் பண்பாட்டையும், பணத்தையும் பாழடையச்செய்யும் சினிமாக்கலையுடன் நாடகக்கலை எப்படிப் போட்டியிடமுடியும்?

ஆசைபற்றி, என்மனத்தில் எழுந்த சில கருத்துக்களைக் கருக்களாகக்கொண்டு இந்நாடகங்களை எழுதியுள்ளேன். அறிஞர்கள் குற்றங் களைந்து குணங்களை ஏற்று இத்துறையில் மென்மேலும் முயற்சி செய்ய ஊக்குவார்கள் என நம்புகின்றேன். இத்துறையில் என்னை ஊக்குவித்த பிரபல நாடகாசிரியர் திரு. க, சொக்கலிங்கம் (சொக்கன்) தினகரனாசிரியர், விவேகி ஆசிரியர் மூவர்க்கும் யான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தொகுதியில் வரும் நாடகங்கள் எல்லாவற்றையும் கருத்தூன்ற வாசித்து, ஒரு சிறந்த முன்னுரையை எழுதியுதவிய அன்பர் திரு. இ. மகாதேவா (தேவன் - யாழ்ப்பாணம்) அவர்களுக்கும், சீதனம் என்ற நாடகத்தில் வரும் காட்சியொன்றை, கண்கவர் வகையில் முகப்புச் சித்திரமாக வரைந்தளித்த அன்பர் திரு. கே. இராசரத்தினம் (மேடம் ஆசிரியர், கிறீஸ்தவக் கல்லூரி அச்சுவேலி) அவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியைச் செலுத்துகின்றேன்.

இந் நாடகங்களை ஒரு தொகுப்புநூலாக வெளியிடலாமா? அன்று? என்று மனம் ஊசலாடிய எனக்கு ஊக்கம் ஊட்டி, வேண்டிய உதவிகள் புரிந்த ஆசிரியர்கள், வித்துவான் க. ஆறுமுகம், வி. கந்தசாமி கனக. செந்திநாதன், சி. சரவணபவன் B. A. ஆகியோர்க்கும்: நூலை வெளியிட முன்வந்த கந்தரோடை சனசமூக நிலைய உறுப்பினர்க்கும், அட்டைப்பட வேலையைப் பொறுப்பேற்றுச் செவ்வனே கூடிய விரைவிற் செய்தனுப்பிய கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியைச் சேர்ந்த திரு. T. S. கணேசலிங்கம் அவர்களுக்கும் என்ன கைம்மாறு செய்வதென்று தெரியாது திகைக்கின்றேன். அனைவர்க்கும் நன்றி.

இம்மாலையைச் சிறந்த முறையில் அச்சிட்டுதவிய கலாதேவி அச்சக அதிபருக்கும், அங்கு பணியாற்றும் அன்பர்களுக்கும் என் மனமனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

செந்தமிழ்ப்பற்றும், செழுங்கலை ஆர்வமும் மிக்க அன்பர்கள் நாடகமாலைக்கு ஆதரவளிப்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

வணக்கம்

அம்பனை, சுன்னாகம்.
1-6-62

ஐ. இராசரத்தினம்
(ஐயன்னா)

## உள்ளே ...


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மலர்ந்தது தவம் | ... | 1. |
| 2. | பெருமிதம் | (விவேகி) | 13. |
| 3. | சீதனம் | (தினகரன்) | 20. |
| 4 | கா(த)ல் முறிவு | (விவேகி) | 30. |
| 5. | கறுப்பு | ... | 36. |
| 6. | சகோதரபாசம | ... | 48. |
| 7. | பெட்டகம் வாழ்க | (விவேகி) | 57. |
| 8. | சந்தேகம் | (தினகரன்) | 63. |
| 9. | நல்லபாடம் | ... | 73. |
| 10. | அங்கவீனை நாடகம் | (விவேகி) | 91. |

# மலர்ந்தது தவம்

## கதாபாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| மிருகண்டர்: | (மிருக) | ... | ஒருமுனிவர். |
| மருத்துவதி: | (மருத்) | ... | முனிவரின் மனைவி |
| மார்க்கண்டேயர்: | (மார்க்) | ... | முனிவரின் மகன். |
| ஆசையன்: | (ஆசை) | ... | அவ்வூர் அரசன். |
| அறிவன்: | ( அறி ) | ... | ஆசையன் அமைச்சன் |
| மோகினி: | ( மோ ) | ... | ஆசையன் மனைவி. |
| வஞ்சன்: | ( வஞ் ) | ... | ஆசையன் தளபதி. |

[சீடர்கள் - தூதுவர்]

# மலர்ந்தது தவம்!

[மார்க்கண்டேயர் தமது ஆயுட்காலத்தைக் கடவுளிடத்தில் வரம் பெற்று மாற்றியமைக்கச் சென்றுவிட்டார். தாயார் வீட்டில் கண்ணீரும் கம்பலையுமாக அழுது கொண்டிருக்கின்றார். தவம் செய்யச் சென்ற மகன் திரும்பி வெற்றியுடன் வருவானா? அன்று என்ற ஏக்கம். இடையிடையே வெற்றியுடன் திரும்பி வருவான் என்ற நம்பிக்கை. வழிமேல் விழிவைத்த வண்ணம் இருக்கின்றார். தூரத்திலே காணும் சிறுவர்களைத் தன் மகன் என்று இன்பமடைந்து ஏமாற்றம் அடைந்ததும் உண்டு. பலமுறை ஏமாற்றம், உண்மை மகன் வந்த போதும் சந்தேகம் உண்டாக்கிற்று. கண்களைப் பலமுறை கைகளால் துடைத்துத் துடைத்துப் பார்த்தாள். எல்லையில்லா ஆனந்தமடைந்தாள். இன்பக்கடலுள் மூழ்கினாள். இருகைகளையும் நீட்டிய வண்ணம் நிற்கின்றாள். 'தாயே; என்று அழைத்துக்கொண்டு வந்தார். ஒருவரை ஒருவர் கட்டித் தழுவுகின்றனர். இரு நிமிடங்களுக்கு மேல் அமைதி மருத்துவதியின் கண்களில் இருந்து ஆனந்தக்கண்ணீர் வடிகின்றது]

## காட்சி 1

இடம்: மிருகண்டுமுனிவரின் ஆச்சிரமம் — நேரம் - காலை

மருத்: என்னருமை மகனே! நீ பசியுடன் வந்திருக்கின்றாய். பாலும் பழமும் கொண்டுவரட்டுமா?

மார்க்: தாயே! எனக்கு இனிமேல் ஒன்றும் வேண்டாம். தந்தையார் கற்பித்த பிரகாரம் தவம் செய்தேன். திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளின் திருவருள் என்னும் பாலைப்பருகினேன். எனக்கு ஆவின்பால் எதற்கு?

மருத்: தந்தையின் கட்டளைப்படி நடப்பவர்களுக்கு இந்த உலகத்தில் என்னதான் கிடையாது?

அஃது எவ்வாறாயினும் ஆகுக. உனது ஆயுட்காலம் எப்பொழுதோ நீங்கிவிட்டது. எவ்வாறு உயிருடன் மீண்டாய்?

மார்க்: தாயே கேளுங்கள்.

மருத்: கண்ணே! சொல், சொல்.

மார்க்: தங்கள் அருமை மகனாய் அவதரித்த சிறியேன். ஐம்புலன்களையும் அடக்கி ஊண், உறக்கமின்றி, காற்றையே உண்டு கறைமிடற்றிறைவனை கருத்தில் கொண்டு, அல்லும் பகலும் அவன் நாமத்தை உச்சரித்தேன். ஒரு நாள் இருவர் என் முன் வந்து நின்றார்கள். அவர்களைக் கண்மூடி இருந்தும் நான் கண்டுவிட்டேன். எம் பெருமான் திருநாமத்தை முன்

னிலும் விரைவாக உச்சரித்தேன். அவர்கள், "இவனிடம் எங்களுடைய பயறு அவிபாது" என்று சொல்லி விரைந்து சென்றனர். அவர்கள் வரவும், செலவும், பேச்சும் ஊக்கத் தைக் கொடுத்தன.

மருத்: தம்பி, நீ சொல்வது எனக்குப் புதினமாக விருக்கின்றது. எண்ணில் காலம் இன்னல் பல அநுபவித்துத் தவம்செய் வோர்க்கே எட்டாத ஆற்றல் உனக்குக் கிடைத்துவிட்டதே.

மார்க்:- ஆம் தாயே, சற்று நேரத்தில் ஒருவர் எருமை வாகனத்தில் வந்தார். அப்படியே ஒருவர் வந்து உயிர்களைக் கொண்டு செல்வார் என்று அறம் புகன்ற, ஆன்றவிந்தடங்கிய சான் றோர் நூல்களில் வாசித்திருக்கிறேன். நடுங்கிற்று. நாக்குழறிற்று

மருத்: தம்பி நீ! அக்காலை என்ன செய்தாய்?

மார்க்: இறைவன் திருநாமத்தை இடையறுது உச்சரித்தேன். அவர், "நான் யார் தெரியுமா?" என்று கேட்டார். மௌனமாகக் கடவுள் உருவத்தைக் கட்டிப்பிடித்தேன். அவர் மரணக் கயிற்றை வீசினர். அது என் மேலும் கடவுள் உருவத்திலும் விழுந்த உணர்ச்சி. சிறிது நேரத்தில் ஒரு பெரிய சத்தம். சத்தத்தினால் திடுக் குற்றேன். கண்விழித்தேன். என் முன்னிலையில் ஆலமுண்ட நீல கண்டன் நிற்பதையும், மலைபோல் ஒருவர் நிலத்தில் கிடப்பதை யும் கண்டேன். அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய் இருக் கும் இறைவனை வணங்கினேன். அவர் "நீ என்றும் பதினறு வயதாய் இருப்பாய்" என்றுதிருவாய் மலர்ந்தருளினர்.

மருத்: நீ சொல்வதைப் பார்த்தால் எமதர்மராசன் இறந்து விட்டான் போலல்லவா தோன்றுகின்றது. இனிமேல் உலகில் ஒருவரும் இறக்கமாட்டார்கள்.

மார்க்: தாயே! சொற்ப நேரத்தில் ஒருபெண்குதிக்கால் நிலத்தில்படா மல்ஓடிவந்து கடவுளின் காலடியில் விழுந்தாள். கதறினள். ஆல முண்ட நீலகண்டன் காரணம் வினவப் பெண்மணி "உலகில் யாவரும் பொறுமைக்கு உதாரணமாக என்னைக் கூறுகின்றனர் கள். உலகிலே உயிர்கள் புற்றீசல் போலப் பெருகுகின்றன. எனது பொறுமையைச் சோதிக்காதீர்கள். அடியேன் என் செய் வேன். சுவாமி எமதர்மராசனை எழுப்பிவிடுங்கள்" என்று காலினைப் பற்றிக்கதறியழுதாள். கடவுள் எமதர்மராசனை எழுப்பி "நீ இனிமேல் என் பக்தர்களில் பாசக்கயிற்றை வீசாதே" என்று மறைந்தருளினர்.

மருத்: தம்பி! நீ இவ்வளவு காலமும் எங்கிருந்தாய்? தந்தையாரும் வருகின்றனர்.

மார்க்: தாயே! தந்தையார்க்கு ஆவனசெய். தந்தையின் போதனை யல்லவா எனக்குப் பெருமையைத் தந்தது. யான் சிறிது நேரம் தனிமையிற் தியானிக்க விரும்புகின்றேன்.

— ❁ —

## காட்சி 2.

இடம்: முனிவர் ஆச்சிரமம் நேரம்: நண்பகல்

(மிருகண்டு முனிவரும் மருத்துவதியும் காய்கனி உண்டனர். பின் முனிவர் ஞானநூல் ஏடொன்றைக் கையில் எடுத்தார். பக்கத்தில் நின்ற மனைவியைக் கையமர்த்தினர்.)

மருத்: நாதா! தங்களுடன் சமஞக இருப்பது பெண்களுக்கு அழகல்ல. அடியேன் நிற்கின்றேன்.

மிருக: ஏதோ சொல்ல விரும்புகின்ருய்போல் இருக்கிறதே.

மருத்: ஆம் அன்பரே! எமது அருமைப்புதல்வன் தவம்செய்து மரணத்தைவென்று வந்திருக்கின்ருன்.

மிருக: பெண்ணே உனது மகனின் பெருமை உனக்கு விளங்கவில்லை. எனக்கு மகன் சொன்னவையெல்லாம் தெரியும். மிகுதியையும் அறியும் ஆவல் உண்டு. முன்னேர்கள் எதற்காக உலக இன்பம் எல்லாவற்றையும் வெறுத்துத் தவம் செய்தார்கள்? முன்னேர் சொன்னவற்றை நம்பாதவர்களுக்கு நம்ப வழிவகுத்துவிட்டான் உன்மகன். தவம்செய்து பெற்றபிள்ளை சாமானியமாகவிருக்குமா? நோற்றலினுல் கூற்றம் குதித்தலும் கைகூடும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே இருக்கின்ருன். நான் நூறுவயதுப்பிள்ளை வேண்டாக் காரணம் இதுதான். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? அவனை இங்கேயழைப்பாய்.

(தாய் மகனை அழைத்தல். மகன் வரல்.)

மிருக: மகனே! இப்படி இரு. நீ கடவுளைக் கண்டாயா?

மார்க்: ஆம் தந்தையே. உலக இன்பம் எம்மட்டு. அப்பெருமானைப் பார்க்கப் பார்க்கப் பசிதோன்ருது.

மருத்: நாதா! நீங்கள் திரிகாலமும் உணர்ந்தவர்கள். உங்கள் தவத்தின் பெருமையைப் பெயரே பறைசாற்றுகின்றது. தம்பி நீ மிதியைச் சொல். கடவுளைக் கண்டவர் சொல்லவே களிப்பைக் கொடுக்கும்.

மார்க்: ஆனந்தமூர்த்தியும், பூமாதேவியும் மறைந்தபின் இங்கே வரப் புறப்பட்டேன். எமதர்மராசா என்பின்னல் வந்துநின்ருர். யான் "தாங்கள் இருப்பிடம் போகவில்லையா?" என்று கேட்டேன். "உன்னைவிட்டுப்போக மனமில்லை" என்ருர். பயந்தேன். அவர் "தம்பி பயப்படாதே உன்னை எனது வீட்டிற்கு அழைத்துச்செல்ல விரும்புகின்றேன். என் பிழையைப் பொறுத்தருள்.

பிள்ளைப்பெற்றால் உன்னைப்போலல்லவா பெறவேண்டும்'' என்று இரு கன்னங்களிலும் முத்தம் கொடுத்துக் கெஞ்சிநின்றார். பெரியோர் சொல்லை அவமதிப்பதாகாது என்று உடன் சென்றேன். வேண்டிய உபசாரம் செய்து மனைவிக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

மருத்: தம்பி நீ எமலோகமும் சென்று வருகின்றாயா! அங்கு என்னென்ன கண்டாய்?

மார்க்: ஆம் அன்னையே! அவரும் மனைவியுமாக இறந்த உயிர்களின் இருப்பிடம் அழைத்துச்சென்றார்கள். பெற்றதாயைப் பேணாதவர்கள், பொய்யாமை மேற்கொள்ளாதவர்கள், பஞ்ச பாதகங்களைச் செய்தவர்கள், ஆசானை அவமதித்தவர்கள், கடவுளை நிந்தித்தவர்கள் படும் கஷ்டங்களைக் கண்ணாரக் கண்டேன். இவற்றையெல்லாம் ஏட்டில் எழுதி நாட்டிற் பரப்ப யோசனை.

மருத்: நல்ல யோசனை. நாடு முன்னேறும். நீபெற்ற இன்பம் வையகம்பெற வழிசெய்.

மார்க்: ஆம் தாயே!

மிருக: இருவரும் இந்த ஏட்டை வாசியுங்கள். திரும்பிவந்து வினைக்கள் வினவுவேன். அட்சரம் தவறாமல் பதில் சொல்லவேண்டும்.

மருத்<br>மார்க் } ஆம்.

(மருத்துவதி கணவனை வழியனுப்புதல்)

## காட்சி 3.

இடம்: ஆலமரத்தடி. நேரம்: மாலை

(சீடர்கள் மிருகண்டு முனிவர்க்காகக் காத்திருத்தல்)

சீ—ஒ: எங்கள் குருநாதரை இவ்வளவு நேரமாயும் காணவில்லையே?

சீ—ம: தோழர்களே! கேளுங்கள் விஷயத்தை. நாமும் எமது தாய் தந்தையர்களுக்குப் பிள்ளையாகப் பிறந்தோமே! குருநாதரின் மகன் மரணத்தைவென்று மார்க்கம் கண்டோன் எனப் பெயரும் பெற்றுவிட்டான். மகனின் தவமேன்மையை நினைத்து ஆனந்தக் கடலில் மூழ்கியுள்ளார் குருநாதர். மத்தியானம் கேள்விப்பட்டேன்.

சீ—இ: குருநாதர் போதனைப்படி நடந்துதானே இந்த ஆற்றல் பெற்றான்.

சீ—வே: என்னால் இதை நம்பமுடியவில்லை. போகப்போகத் தெரியும். குருநாதர் வருகின்றார். (எல்லோரும் எழுந்து வணங்கல்

மிருகண்டர் எல்லோரையும் அமரும்படி கைகாட்டித் தானும் அமர்தல் )

மிருக: சீடர்களே! நேற்றைய பாடத்தில் ஏதாவது ஆசங்கைகள் உண்டா ?

சீ—ஒ: ஆம் தேவரீர் கடவுளைக் கண்டவர்கள் ஒருவரும் இப்போது இல்லையா ? கண்ணின் முன்னல் காட்டினற்ருன் நம்புவோம் என்று நண்பர்கள் கூறுகின்ருர்கள்.

சீ-வே-ஒ: ஏன் இல்லை? எமது குருநாதனின் மகன் இருக்கின்ருரே. அவர் கடவுளைக்கண்டு, எமனை வென்று சாகாவரம் பெற்று வந்துள்ளாரே! இது போதாதா ?

மிருக: ஆம் இருக்கின்ருர்கள். கடவுளைக் கண்டவன் என் குமாரன் இல்லை, அவன் இறைவனின் திருக்குமாரன். உலக மகன். சீடர்களே! இந்தக்கேள்வி என் காதிலும் பலமுறை விழுந்திருக்கிறது. கடவுளைக் காண்பது இலகுவான காரியம் அல்ல. கடவுள் பாலில் நெய்போலவும், விறகிற் தீ போலவும் எங்கும் வியாபித்திருக்கின்ருர். பாலில் நெய் இருப்பதையும், விறகில் தீ இருப்பதையும் நாம் கண்ணுற் காணமுடியாது. சொன்னலும் ஒருவரும் நம்பமாட்டார்கள். நாம் நெய்பெறவேண்டுமானல் பாலை நன்ருகக் காய்ச்சவேண்டும்; பின் மத்திட்டுக் கடையவேண்டும். அப்போது நெய்தோன்றும். மடி மிகுத்தவர் முடிவிலா இறைவனைக் காணமாட்டார்கள். கடவுளைக் காணவிரும்புகின்றவர்கள் வைராக்கியம் என்னும் கோல்நட்டு அறிவாகிய கயிற்றினல் கடைந்தால் கடவுளாகிய வெண்ணெய் புலப்படும். கேள்வி கேட்கின்றவர்கள் பிறக்கும்போது தந்தையை யாரென்று கண்ணுற் கண்டார்களா ? அனுமானத்தாலும் தாயின் சொற்படியுமே தந்தையை இன்னரென்று அறிகின்றனர்; நம்புகின்றனர். அது போலக் கடவுள் ஒருவர் உளரென்று முனிவரும் சான்ருேரும் சொல்கின்றனர். நாம் நம்பவேண்டியதே. அவனைக்காண அவனை அடைய நாம் முயற்சி செய்யவேண்டும். பக்திவலையிற் படுபவன் அவன். நாளையதினம் இறைவனை நேரேகண்ட அப்பெருந்தகை இவண் எழுந்தருளுவார். யாவற்றையும் அவரிடம் கேட்டறிமின் !

(சீடர் தமக்குள்)

சீ—ஒ: அன்ப! இறைவனைக் கண்டமையால் தன்மகனைத் தன்னினும் மேம்பட்டவராக மதிக்கின்ருர் குரு. இதுவன்ருே பெருந்தன்மை !

சீ-வே-ஒ: குருநாதா! எமது இறைவனுக்கு அர்த்தநாரீசுவரன் என்ற பெயர் எதனல் ஏற்பட்டது ?

மிருக: சீடர்களே! அர்த்தம் + நாரி + ஈசுவரன் என்ற மூன்று சொற்களும் அர்த்தநாரீசுவரன் என வந்தது. அர்த்தம் = பாதி; நாரி = பெண்; ஈசுவரன் = கடவுள். பாதி பெண் வடிவு பொருந்தியமையால் இப்பெயரேற்பட்டது.

சீ-ஒ: நமது இறைவன் உரு பாதி பெண்வடிவாக அமைந்த காரணம் என்ன என்று அருளிச் செய்யவேண்டும் குருநாதா.

மிருக; இதுவும் ஒரு நல்ல கேள்வி. இப்படியே பல கேள்விகள் மக்களிடையே எழுந்துள்ளன. இவற்றிற்குத் தக்க பதில் கிடையாமையால் மக்கள் கடவுள் நம்பிக்கை அற்றவர்களாக மாறுகின்றார்கள். கேளுங்கள் புனிதப்பிறப்பாய மனிதப்பிறவி எடுத்தவர்கள் ஆண் பெண் என இருபகுப்பாக உளர். ஓர் ஆண்மகன் தன்னிடம் உள்ள குறைகளை, தனக்குத் தேவையானவற்றை ஒளிப்பு மறைப்பின்றி ஓர் ஆண்மகனிடமே கூறுவான். அதே போல் ஒரு பெண்மகளும் பெண்மகளிடமே கூறுவாள். இது உலக இயற்கை. இருபாலினுள் ஒருபாலாக உள்ள உயிர் தனது குறையைத் தனக்கு வேண்டியதை (வேண்டுவார் வேண்டியன ஈயவல்லவனாகிய கடவுளிடம்) கேட்டுப் பெறவேண்டும் என்னும் பெருங்கருணையினால் கடவுள் இருபாலும் கலந்த ஒருருவாகக் காட்சி அளிக்கின்றார்.

சீ-வே-ஒ: தேவரீர்! "அவனன்றி ஓர் அணுவும் அசையாது" ஆகவே ஒருவர் செய்யும் தீயசெயல்களுக்கும் கடவுள் பொறுப்பாளியாக உள்ளார் அல்லவா?

மிருக. மனிதனிடம் பகுத்தறிவு உண்டு. மனிதன் தனது தேவைகளுக்குப் பல ஆயுதங்களை உபயோகிக்கின்றான். ஆயுதங்களினால் பிறவுயிர்களுக்குத் தீமையில்லாத காரியங்களும் செய்யலாம். தீமையான காரியங்களும் செய்யலாம். தீமையின்மை, தீமை என்பனவற்றிற்கு ஆயுதங்கள் பொறுப்பல்ல. அப்படிப் பொறுப்பாக எண்ணுவது அறியாமை. இதுபோல மக்கள் செயல்களுக்குக் கடவுள் பொறுப்பாளி அல்லர். இதுபோல யாவரும் சந்தேக விபரீதங்களைக்கேட்டுத் தெளிந்துகொள்ள வேண்டும். யாவரும் சென்று வாருங்கள்.

சீடர்கள் யாவரும்: வணக்கம் (போதல்)

—❁—

## காட்சி 4.

இடம்: ஆசையன் அரண்மனை காலம்: காலை

(ஆசையன் என்னும் அவ்வூரரசனிடம் வஞ்சன் என்னும் தளபதி விரைந்து வருதல்)

ஆசை: தளபதி! அவசரமாக ஓடிவருவதன் காரணம் என்ன? நாட்டிற் குழப்பம் ஏதாவது நிகழ்ந்ததா? கள்ளர்கள் நாட்டிற் புகுந்து கொள்ளை அடிக்கின்றாரா? வனவிலங்குகள் மக்களை வதைக்கின்றனவா? கூறுதி; என் நெஞ்சம் பதைக்கின்றதே!

வஞ்: அரசே! பதட்டம் ஒழிக. அவசரப்படாதீர்கள், நல்லதொரு

செய்தி. நம் நாட்டின் வட அந்தத்தில் இருக்கும் சம்சாரத் துறவி மகன் எமனை வென்று சாகாவரம் பெற்று வந்துவிட்டானும். இச் செய்தியைத் தங்களுக்கு அறிவிக்க ஓடோடியும் வந்தேன்.

ஆசை: அதற்கு என்ன இப்போது வந்து விட்டது. அதனால் நமக்கு. என்ன பயன்?

வஞ்: அரசே! நமது படையில் போர் வீரர் மிகச் சொற்பம். அத் துறவியையும் நம்பக்கம் வைத்திருந்தால் நமக்கு நல்லது. மாற்றரசர் நாடுகளைப் பிடித்து ஏகசக்கரவர்த்தியாக விளங்கலாம் எவ் யுத்தத்திலும் எமதர்மராசன் நம் பக்கம் திரும்பமாட்டான்.

ஆசை: சபாஷ் தளபதி! சபாஷ். நீயல்லவா உண்மையான அரசபற்றுள்ளவன். இதோ இருக்கும் பரிசைப் பெற்றுக்கொள். அதற்கான ஏற்பாடுகளைச் செய்.

வஞ்: அரசே! தாங்கள் காலால் இட்டதைத் தலையாற் செய்யக் காத்திருக்கின்றேன். இடுங்கள் உத்தரவு.

(மந்திரியாய அறிவன் வரல்)

ஆசை: மந்திரியாரே வருக!

அறி: அரசே! வணக்கம். என்றுமில்லா ஆனந்தம் அகத்தில் இருப்பதாக முகம் சொல்கின்றதே.

ஆசை: ஆம் மந்திரி. நான் இனி அகில உலகத்தையும் அடக்கி ஆளும் ஏகசக்ரவர்த்தி.

அறி: ஆனந்தத்தினல் விஷயத்தை விளம்பாமல் வீணே ஆனந்தம் கொள்கின்றீர்கள்.

ஆசை: மந்திரி! நான் வீணே ஆனந்தம் கொள்ளவில்லை. மிருகண்டுமுனிவரின் மகன் இயமனையும் வென்று சாகாவரம் பெற்று வந்து விட்டானும். அவனை நம்முடன் வைத்திருந்தால் உலகமே நமது கைக்குள்ளாகும். தளபதியின் அசைக்க முடியாத நம்பிக்கை இது. நானும் அதையே விரும்புகின்றேன்.

அறி: அரசே! எண்ணித் துணிக கருமம். துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு. அவர்கள் எமது இச்சைகளைப் பூர்த்தி செய்யும் இளிச்சவாயர்கள் அல்லர். அற்ப சலுகைகள், அரச பதவி முதலியவைகளை விரும்பார்கள். "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் வீரம் நிறைந்தவர்கள். பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்கநெறி நின்றவர்கள். அவர்கள் இதற்கு உடன்படார்கள்.

ஆசை: (கோபத்துடன்) மந்திரி! நான் ஏகசக்கரவர்த்தியாவதை நீ விரும்பவில்லையா?

அறி: அரசே! ஆசை உங்களை மோசம் செய்யப் போகின்றது. அவர்கள் குணம் எனும் குன்றேறி நின்றவர்கள். பற்றற்றவர்கள். பற்றற்றான் பற்றினைப் பற்றியவர்கள். ஆன்மவீரம் நிறைந்தவர்கள். அவர்களுடன் தொந்தரவுக்குப் போகாதீர்கள்.

ஆசை: தளபதி சேவகர்களை விட்டுஅவர்களை அழைப்பிப்பாய்.

அறி: அரசே! ஆபத்து. எச்சரிக்கை. அடியேன் இன்றுடன் எனது பதவியை விட்டு விலகுகின்றேன். ஆசை அறிவை மறைக்கின்கின்றது. வருகின்றேன்.

ஆசை. போய் வாருங்கள். நீயே மந்திரியும்.

வஞ்: அரசே! அஞ்சற்க. இரண்டும் நானே பார்க்கின்றேன், இப்பொழுது நானே போய் வருகின்றேன்.

ஆசை: வெற்றியுடன் திரும்பிவா.

—❀—

## காட்சி 5.

இடம்:- மிருகண்டு முனிவரின் ஆச்சிரமம் — காலம்:- மாலை

[தளபதி விரைந்து சென்றான். தங்கள் நாட்டில் உள்ள அத்தனை பேரும் முனிபுங்கவரின் முற்றத்தில் இருப்பதைக் கண்டான். பெண்கள் ஒருபுறம். ஆண்கள் ஒருபுறம். சிறு பிள்ளைகள் ஒருபுறம் மிருகண்டு முனிவரின் பக்கலில் இளமுனி அகமும் முகமும் மலர வீற்றிருக்கின்றான்.]

கூட்டத்தில் உள்ள ஒருவன்:- முனி புங்கவ! தங்கள் அருமைத் திருக்குமாரன் இறவாப் பேரின்பமுற்றான் என்பதைக் கேட்டு நாம் அகமிக மகிழ்கின்றோம். இங்குள்ள அனைவரும் தங்கள் குமரன் அடிச்சுவட்டைப் பின்பற்றி எல்லையில்லாப் பேரானந்தம் பெற விரும்புகின்றோம்.

[தளபதி மந்திரியின் பக்கலில் உட்காரல்]

மிரு: மெய்யன்பர்களே! தான் எவ்வாறு மரணத்தை வென்றான் என்பதை உங்களுக்கு மகன் விளக்கமாகக் கூறுவான். உங்கள் ஆசை எனக்கு இன்பத்தைக் கொடுக்கின்றது. யான் வெளியே ஆவசிய அலுவலாகப் போகின்றேன்.

[போதல்]

ஒரு: (எழுந்து) அறிவும் ஆற்றலும் மிக்க கொஞ்சு மொழிக் குதலைவாய் மைந்தனே! அடியேங்களுக்கு உண்மைப் பொருளை விளக்கியருள வேண்டும்.

மார்க்: தாய்மார்களே! தந்தைமார்களே! சகோதரர்களே! கடவுள் இல்லை; எல்லாம் இயற்கையின் படி நடக்கின்றது என்று பலர் நினைக்கின்றனர். உலகம் தோன்றி நிலை பெற்று அழிவுறுகின்றது. அளப்பரிய ஆகாயத்தில் விளப்பரிய திங்களையும் ஞாயிற்றையும் இயக்குவதற்கு ஒரு பொருள் வேண்டும். ஒரு தொழில் நடைபெறக் கருத்தா ஒருவர் வேண்டும். கருத்தா இன்றேல் கருமம் இல்லை. ஆகவே உலகம், தோன்றி, நிலைபெற்று அழிவுறக் கருத்தா ஒருவர் வேண்டும். அவர்தாம் கடவுள். கடவுள் இல்லையென்று பலர் வாதாடுகிறார்கள். அவர்கள் தமது தவறை உணரும் காலம் ஒல்லையில் வரும். நாம் எல்லோரும் அவரின் அடிமைகள். எங்கள் நல்லறிவை மறைத்து உண்மையறிவினால் உண்மைப் பொருளை அறியவிடாமல் தடைசெய்யும் பொருள்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆசை பிரதானமானது. ஆசைகள் அல்லல் பலவற்றையும் கொடுக்கும்: அறிவின் துணையினால் ஆசைகளை வெல்லவேண்டும். கோவணம் ஒன்றை இச்சித்து சொல்லொணா அல்லல் பல அனுபவித்தார் ஒருதுறவி யென்று யாவரும் அறிந்திருப்பீர்கள். நிலையில்லாப் பொருள்களில் பற்றுக் கொண்டு நிலையான கடவுளை மறந்து அல்லல் உறுவதிலும் பிறப்பைக் கொடுக்கும் ஆசைகளை நீக்கிப் பேரின்பத்தையடைய, கடவுளின் இணையடிகளைச் சரணடைய வேண்டும். இவ்வின்பமே பேரின்பம். ஆசைகள் சாமானிய மானவை அல்ல. [சபையுள்]

அறி: தளபதியாரே! தங்கள் அபிப்பிராயம் யாது?

வஞ்: அடியேன் தங்கள் பெருமையை அறியாது இருந்தேன். அரசனுக்குத் தகாதன கூறினேன். இன்றுடன் அரசபதவி எனக்கு வேண்டாம். யான் இங்குதான் என்காலத்தைக் கழிக்கப்போகின்றேன்.

அறி: நன்று நன்று.

மார்க்: (தொடர்ச்சி) கட்டழகு மிக்க கன்னி ஒருத்தியைக் கண்டவுடன் கருத்தழிகின்றான் ஒருவன். மரமாகவே மாறுகின்றான். சில விநாடி ஆசை மனிதனை மரமாக்குகின்றது. ஆசைகளே பிறவிக்குக் காரணம் என்பதை நாளைய தினம் விளக்குகின்றேன்.

## காட்சி. 6

இடம்: ஆசையன் அரண்மனை. காலம்: காலை

[தளபதி வராமை கண்டு கோபங் கொண்டு அங்கும் இங்கும் அரசன் உலாவிக் கொண்டிருத்தல்]

மோ: நாதா! தாங்கள் இற்றைவரையில்லாத புது மாதிரியாக இருக்கின்றீர்களே.

ஆசை: தளபதியை ஓர் விடயமாக அனுப்பினேன். இன்னும் வரவில்லையே?

மோ: சென்றவர் திரும்பி வருவர்தானே. அதற்காக ஏன் கோபிக்க வேண்டும். என்ன விடயமாக அனுப்பினீர்கள்?

ஆசை: அகில உலகத்திற்கும் உன்னை அரசியாக்க எண்ணித் தளபதியை அனுப்பினேன்.

மோ: தங்கள் மனைவியாக வருவதற்கு நான் என்ன தவம் செய்தேனோ? [தூதுவன் ஒருவன் அவசரமாக ஓடி வருகின்றான்]

ஆசை: என்ன சமாச்சாரம் தளபதியெங்கே?

தூது: எமது ஊரில் உள்ளவர்கள் அத்தனை பேரும் முனிவர் ஆச்சிரமத்தில் எள் போட்டால் எண்ணெய் ஆகும் அளவிற் கூடியுள்ளனர்.

ஆசை: தளபதியைக் கண்டாயா?

தூது: தளபதியும் அங்கே இருந்து உபதேசம் கேட்பதாகச் சொன்னார்கள்.

ஆசை: மடையன் சென்ற விடயத்தைக் கவனியாமல் சிந்தை மாறி விட்டான். அவனைச் சித்திரவதை செய்தாற்றான் எனது கோபந் தணியும். எனது ஆசையைக் கிளப்பிவிட்டு அங்கே போய் விடுதி விட்டு விட்டான். தூதுவா! நாம் போய் நேரே கவனித்து வருவோம்.

மோ: விரைவில் திரும்பி வாருங்கள்.

ஆசை: நீ பயப்படாதே. விரைவில் வெற்றியுடன் திரும்பி வருவேன்.

மோ: சென்று வாருங்கள்.

## காட்சி 7.

இடம்: முனிவர் ஆச்சிரமம் நேரம்: மத்தியானம்

[முனிவர் வெளியே சென்றுவிட்டார். தாயும் தனையனும் கதைத்துக் கொண்டு இருத்தல். தூதுவன் செல்லல்]

தூது: தாயே! தங்களைக் காண அரசர் வந்திருக்கின்றார்.

மருத்: எங்கே நிற்கின்றார்?

தூது: ஆச்சிரம வாயிலில் குதிரையில் இருக்கின்றார்.

மார்க்: வா அம்மா போய்ப் பார்ப்போம்.

[இருவரும் போதல்]

மருத்: அரசே! வருக வந்து அமருங்கள்.

[போய் இருத்தல்]

தாங்கள் இக் குடிசைக்கு எழுந்தருளிவந்த காரணம் யாது?

அர: தங்கள் மகன் மரணத்தையே வென்று விட்டானும்?

மருத்: ஆம் அரசே! அவன் பற்றைத் துறந்தான். தவம் செய்தான் பதியைக்கண்டான். மரணத்தை வென்றான்.

ஆசை: அகில உலகத்தை கட்டி ஆளும் ஆசை உண்டு. அவ்வாசையைப் பூர்த்திசெய்யத் தங்கள் தனையனின் உதவியை நாடிவந்தேன்.

மருத்: தம்பி அரசர் ஏதோ உதவியை நாடிவந்திருக்கிறார் ஆவன சொல்வாய்.

மார்க்: அரசே! அகில உலகத்தையும் என் மூலம் ஆளநினைக்கின்றீர்கள். அதனல் யாது பயன்? அரச பதவி. செல்வம் இவையெல்லாம் நிலையானவையல்ல. உலகில் உள்ள பொருள்கள் அத்தனையும் கடவுளுக்குச் சொந்தம். ஒரு பொருளையும் இறக்கும் போதும் நாம் கொண்டுபோகப் போவதில்லை. மற்று நாட்டில் உள்ளவர்களைக் கொலை செய்து பெறும் பயன் யாது? இவற்றல் நாம் அடையும் இன்பம் யாது? இவற்றல் பெறும் இன்பத்தையும் நெடிது அனுபவிக்க முடியாது. நிலையான இன்பத்தைப் பெறுவதே சிறந்த இன்பம். அகில உலகத்தையும் கட்டி ஆளும் ஆற்றல் அன்பிற்கு உண்டு. அன்பிற்கு அடிபணியாத உயிர்கள் உலகத்தில் இல்லை.

ஆசை: இற்றைநாள் வரையும் ஆசைகளின் வயப்பட்டு அடியேன் மோசமான காரியங்கள் பலவற்றைச் செய்துள்ளேன். எனது

கையினுல், ஏவலினுல் கொலையுண்ட உயிர்கள் எண்ணிறந்தன. ஆசைகள் மோசம் செய்யும் என்று அறிவு புகட்டிய மந்திரியை அவமதித்தேன். நினைக்க மனம் வேதனை அடைகின்றது. செய்த பாவம்களுக்குக் கழுவாயில்லையா?

மார்க்: உண்டு அரசே, உண்டு. உயிர்களிடத்து அன்பு கொண்டு அவைகளுக்கு வேண்டுவன செய்தால் பாவங்கள் மன்னிக்கப் படும்.

ஆசை: அதற்குரிய மார்க்கமென்ன?

மார்க்: அன்னக்காவடி எடுப்போர்க்கு அன்னசத்திரம் வைத்து ஆதரிக்கலாம். எண்ணில் கலைக்கூடம் எழுப்பி எழுத்தறியா ஏழைகளுக்கு அறிவுத் தானம் வழங்கலாம். இன்னும் பலவுள.

[மிருகண்டரும் அறிவனும் வரல்]

ஆசை: பிரபு என்னை ஆசீர்வதித்தருளும். மந்திரியாரே! வருக வாழ்க. அதிகார தோரணையில் அழைக்கவில்லை. அன்பால் அழைக்கின்றேன். எல்லாப் பொருள்களையும் அன்னதானமும் அறிவுத் தானமும் செய்க. நான் அறியாமற் செய்த பிழையை மன்னிக்குக.

அறி: கடவுள் மன்னிப்பார். இதோ சென்று யாவும் செய்கின்றேன்.

ஆசை: நன்று நன்று இன்றே அடியேன் உய்ந்தேன். நாடும் உய்ந்தது.

மிரு: மங்களம் உண்டாகட்டும்:

# பெருமிதம்

## கதா பாத்திரங்கள்

இளவெளிமான் (இள) ... ஓர் அரசன்
மதிவாணன் (மதி) ... தலைமை அமைச்சர்
பெருஞ்சித்திரனார் (பெரு) ... தமிழ்ப்புலவர்
தேன்மொழி (தேன்) ... புலவர் மனைவி
(குழந்தை, சேவகன், உதவி அமைச்சன்)

## காட்சி 1

இடம்: பெருஞ்சித்திரனார் குடிசை காலம்: மாலை.
(தேன்மொழி கணவன் வரவை எதிர்பார்த்திருத்தல் புலவர் வரல்)

பெரு: நங்காய்!

தேன்: வழிநடந்திளைத்தீர்கள் போலும். இதை அருந்துங்கள்.

பெரு: தேவ அமிர்தம் போலல்லவா இருக்கிறது!

தேன்: நன்று சொன்னீர்கள். வள்ளுவரே அமிர்தம் என்று மழையைப் புகழ்ந்திருக்கின்றார். இதன் அருமையை 'உணர்ந்தல்லவா ஆண்டவனும் ¾ பகுதி நீராகப் படைத்துள்ளார்.

பெரு: உனது அமிர்தமொழி என்வயிற்றையே நிரப்பிவிட்டது செவிக் குணவில்லாத போதல்லவா சிறிது வயிற்றுக்கு ஈயப்படும்.

தேன்: தாங்கள் சென்ற இடத்தில் நடந்தவற்றை அறியும் ஆவலுடையேன். அதைப்பற்றிச் சற்று விபரமாகக் கூறுங்கள்.

பெரு: புகழ் புரிந்த இல்லிலோர்க்கல்லவா இகழ்வார் முன் ஏறுபோல் பீடு நடையில்லை. பத்தாவுக் கேற்ற பதிவிரதை இருக்கும் போது எனக்கு என்ன குறை? சொற்போரில் வெற்றி பெற்றேன் வீடுதிரும்பினேன்'

தேன். நாதா! தனித்தமிழ் கற்றவரிடையே ஏன்இந்தப் போட்டியும் பொறாமையும்? இக்காலம் என்றுதான் மலையேறுமோ தெரியாது!

பெரு: காலம் அத்தகைய காலம். போலி அறிஞர்கள் கூடிவிட்டார்கள். புகழ் பெறுவதற்குத் திருட்டுத் தனங்கள் செய்கிறார்

கள், கலைவளர்க்கின்றோம் கற்பனைச் சிகரத்தில் ஏறுகின்றோம் என இறுமாப்புக் கொள்ளுகிறார்கள். உண்மைப் புலவர்கள் தோன்றும்போது போலிப்புலவர்கள் விளக்கின் முன் இருள்போல் மறைந்தொழிவார்கள். கண்டனம் சொல்வதினால் தங்களை அறிவு மிக்கவர் என்று விளம்பரப்படுத்துவார்கள். கண்டனம் இல்லா ஒன்றைக் கவினுறத் தாங்கள் செய்து முடித்தலே பெருமை. "பிறர் தீமை சொல்லா நலத்தது சால்பு."

பெரு: கண்டனம் சொல்லுதல் இன்று நேற்றுத் தோன்றியதல்ல. கடவுள் கட்டிய கவியிலே கறை கூறியவர்கள் இருந்தார்களே! சாதாரண மனிதன் கவியில் கூறுவது, மனிதனிலே குற்றம் கூறுவது இயலாதா? தன்னை விளம்பரப் படுத்துவதிற்குச் சிலர் மற்றவர்களிலே குற்றம் கூறும் உபாயத்தை வைத்திருக் கிறார்கள். சரி ஐந்து பொறிகட்கும் இன்பம் அளிக்கும் பாலன் எங்கே?

தேன்: அவன் துயில்கின்றான்.

பெரு: ஏதாவது உணவு உண்டானா?

தேன். என் சொல்வது? தண்ணீர் இரண்டு மிடறு குடித்தான். அவன் பசியாற் பட்டதுன்பத்தை எப்படிச் சொல்வேன்?

பெரு: அப்படியா? என்செய்வது? இருவேறு உலகத்து இயற்கை. நடந்தவற்றைச் சொல் அதையாவது கேட்போம்.

தேன்: நீங்கள் சென்றீர்கள். அன்று என்னிடம் ½ படி அரிசி தான் இருந்தது. அதையே மூன்று நாள்களாகப் பங்கிட்டு உப்பின்றி நீரில் வேகவைத்துக குப்பைக் கீரையுடன் சேர்த்து அருமைப் புதல்வனுக்குக் கொடுத்தேன். அவனும் சந்தோஷமாக உண் டான். நேற்றையுடன் முடிந்துவிட்டது. நாலைந்து வீட்டிற்குச் சென்றேன். அவர்களும் கைவிரித்து விட்டார்கள்.

பெரு: நான் துரோகி. அறுசுவை உண்டியுடன் உண்டேன் இன்று காலை என் செய்தாய்?

தேன்: இன்று காலை அழுதான். மார்பகத்தைச் சுவைத்தான். பாலும் வரவில்லைப் போலும். வீரிட்டு அழுதான். குறுகுறு நடந்து அடுக்களை சென்றான். மட்கலங்களைச் சிறு கைகளினால் உருட்டி னான். கதறிக்கொண்டுவந்து காலைப்பிடித்தான். புலியென்று பயமுறுத்தினேன். அம்புலிகாட்டி ஏமாற்றினேன். அழுகையும் ஓயவில்லை. அப்பாவந்தால் எவ்வாறு கோபிப்பாய் என்றேன். அவன் முகமும் கண்ணும் பார்த்தால் பெற்றவர்களுக்கன்றி மற்ற வர்க்கும் கண்ணீர் வரும்.

பெரு: இந்நிலையில் யான் இருந்தும் இல்லாதது போலத்தான். எவ்வாறு மன அமைதியுடன் இருப்பேன்?

தேன்; தமிழையும், தமிழ்ப்புலவரையும் ஆதரித்து அவன் உதவும் பலர் உளர். அவர்களிடம் சென்று உங்கள் புலமையைக் காட்டி ஏதாவது பெற்று வாருங்கள்.

பெரு: தேன்மொழி! நான் ஏதாவது பெற்று அல்லது திரும்பேன் வருகிறேன். மகன் முகத்தைப் பார்க்கவே வெட்கமாகவிருக் கின்றது.

தேன்: நன்று சென்று வாருங்கள்.

## காட்சி 2

இடம்: இளவெளிமான் அரண்மனை நேரம்: காலை

இளவெளிமான்: அமைச்சரே வருக! வருக!! அமருங்கள் ஆசனத் தில்.

மதிவாணன்: அரசே! வணக்கம் (இருத்தல்) அன்றலர்ந்த செந் தாமரை மலர் போல் இருக்கும் தங்கள் திருமுகம் திரிமுகமாய் இருக்கக் காரணம் என்ன? அண்ணன் இறந்த துக்கமா?

இள: அண்ணன் இறந்த துக்கம் அல்ல அமைச்சரே! "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை". இது வள்ளுவர் வாய்மொழி. அண்ணனும் அண்ணன். வெள்ளிமான் பொருளின் பெருமை தெரியாத பேதை. பாடுபட்டுத் தேடிய பணத்தையெல்லாம். பரிசில் என வந்தவர்க்கு அள்ளி அள்ளிக் கொட்டினன். இறந்தான். நான் என் செய்வேன். எவ்வாறு பணத்தைச் சேகரிப்பேன்

மதி: அரசே! வறியார்க்கொன்று ஈவதே ஈகை. இதுவே நமக்குப் பொன்றுங்காற் பொன்றாத் துணையாகஉள்ளது.

இள: அமைச்சரே! அதில் எனக்கு நம்பிக்கையில்லை. அதிருக்கட்டும் அதிக பணம் திரட்ட உபாயம் கூறும்.

சேவ: காவல! வணக்கம். தமிழ்ப்புலவர் ஒருவர் பெருஞ்சித்திரனர் என்ற பெயராம். தங்களைக்கண்டு, தங்களிடம் தனது புலமையை வெளிப்படுத்திப் பரிசில் பெற்றுப்போக விரும்புகின்றார்.

இள: தமிழ்ப்புலவனா? அந்தத் தரித்திரம் பிடித்தவனுக்கு ஏதாவது கொடுத்தனுப்பு. பரிசிலாம் பரிசில் தமிழாம் தமிழ். என்ன என்ன சாதித்து விட்டார்கள் எனக்கு அவசிய கருமங்கள் இருக் கின்றன. வீணைகெட நான் விரும்பவில்லை. அவனைத் துரத்தி விடு. அவன் கண்ணில் விழிப்பதே பாவம்.

சேவ: ஆம் அரசே! (போதல்)

மதி: அரசனே! அவர் ஒரு முது தமிழ்ப்புலவர். ஏளனம் செய்யாதே, செந்தமிழோடு சித்திரமும் கைவந்த காரணத்தால் பெருஞ்சித்திரனர் என்று போற்றி அழைக்கப் படுகின்றர். தாம் மனத்திற் கொண்ட கருத்துக்களைச் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டும் திறமையும் உண்டு. இவர் இயற்றிய பாடல்கள் சான்று பகரும். சித்திரம் என்பதற்கு வியப்பு என்ற ஒரு பொருளும் உண்டு. வியத்தகுபாடல்கள் பாடிய காரணத்தாலும் இப் பெயர் பெற்றர் எனினும் பொருந்தும்.

இள: பெருமை அளப்பது இருக்கட்டும். வரிகள் விதித்து வருமானம் பெருக்கப் போகின்றேன். உமது அபிப்பிராயம் என்ன? விரைவில் கூறும்.

மதி: நீ தமிழைப் பழித்தாய், தமிழ்ப் புலவனை இகழ்ந்தாய்! வரி விதிக்க நினைக்கிருய், குடிகள் வரியினல் அழுங்கண்ணீர் உனது இருக்கும் செல்வத்தையும் அழிக்கும் படையாக மாறும் என்பதை அறியும்.

இள: மந்திரியே! நீ இப்போது கடை குறைந்த மந்திரியாய் விட்டாய்.

மதி: என்ன சொன்ஞய்? கேடுவரும் பின்னே, மதி கெட்டுவரும் முன்னே. எனது பதவியை இன்றே துறக்கின்றேன்.

இள: போ...போ...போ...

சேவ: அறிஞரேறே! தங்கள் பெருமையை அறியாது இச்சிறுபொருளைக் கொடுக்கும்படி சொன்னர். அண்ணனுக்கும் தம்பிக்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம். சீதேவி பிறந்த கடலிலேதான் மூதேவியும் பிறந்தாள்.

பெரு: தம்பி! இவ்வரசன் தான் இப்படியென்று நினையாதே! தகடூர் நெடுமானஞ்சி என்னும் சிற்றரசனிடம் சென்றேன். அவன் அமைச்சரிடம் விருந்திட்டுப் பரிசளிக்குமாறு ஏவினன். நான் "மன்னனைக் கண்டு எனது புலமையை வெளிப்படுத்திப் பரிசில் பெற குன்றும் மலையும் கடந்து வந்தேன். மன்னன் என்னைக் காணவில்லை. என் தகுதி அறிந்து சிறிது பொருள் அளிப்பினும் இன்புடன் பெறுவேன். நான் வாணிகப் பரிசில் வேண்டேன்" என்று கூறிப் பரிசில் பெருது வந்தேன்.

சேவ: சோர்வடைந்துள்ளீர் போலும். இதை உண்ணுங்கள்.

பெரு: நன்று! நன்று!! (உண்ணல்)

சேவ: அரசர் வருகிருர்.

பெரு: இவன் முகத்தைப் பார்ப்பதே பாவம். (மறைந்திருத்தல்)

(மனத்துள்) மனமே! வெளிமான் சிறந்தவள்ளல். புலவர்கட்குக் கோடைகாலக் கொழுநிழல். பொய்கூறுதல் அறியான். நல்லோர் சொல்லாம் கேள்வி ஞானம் நிரம்பியவன். இவ்வாறெல்லாம் அவனைப்பற்றிக் கேள்விப்பட்டாய். ஆகவே அவனைக்காணுதல் வேட்கையால் அவன் வாயிலை அடைந்து பாடிநின்றோம். சோற்றுப்பானையைத் திறந்து பார்த்தால் உள்ளே சோறில்லை. அனல் வீசுகிறது. புலவர்கள் பிழைத்துப் போகட்டும் என்று அறனில்லாத கூற்றுவன் வேருக எண்ணிவிட்டான். அவனைக் கொண்ட கூற்றுவன் நோயில்லாமல் நீண்டநாள் வாழட்டும்! மலையில் திரியும் புலியின் குறியிலிருந்து யானை தப்பிவிட்டது. அதற்காக அப்புலியானது தன்பசி போக்க எலியை அடித்து உண்ணுது. இங்கிருந்து விரைந்து செல்வோம். கடலில் கலக்கும் ஆற்று நீரைப் போன்ற நிறைந்த செல்வத்தைப் பரிசிலாகக் கொண்டு வருவோம். உறுதிகொள் எழு.

—❀—

## காட்சி 3.

இடம்: இளவெளிமான் அரண்மனை நேரம்: காலை

(இளவெளிமான் புதிய அமைச்சருடன் ஆலோசித்தல்.)

இளவெளிமான்: மந்திரியாரே! என்ன ஆரவாரம்?

மந்திரி: குடிமக்கள் ஆரவாரம். வரியிறுக்க முடியாது என்று கூக்குரல் போடுகின்றனர்.

இள: இவர்கள் ஏன் திரண்டார்கள். மதிவாணன் சூழ்ச்சியா?

மந்: இல்லை அரசே! இல்லை அரசே!! மதிவாணர் நேரே எதையும் பேசுவார், செய்வார். மறைந்திரு தூண்டல் மருந்தளவும் கிடையாது.

இள: அப்படியாயின் கும்பலைக் கலைக்க வழியாது? சிப்பாய்களை விட்டு ஓட்டவா? அன்றி கரியைவிடவா? பரியைவிடவா?

மந்: மதிவாணர் மதிப்பிற்குரியவர். பதவி மோகம் என்னை அப்போது மௌனம்சாதிக்கச் செய்தது. "குடிதழீஇக் கோலோச்சும் மன்னன் அடிதழீயே உலகம் நிற்கும்" மதிவாணரை வரவழையுங்கள். ஆரவாரம் செய்யும் ஆட்கள் கட்டவிழ்த்த நெல்லி மூடை போல் செல்வர்.

இள: சேவகா! (சேவகன் வரல்)

சேவ: அரசே!

இள: மந்திரியார் மந்திவாணனை உடன், அழைத்துவருக (மதிவாணன் வரல்) மன்னிக்கவேண்டும். தங்கள் பெருமையை அறியாது தவறுஇழைத்து விட்டேன். இவர்களைப் போகும்படி சொல்லுங்கள்

மதி: அன்பான குடிமக்களே! செல்லுங்கள். உங்கள் மீது விதிக்கப் பட்ட வரியெல்லாம் நீக்கப்பட்டுள்ளது. அமைதியாகச் செல்லுங் கள்.

இள: அடியேனை மன்னியுங்க்ள். மறுபடியும் அரசாட்சியை ஏற்று நடத்துங்கள்.

மதி: விரைவில் தங்கள் மனம் மாறியமைக்குக் கடவுளைப் பிரார்த் திக்கின்றேன்.

இள: மந்திரியாரே! அதோ ஒரு பிரபு யானையில் இவர்ந்து வரு கின்றார். அவர் யாரோ?

மதி: அவர்தாம் பெருஞ்சித்திரனார் என்னும் பைந்தமிழ்ப் பாவலர்.

இள: அவரை வரவேற்போம். வாருங்கள்.

மதி: புலவரேறே வருக!

(யானையை விட்டிறங்கிஅதைக் காவல் மரத்தில் கட்டல்)

இள: என்னையும் ஆசீர்வதித் தருளும்.

பெரு: எல்லாம் திடீர் மாற்றமாகவல்லவோ இருக்கின்றது. "கடு மான் தோன்றலே! இரவலரை அளித்துக் காப்பவன் நீ ஒரு வனே அல்லன். இரவலரைக் காப்பவர் இந்த உலகத்தில் இல் லாமற் போகவில்லை. இரப்போர்க்கு உள்ள பெருந் தன்மை எவ்வளவு என்பதை என்னை நோக்கித் தெரிந்துகொள். அது போலவே அவர் தகுதியும், திறமும் அறிந்து கொடுக்கும் வள் ளல்கள் இவ்வுலகில் உள்ளனர் என்பதையும் நீ உணர்ந்து கொள். உன் ஊர்க்கடிமரம் வருந்துமாறு கொண்டுவந்து இப் போது கட்டியுள்ளநெடிய நல்ல களிறு யான்பெற்றுவந்த பரி சில். வெளிமான் தம்பியே! யான் சென்று வருகின்றேன்.

இள: தாங்கள் எனது அரண்மனையில் சிலகாலம் தங்கிச் செல்லுங் கள்.

பெரு: தங்கிச் செல்ல முடியாது. நான் வருகிறேன்.

மதி: சென்று வாருங்கள். (பெருஞ்சித்திரனார் போதல்) அரசே! வில் லேர் உழவர் பகைகொள்ளினும் கொள்ளற்க சொல்லேர் உழவர் பகை. வாருங்கள்.

## காட்சி 4.

இடம்: பெருஞ்சித்திரனார் குடிசை காலம்: காலை

(அடைமழை. வீட்டில் ஒழுக்கு. தேன்மொழி மண்சட்டி வைத்து நீரைச் சேகரித்துக் குழந்தையை அணைத்துக் கொண்டிருத்தல்)

குழ: தாயே! அப்பா எப்போது வருவார்?

தேன்: கண்ணே! இன்று வந்துவிடுவார்.

குழ: இன்று வருவார் வருவார் என்று ஏமாற்றுகின்றாய்.

தேன்: இன்று கட்டாயம் வருவார்.

குழ: வரும்போது என்ன கொண்டுவருவார்?

தேன்: உடுப்புகள், உணவுகள், யானை, எல்லாம் கொண்டு வருவார். அதோ வருகின்றார்.

குழ: அப்பா! அப்பா!! (எனத்துள்ளல்)

பெரு: பெண்ணே! இதோ எல்லாவற்றையும் கொண்டு சென்றுவை. (மகனை வாரி எடுத்து முத்தம் கொடுத்தல்)

தேன்: (சந்தோஷத்துடன்) நீங்கள் அநேக பொருள்கள் கொண்டு வந்துவிட்டீர்களே! பொன்னையும், மணியையும், பாம்புரியன்ன உடையையும் யார் உவந்தளித்தார்கள்?

பெரு: குமணன் என்னும் வள்ளல். கொங்குநாட்டின் முதிரமலைத் தலைவன். அவன் நாடு இயற்கைவளன் மலிந்தது. ஆசினி பலாபோன்ற பழநிறைமரங்கள் நிறைந்தது. கடுவனும் மந்தியும் களிப்புடன் வாழும் நாடு. இலன் என்னும் எவ்வம் உரையாது ஈபவன்.

தேன்: அன்பரே! இவ்வளவு பொருள்களும் நமக்கேன்? வாழ் நாள் முழுவதும் சும்மா இருந்துண்ணலாமே!

பெரு: பெண்ணே! "பார்த்தூண் மரீஇயவனை பசியென்னும் தீப் பிணி தீண்டலரிது." இவற்றை நாம் மட்டும் வைத்துத் தனியே உண்பது சரியல்ல. இப் பொருளை உன்னை விரும்பிவாழும் பெண்களுக்குக் கொடு; உன்னால் விரும்பப்படும் எளிய மகளிர்க்கும் கொடு. உன்சுற்றத்தினரின் பசிநீக்குமாறு தாராளமாகக்கொடு கடன்பெற்றபொருளை அவர்களிடம் திருப்பிக்கொடு. இன்னார்க்கு கொடுக்கலாமா? கூடாதா? என எண்ணாதே. என்னையும் கேளாதே. நீண்ட நாள் வைத்துக்கொண்டு வல்லாங்கு வாழ்வோம் என்றெண்ணாதே. நானும் கொடுக்கிறேன். நீயும்எல்லோர்க்கும் வாரி வழங்கு.

தேன்: தங்கள் சித்தப்படியே நடக்கிறேன்.

# சீதனம்

## கதா பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| வேலுப்பிள்ளை | (வேலு) | ... | ஒரு பென்சனர். |
| கமலம் | ( கம ) | ... | வேலுப்பிள்ளையின் மனைவி. |
| குமாரசாமி | ( குமா ) | ... | வேலுப்பிள்ளையின் மூத்தமகன் |
| சுப்பிரமணியம் | (சுப்பிர) | ... | இளையமகன். |
| சரஸ்வதி | ( சரஸ் ) | ... | வேலுப்பிள்ளையின் சகோதரி |
| நல்லம்மா | ( நல் ) | ... | சரஸ்வதியின் மகள். |
| சுப்பர் | ( சுப் ) | ... | கலியாணத்தரகர். |
| நாகலிங்கம் | ( நாக ) | ... | வேலுப்பிள்ளையின் சிநேகிதன் |
| இரத்தினம் | ( இர ) | ... | ஆயுள்வேத வைத்தியர். |

## காட்சி 1

இடம்: வேலுப்பிள்ளை வீடு.

(பென்சனர் வேலுப்பிள்ளை பாயும் படுக்கையுமாகக் கிடத்தல்)

வேலு: தம்பி! தம்பி!!

கம: சும்மா கிடக்கிறதுக்கு ஏன் கரச்சல் பண்ணிறீங்கள்?

வேலு: தண்ணீர்த் தாகமாகவிருக்கு. கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கோ.

கம: சும்மாகிடவுங்கோ. டாக்குத்தர் இரத்தினமல்ல சொன்னது தண்ணீர் அதிகம் குடிக்கவேண்டாமென்று. நீங்கள் என்னெண்டால் தண்ணீர் தண்ணீர் எண்டு உயிரை வாங்கிறீங்க.

வேலு: டாக்குத்தர் சொன்னால் என்ன செய்கிறது. தாகம் நாவை வறட்டுகிறது.

கம: இந்தாங்க குடியுங்க. இதிலை கிடக்கிறதை எடுத்துக் குடிக்கிறதுக்கு மற்றவர்களை ஏன் தொந்தரவு செய்யுறீங்க?

வேலு: நான் யாரையும் தொந்தரவு செய்யவில்லை. கடவுள்தான் எனக்குத் துணை. நீங்க ஒருவரும் கஷ்டப்படவேண்டாம். தங்கச்சி சரஸ்வதியிட்டை ஒரு பொடியனை அனுப்பி வரச் சொல்லிவிடு. சொல்லிவிட்டு நீ அப்பன் வீட்டுக்குப் போகப் போறேன் என்றாய் போ.

கம: நீங்க சொல்லித்தான் நான் போகப்போறேன். நான் போக நினைத்தால் போய்த்தான் தீருவேன். நீங்க தங்கச்சி தங்கச்சி

என்று உயிரை விடுகிறீங்க. ஆளைப் பார்த்தால் மூதேவி. பேரைப் பார்த்தால் சீதேவி. இல்லை சரஸ்வதி. அந்தச் சனியன் தானே என்னைக் கண்டால் முகத்தைத் திருப்பிக் கொண்டு செல்லுது. அவவுக்கும் ஒரு எண்ணம் பொடியனிலை ஒண்டை எடுக்கிறதுக்கு.

வேலு: நானும் உங்க கொப்பனும் அநியாயமாய்த் தேடின சொத்து உனக்குக் கண்ணை மறைக்குது. நீ போற இடத்துக்குப் போ. நான் வேறையாரையும் விட்டு அவளைக் கூப்பிடுகிறேன்.

கம: அப்ப நீங்க யாரையும் விட்டுக் கூப்பிட்டு அவளை வைச்சுக் கொள்ளுங்கோ. நான் தம்பியவையும் கூட்டிக் கொண்டு போகிறேன். அவங்க இஞ்சை நிண்டால் அவள் வளைச்சுப்போடுவாள். மூத்த தம்பி இளையதம்பி வாங்க இரண்டுபேரும் நாங்க அப்பா வீட்டுக்குப் போவோம்.

சுப்பிர: அம்மா! அப்பாவைத் தனிய விட்டு விட்டு நான் வரமாட்டேன்.

கம: சரி, நீ அப்பாவைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டிரு. நானும் கொண்ணையும் போறம்.

(கமலமும் குமாரசாமியும் போதல்)

வேலு: தம்பி! நீ போய் மாமியை நான் வரச்சொன்னது எண்டு சொல்லிக் கூட்டிக்கொண்டு வா. எனக்குக் கொஞ்சம் ஒடியற் கூழ் குடிக்க ஆசையாயிருக்கு.

சுப்பிர: சரியப்பா, நான் போய் மாமியைக் கூட்டிக் கொண்டு வருகிறேன். நீங்க படுத்திருங்கோ.

---

## காட்சி 2

இடம்: வேலுப்பிள்ளை வீடு (சரஸ்வதி வருதல்)

சரஸ்: அண்ணை, அண்ணை ஏன் என்னைக் கூப்பிட்டனீங்க?

வேலு: நான் சும்மா கூப்பிடுவேனா? எனக்கு ஒடியல் தண்ணி குடிக்க ஆசையாயிருக்கு கொஞ்சம் காச்சித்தா. தம்பி எங்கே?

சரஸ்: தங்கச்சி ஏதோ பாடம் காட்டித்தரச் சொல்லிச்சு அங்கே நிக்குது இப்ப வந்திடும்.

வேலு: நான் அவனைத்தான் நம்பி இருக்கிறன். அவன் தான் கடைசிவரை எங்களைக் காப்பாற்றுவன் போலவிருக்கு. நீ அடிக்கடி இந்தப்பக்கம் வாறனி, ஏன் இப்ப வாறதில்லை.

சரஸ்: மச்சாள் எங்களைக் கண்டவுடன் சீறி விழுகுது, எப்படி அண்ணை வரமுடியும்? நீங்க படுத்திருங்கோ நான் கூழ்காச்சி கொண்டு வருகிறேன். (போதல்)

(வேலுப்பிள்ளையின் சிநேகிதன் நாகலிங்கமும் இளைய மகன் சுப்பிரமணியமும் வருதல்).

நாக. எப்படி யிருக்கு உடம்பு?

வேலு: உடம்புக்கு என்ன குறை. இவ்வளவு பணம் சம்பாதித்து என்ன? இலட்சமாய்ச் சீதனம் வாங்கியென்ன? நேரத்துக்கு ஒரு சொட்டுத் தண்ணி குடிக்க குடுத்து வைக்கவில்லை. இனசனத்துள்ளை ஒரு பொட்டையை எடுத்திருந்தால் கவனிச்சுப் பார்க்கும். சீதனத்துக்கு ஆசைப்பட்டு எடுத்தன். அவள் இப்பவும் அப்பா அப்பா எண்டு சாகிறாள். நான் நம்பியிருந்த பொட்டையை ஏமாத்தியதன் பலன் கைமேல் கிடைத்தது. அதுவுமல்லாமல் எல்லாற்றை கண்ணிலையும் மண்ணைப் போட்டுச் சம்பாதித்தேன். பெரிய வீடுகட்டினன். கடைசிகாலத்திலை கஷ்டப் படவேண்டிய நிருவமாய்ப் போச்சு.

நாக: நடந்த விஷயங்களை நினைத்துப் பிரயோசனமில்லை. (சரஸ்வதி கூழ் கொண்டு வருதல்.) எடே! உன்னுடைய தங்கச்சியும் இஞ்சை நிற்குப் போலவிருக்கு, கவனிச்சுக்கோ பாவம்.

வேலு: சரி நான் அப்படித்தான் நினைச்சுக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஒரு விதமாயிருக்கு.

சரஸ்: அண்ணை கூழைக் குடியுங்கோ.

வேலு: அதிருக்கட்டும் நீங்க போங்க,

சரஸ்: எனக்கு எப்படியண்ணை போக மனம்வரும், வீட்டிலை ஒருவருமில்லை. நீங்க ஏதாயினும் கேட்டால் தம்பி என்ன செய்யும்?

வேலு: நான் பிழைப்பது நிச்சயமில்லை. தம்பி சீதனத்துக்கு ஆசைப்பட்டு நான் படுகிற கஷ்டத்தைப் பார். மாமியைக் கவனி.

சுப்பிர: அப்பா நான் அப்படிச் செய்யமாட்டேன். (வேலுப்பிள்ளை கண்ணை முழித்து முழித்துப் பார்த்துச் சரிதல்.)

(கமலமும் மகனும் வருதல்)

கம: [கோபத்துடன்] நீயும் நிற்கிறியா. [வேலுப்பிள்ளையைத் தட்டி] இஞ்சேருங்கோ அலுமாரித் துறப்பெங்கே?

நாக: அந்த ஆள் ஏதோ கஷ்டப்படுகுது. இப்பவோ பேந்தோ எண்டு இருக்குது' உனக்குப் பணப் பயித்தியம் மாறவில்லை.

கம: உங்களுக்கென்ன அண்ணை தெரியும். இந்த நேரம் அடிச்சுக் கொண்டு போறத்துக்கு எத்தனைபேர் காத்திருக்கினம். [எனக்கல்லவா தெரியும்.

[சரஸ்வதி தமயனைத் தட்டிப் பார்த்துக் குழறல், மக்களும் குழறல். கமலம் எல்லாவற்றையும் ஆராய்தல்].

## காட்சி 3.

இடம்: கமலம் வீடு.

(ஒரு வருடத்தின் பின்) கமலம் வீட்டிற்குக் கலியாணத் தரகர் சுப்பர் வருதல்)

சுப்: அக்கா!

கம: உங்களை நான் காணவேண்டும் என்று நினைச்சேன்.

சுப்: நானும் ஒரு நல்ல காரியமாய்த்தான் வந்தேன்.

கம: என்ன அண்ணை விசேடம்?

சுப்: உங்களுக்கு ஒரு அதிர்ஷ்டம் வந்திருக்கு சாமானிய அதிர்ஷ்டம் அல்ல.

கம: அப்படி என்ன அண்ணை அதிர்ஷ்டம்?

சுப்: உங்க மூத்த மகனுக்குச் சம்மந்தம் ஒன்று ஒழுங்குபண்ணியிருக்கிறேன். நல்ல இடம். வேறு ஆட்களுக்கு ஒழுங்குபண்ண எனக்கு விருப்பமில்லை.

கம: சீதனம் எப்படி? பெண் எப்படி? இங்கிலீசு, கிங்கிலீசு படிச்சதா?

சுப்: அதைப்பற்றி என்னத்தைப் பறைவான். உங்க மகன் கால் நீட்டிக்கொண்டு சாப்பிடலாம். பெண் வீட்டுக்காரர் அவற்றை பேரைக் கேட்டவுடன் துடியாய்த் துடிக்கிறார்கள்.

கம: பெண்ணைப் பார்த்து நிச்சயப்படுத்துவோம். நீங்க இருக்கும் போது எங்களுக்கென்ன குறை?

(நாகலிங்கம் வருதல்)

நாக: என்ன சுப்பரே இந்தப் பக்கம்?

சுப்: சும்மா வந்தனான். கனகாலம் இந்தப் பக்கம் வரவில்லை.

நாக: ஏதாகிலும் முடிச்சுக் கிடிச்சுப்போட ஆயத்தமா?

கம: இல்லை அண்ணை நம்ம மூத்த தம்பிக்கு ஒரு கலியாணம் ஒழுங்கு பண்ணுகிறார்.

நாக: ஏன் நீங்க கையிலை வெண்ணெயை வைச்சுக்கொண்டு நெய்க் கலைக்கிறீர்கள். மச்சாள் சரஸ்வதியிட்டை தங்கவிக்கிரகம் போலவொரு பெண்ணிருக்குதே.

கம: அவங்கிட்ட தம்பிக்குக் குடுக்க என்ன கிடக்குது. இது நல்ல பசையுள்ள இடம்போல விருக்கு ஏன் அண்ணை விடுவான்?

நாக: உங்கடை விருப்பத்துக்கு நான் தடையாய் வரவில்லை. ஒண்டுக்கை ஒண்டென்றால் உதவியாயிருக்கும். சீதனத்தோடைவாற பெண் மிடுக்காய் நடக்கும். உங்களைக் கவனிக்கமாட்டாது. எண்டாலும் உங்க மகனுக்குத்தானே கலியாணம்.

கம: சுப்பரண்ணை நாங்கள் பெண்ணைப்பார்த்து வருகிற நாளுக்கு விஷயத்தை முடிப்பது.

சுப்: அக்கா! நான் போட்டுவாறன்.

கம: கொஞ்சமாய்க் கோப்பி குடிச்சிட்டுப் போங்களேன்.

சுப்: புழுக்கமாயிருக்கு, எனக்குக் கோப்பி வேண்டாம். நான் அவசரமாய் ஒரு இடத்துக்குப் போகவேணும். இடையிலே வந்து சந்திக்கிறேன். நான் வாறன். (போதல்)

நாக: நானும் ஒருக்கா யாழ்ப்பாணம் போகவேணும். போட்டு வசதியாயின் பேந்து வாரன்.

கம: அப்ப சரி வாருங்கோ.

---

## காட்சி 4.

இடம்; கமலம் வீடு.

[சரஸ்வதி மாப்பிள்ளை கேட்கவுல்]

கம: இண்டைக்கு மழைவரப் போகுது போலவிருக்கு. சோழகக் காத்துத் தள்ளிக்கொண்டு வந்து விட்டதோ?

சரஸ்: மச்சாள் தாங்கள் தான் எங்களுக்கு உதவி செய்யவேண்டும்

கம: பேசிறதைத் தெளிவாகப் பேசன். நான் என்ன செய்ய வேண்டும்.

சரஸ்: [கையைப் பிசைந்து கொண்டு] தங்கச்சிக்கு.

கம: தங்கச்சிக்கு கலியாணம் பொருந்திவிட்டதா?

சஸ்ர: இல்லை மச்சாள் உங்கள் மகனுக்கு...

கம: அதுவாசங்கதி உங்களுக்கும் மணத்துவிட்டதா? அவனுக்குப் பெண் கொடுக்க எத்தனைபேர் காத்துக் கொண்டிருக்கினம். அவனுக்கு ஐம்பதினயிரம் காசாய்க் கொடுக்கிறது என்று சுப்பரண்ணை வந்து நேற்று கேட்டுவிட்டுப் போகுது. உங்க மகளுக்கு ஒரு சொல்லு இங்கிலீசு தெரியாது. அதைத்தான்கட்டி நம்ம தம்பி அழுகிறதா? எங்கினையேன் ஒண்டைப் பார்த்துச் செய்வம்.

சரஸ்: அண்ணர் சொன்னர்.

கம: அண்ணர் தன்ரை இடத்திற்குப் போட்டார். அவருக்கு இப்ப இஞ்சை மதிப்பில்லை. நீ அங்கை போய்க் கேள்.

சரஸ்: அண்ணை நீ யிருந்தால் இப்படி நடக்குமா? என் மகள் கன்னியாய்த்தா னிருக்க வேண்டுமா? உங்கள் மக்கள் இருக்க நான் எப்படி வேறை யாட்களைப் போய்க் கேட்கிறது. இன்னும் எவ்வளவு காலத்துக்கென்று குமரை வீட்டிலை வைச்சிருக்கிறது [அழுதல்].

கம: சும்மா மாய்மாலக் கண்ணீர் வடிக்காமல் இரு. உனக்கு மகளைப் ப கிறது கஷ்டம் என்றால், அப்பாவுக்கு ஒரு ஆள் தேவையாம் ளை அனுப்பன் அப்பாவோடு இருக்கட்டன்.

சரஸ்: அதற்கு நான் உடன்படமாட்டேன். ஏழைகள் என்று ஏறு மாருகப் பேசாதேங்கோ. படைச்சவன் அவளுக்கென்று ஒருத்தனைப் படைச்சுத்தானே இருப்பன். விருப்பமில்லாவிட்டால் செய்யமாட்டேன் என்று சொல்லுகிறது தானே.

கம: அடபாருங்கோ உரோசக்கண்டு. போடியங்காலை படைச்சவன் படியளப்பான் என்ருல் இஞ்சை ஏன்ரி வந்தனி. என்ரை பிள்ளையின்ரை சப்பாத்துத் துடைக்கக் கூட உன்ரை மகளுக்கு லாயக்கு இல்லை.

சரஸ்: நாங்கள் மானமுள்ளவர்கள். ஏழைகள் என்று ஏளனம் செய்யாதே. காலம் மாறும். அந்த நேரம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கம: கேளடிகேள். கமலம் இதற்கு அஞ்சுகிற கட்டையல்ல. இராசாத்தி வாருங்கோ (கேலியாக) (சரஸ்வதி அழுது கொண்டு போதல்.)

---

## காட்சி 5.

இடம்: கொழும்பில் குமாரசாமி வீடு.

(குமாரசாமி விவாகஞ் செய்து கொழும்பில் இருத்தல்)

குமார: நான் தந்த காசு எங்கே?

மனைவி: ஏன் இப்ப உங்களுக்குக் காசு ?

குமார: அம்மாவிடம் இருந்து தபால் வந்திருக்குது. போனமாதம் அம்மாவுக்கு அனுப்பச்சொல்லி நான் தந்த காசு அனுப்பினனியா?

மனைவி: அம்மா அம்மா என்று சாகிறீர்கள். அம்மாவுக்கு என்ன? குறை? அவதானே காசுக்குமேலே புரளுகிரு?

குமார: உனக்குப் பெற்றவளின் அருமை தெரியாது. தாயின் அருமை தெரிந்தால் இப்படிச் செய்யமாட்டாய். காசும் அனுப்பவில்லைப் போலத் தெரியுது.

மனைவி: அண்டைக்கு நீங்கதந்த காசுக்கு நான் நல்ல சீலையொன்று வாங்கிவிட்டன். மற்றக்காசும் உங்கள் சிநேகிதன் மயில்வாகனம் அவசரம் தேவையென்று கேட்டுது கொடுத்துவிட்டேன்.

குமார: அம்மாவிலும் பார்க்க மயில்வாகனமும் சீலையும் உனக்குப் பெரிதாய்ப்போச்சு. இதுக்காகத்தான் பணக்கார வீட்டுப் பெண்

களைப் கட்டிக்கொள்ளக் கூடாதென்று பெரியவங்க சொன்னுங்க. தனக்கெளியது சம்பந்தம் என்பதன் கருத்து இப்பத்தான் புரியுது.

மனைவி: நீங்க நினைச்சபடி நடக்கலாம். நான் நினைச்சபடி நடக்க எனக்கு உரிமையில்லையா? நான் என்ன வரும்போது உடுத்த சீலையோடோ வந்தனுன். அப்பா என்னை எவ்வளவு செல்லமாக வளர்த்தார். பின்னேரம் மயில்வாகனமும் மனைவியும் படம் பார்க்கப் போகினமாம். என்னையும் வரச் சொன்னுர்கள்.

குமார: அம்மா இரவு வாறமெண்டு தந்தி கொடுத்திருக்கிரு. நீயும் நில் போய்க் கூட்டிக்கொண்டு வருவம்.

மனைவி: உங்கம்மா வந்தால் எனக்கென்ன? நீங்க போய்க் கூட்டிக்கொண்டு வாருங்கோ. நான் அவங்கட்கு ஓமெண்டு சொல்லிப் போட்டேன்.

குமார: நீ போய்த் தொலை. நீ உன் மாமியைப் பணத்திமிரால் அலட்சியப் படுத்துகிருய். அதேபோல உன் மருமகளும் உனக்குச் செய்வாள். இருந்துதானே பார்க்கப்போகிறேன்.

மனைவி: இருந்து பாராமல் நின்று பாருங்களேன். நான் இரவு வராமல் நின்று விட்டாலும் விடுவேன். இரவில் சினேகிதி வீட்டில் தங்க யோசனை. *(போகிருள்)*

குமார: (மனத்துள்) பெண்கள் வீட்டிலை இருக்கிறதுதான் பழைய வழக்கம். இப்ப என்னென்ருல் இரவுபகலாய் ஊர்சுத்துகிறது வழக்மாய்ப்போச்சு. எல்லாம் என் பிழைதான். உலகம் பகிடிபண்ணும் என்று பார்க்கிறன். இந்தச் சனியனைவிட்டு விட்டுச் சும்மா விருந்தாலும் பறவாயில்லை. நாலுபேர் பார்த்து நகைக்கிறதுக்கு இடங் கொடுக்கக் கூடாது. இது சீதனத்தை விரும்பியதால் வந்த கேடு? கஷ்டப்பட்ட குடும்பப் பெண்ணுயிருந்தால் இப்படிச் செய்யுமா? (பெருமூச்சு விடுதல்)

## காட்சி 6.

இடம்: கொழும்பில் குமாரசாமி வீடு.
(தாயும் மகனும் சம்பாஷித்தல்)

கம: தம்பி எங்கை பிள்ளையைக் காணம்?

குமார: அதையேன் அம்மா பறைவான். ஏன் நாயேன்று கவனிக்கிறதில்லை. அது குதிரை றேசும் படமும், உலாத்தும் என்று ஊரைச் சுத்துது.

கம: நீ ஏன்ரா கண்டிச்சால் என்ன?

குமார: ஏதாகிலும் கதைச்சால் நான் இப்ப அப்பா வீட்டுக்குப் போகிறேன். என்று சொல்லுகிருள். நான்கலேச்சால் உல கம் பகிடிபண்ணும். தான் சும்மா வரவில்லேயென்று முறைக் கிருள்.

கம: நீ இரண்டடி போட்டுப் பழக்கினுல் என்ன?

குமார: அம்மா! நான் என்ன செய்கிறது? அப்பா எப்படி உன்னு டைய எண்ணத்துக்கு விட்டாரோ அதேமாதிரி நானும் அவ ளின்ரை எண்ணத்துக்கு விட்டுவிட்டேன்.

கம: சரியெனக்குப் பசியாயிருக்குது ஏதாகிலும் கொண்டுவா.

குமார: இங்கை நாங்க அடுப்பு மூட்டுகிறதில்லே. கடையிலேதான் சாப்பாடு எடுத்துச் சாப்பிடுகிறேம். அவ தனக்குச் சமைக்கத் தெரியாதாம்.

கம: இது என்ன புதுமாதிரியான பெண்ணுயிருக்கு. நான் என்ரை எண்ணத்துக்கு நடந்தாலும், உங்கப்பாவுக்கு நேரத்துக்குச் சமைச்சுக் கொடுக்கத் தவறமாட்டேன். அவள் வரட்டும் நான் கதைக்கிறன்.

குமார: தயவு செய்து அம்மா அந்த விஷயத்திலே தலேயிடவேண் டாம். உங்களுக்கு அனுப்பச் சொன்ன காசையும் எடுத்து விளேயாட்டுப் பண்ணி விட்டாள். தாரமும் குருவும் தலேவிதிப்படி என்பார்கள். நான் குடுத்து வைச்சது இவ்வளவுதான்?

கம: இது கொப்பருக்கு நான் செய்த கொடுமை உனக்குக் கிடைச் சிருக்கு சரஸ்வதியின்ரை மகளே எடுத்திருந்தால் இந்தக் கெதி வந்திருக்காது.

குமார: நானும் அம்மா அதைத்தான் நினேத்தேன். அந்தப் பெண் அடக்கமான பெண். வீட்டுவேலேயெல்லாம் நன்ருகத் தெரியும். நீயும் அப்பாவும் சுகமில்லாமல் இருக்கும்போது மாமி எவ்வளவு அன்பாய்ப் பாத்தா நீ வெறுக்கவெறுக்க. தம்பிக்காவது மாமி யின்ரை மகளேச் செய்ய வேணும்.

கம: அதோ வருகிறதுபோலவிருக்கு. பிள்ளே! என்ன இவ்வளவு நேரமும் காணவில்லேயே?

குமார ம: நீங்க வந்தால் உங்களுவலேப் பார்த்துவிட்டுப் போங் கோ. எனக்கு இப்ப அவசரமாய்ப் போகவேணும்.

குமார: நான் ஒரு சாப்பாடு எடுத்துக்கொண்டு வாறேன். அம்மா வோடு கதையுங்கோ.

மனைவி: உங்கம்மாவோடு கதைக்க வேறையாரையும் பாருங்கோ எனக்கு வருகிறதைக் கொடுங்கோ நான் போறேன். [போகிருள்]

கம: தம்பி !எனக்கு இங்கிருக்கச் சந்திச்சுவராது. உனக்குக் கஷ்டம் கொடுக்க விருப்பமில்லை, விடிய என்னை இறயிலிலை ஏத்தி விடு.

குமார: படுங்கோ, நாளைக்கு நான் ஏற்றிவிடுகின்றேன்.

—❁—

## காட்சி 7.

இடம்: கமலம் வீடு.

[சுகமின்றிக் கமலம் படுத்திருத்தல்]

கம: இவ்வளவு பணமிருந்மென்ன? ஒரு சொட்டுச் சுடுதண்ணிதர ஆளில்லையே. தம்பி! தம்பி! எப்பன் தேத்தண்ணி கொண்டுவா?

சுப்பிர: சரியம்மா [திரும்புதல்] அம்மா மாமி வருகிரு.

கம: தம்பி மாமியைக் கொஞ்சம் கிட்டவரச்சொல்லு. இஞ்சை வாருங்கோ. எப்பன் தேத்தண்ணி வைச்சுத்தாருங்கோ.

(தேத்தண்ணி வைத்துக்கொண்டு வருதல்)

சரஸ்: இந்தாருங்கோ குடியுங்கோ.

கம: (தேத்தண்ணியைக் குடித்துவிட்டு) நான் இத்தனை நாளாய் உங்களை உதாசீனப்பண்ணினதுக்கு மன்னிக்கவேணும், எனக்குள்ள பணம் கண்ணை மறைச்சுப்போட்டுது.

சரஸ்: அதிலை இப்ப என்ன குறை வந்தது? தம்பி போய் டாக்குத்தர் இரத்தினத்தை கூட்டிக்கொண்டுவா.

சுப்பிர: அம்மா நான் போயிட்டு வாறேன்.

கம: போயிட்டுவா எனக்கு என்னமோ நம்பிக்கையில்லை. இண்டைக்கோ நாளைக்கோ எண்டிருக்குது.

சரஸ்: நான் இருக்கும்வரை நீங்க பயப்படவேண்டாம். நீங்க படுத்துக்கொள்ளுங்கோ.

கம: உங்க மகளை ஒருக்கா கூப்பிடுங்கோ. எனக்குப் பார்க்க ஆசையாயிருக்கு.

சரஸ்: தம்பி வரட்டும் கூட்டிவரச் சொல்லுவம்.

(டாக்குத்தர் இரத்தினம் வந்து பார்த்தல்)

இர: நீங்க நல்லாய்ச் சாப்பிடுங்கோ. ஒன்றுக்கும் பயப்படவேண்டாம், இப்ப இந்த மருந்தைக் குடியுங்கோ.

(டாக்குத்தரும் சரஸ்வதியும் தனியே கதைத்தல்)

கம: டாக்குத்தர் என்ன சொன்னார் ?

சரஸ்: இரண்டு நாளைக்குள் சுகம் வரும் என்று சொன்னார். இந்த மருந்தை குடியுங்கோ.

கம: சரி (மருந்தைக் குடித்துவிட்டுப் படுத்தல்)

சரஸ்: தம்பி அண்ணைக்குத் தந்தி குடுத்துவிட்டுப் பிள்ளையைக் கூட்டிக்கொண்டுவா. (சுப்பிரமணியம் போதல்)

(கமலம் கண்விழித்தல் சுப்பிரமணியமும் நல்லம்மாவையும் காணல்.)

கம: பிள்ளை! இஞ்சை வா. நீயல்லவா பெண். உனக்குக் குணமிருக்கு பணமில்லை. அறிவிருக்கு ஆடம்பரமில்லை· மூத்தவனுக்கு ஒண்டு கிடைச்சிருக்கு அது ஒரு பிசாசு. சீதனமிருக்கு. [குமாரசாமி வருதல்] எங்கையெடா அந்தச் சனியன். அவள் வேண்டாம். நீ சும்மாயிரு.

குமார: அம்மா அவள் ஒருவனோடு கூடிக்கொண்டு ஓடி விட்டாள்

கம: உன்னைப் பிடிச்ச சனியன் தொலைஞ்சுது சுப்பிரமணியம் இஞ்சைவா (நல்லம்மாவின் கையைப் பிடித்துக் கொடுத்து) உனக்குச் சீதனம் வேண்டாம். இவளின் குணம்தான் சீதனம். நீ இவளைக் கா...ப்...பாற்...று. சரஸ்வதி என்னை மன்னித்துவிடு. சீதனத்தால் உன் சிறப்பை உணரவில்லை. [சேடம் இழுத்துக் கண்ணை மூடல்]

[யாவரும் அழுதல்]

# கா(த)ல் முறிவு

## கதா பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| நடராசா | (நடரா) | ... ஒருதாவர சாஸ்திர மாணவன் |
| கனகசுந்தரம் | (கனக) | ... நடராசாவின் நண்பன். |
| கலாதேவி | (கலா) | ... நடராசன் விரும்பிய கன்னி |
| வேலாயுதம் [தபாற்காரன்] | (வேலா) | ... நடராசன் தந்தை |

### காட்சி 1 ஒன்று

இடம்: நடராசன் படிப்பறை நேரம். மாலை

நடரா: (புத்தகத்தை வைத்துக்கொண்டு) கலா! நின் நாவற்பழக் கேசமும், நாரத்தங்காய்ச் சுளை நெற்றியும், கோவைப்பழ உதடும், குமிழம்பழ மூக்கும், மாதுளங்கனி மார்பகமும், ஈச்சங்காய்ப் பற்களும், வெண்டிக்காய் விரல்களும், என்னுள்ளத்தை பலாப்பழ முட்கள் போல குத்துகின்றனவே. என்னன்பே! மாங்காய்ப் பிளவு அன்ன கண்களால் தேங்காய்ப்பால் மொழிபேசும் போதெல்லாம் என் உள்ளத்தில் உண்டாகும் இன்பத்தை என்னென்று சொல்வேன். [கனகசுந்தரம் வரல்]

கனக: காய் கனிக் கவிராயரே! நீயும் நின் காதலியும் நெடுநாள் வாழ்க! உன் தாவர சாஸ்திர அறிவு தலைக்குமேல், காட்டு முந்திரிகை விதைபோல் புறப்பட்டு விட்டதே! அந்தக் க(ன்)னி யாரப்பா?

நடரா: போடா மடையா! நான் ஒரு வருணனை புது முறையில் எழுதி வாசித்தேன். நீ பெண்ணென்றால் ஏதோ காமுகன் என்று என்னை நினைத்துவிட்டாய்? என் செய்வது? காலத்தின் கோலம் இது.

கனக: டேய்! நான் மடையன்தான். நீ கால்முறிந்து கிடந்த நேரத்தில் மடைவேலை செய்தேன் அல்லவா? அதிருக்கட்டும் நான் கேள்விப்பட்டது நிசமா?

நடரா: என்ன கேள்விப்பட்டாய்? கடுகு நாவற் பழத்திற்கு விதையில்லை யென்று? நீயொரு பூவின் பெயர் சொல்லு.

கனக: சாத்திரம் சொல்லப் போகின்றுயா?

நடரா: நீ நினைப்பதைச் சாத்திரம் பார்த்துத்தானே சொல்லவேண்டும். பழங்கள் கொண்டுவந்தாயா?

கனக: பழங்கள், என்டா? மாதுமையலோடு, குறுக்கமும் பழகிவிட்டாயா?

நடரா: இல்லையடா! அவள் கனிந்துவிட்டாள், கனியாகிவிட்டாள் எட்டாக் கனியாய் இருப்பதால் அவளை நினைத்துக் கொட்டாவி விடுகின்றார்கள் பலர். அக்கனி என்கையில் வந்து விழப்போகின்றது. அதைப் பார்த்துப் பார்த்து இரசிப்பேன்?

கனக: டேய்! ஏன்டா படிக்கிற காலத்தில் காதல் கீதல் எல்லாம் விளாம்பழ ஓடுபோல இருக்கவேண்டுமடா?

நடரா: கனகு! கல்விக்கும் காதலுக்கும் தொடர்பிருக்கின்றது. புள்ளி இல்லாக் கல்வியே கல்லூரிகளில் நடக்கின்றது.

கனக: அதற்காகத் தாண்டா "பள்ளிப் படிப்புப் புள்ளிக்கும் உதவாது" என்று சொல்லியுள்ளார்கள்.

நடரா: கனகு! நீ இப்படிப் பெண்களை வெறுப்பாய் என்று நினைக்கவில்லை. ஆவதும் பெண்ணாலே, ஆடி அடங்குவதும் பெண்ணுக்குள்ளே! என்று பெரியோர்கள் பாடியுள்ளார்கள். ஆங்கில மொழியைப் பார், ஆணின் பெயராகிய HE என்பது பெண்ணின் பெயராகிய SHE என்னும் சொல்லிலும், MAN என்பது WOMAN என்பதிலும் அடங்குவதை நீ கவனிக்கவில்லையா?

கனக: அதற்காக ஊசியைத் தொடரும் நூல்போல அவள் பின்னால் சதாதிரியலாமா?

நடரா: நீ இது அவளைக் கேட்க வேண்டியகேள்வி. அவள் உனக்குப் பரிச தீட்சை அளிப்பாள்.

கனக; நீ அப்போது ஒத்துக் கொள்கின்றாய்? நல்லது.

நடரா: கல் கட்டாப் புடலங்காய்போல வளையச் சொல்கிறாயா?

கனக: அவள் நுங்குத் தண்ணீர்போல இனிமையாகப் பேசி, பலாப் பால் போல உன்னைத் தன்னோடு ஒட்டவைத்து விட்டாள்.

நடரா: அவள் வாழைப்பழத் தோல்நிறத்தில் காளையர் எல்லாரும் கருத்தைப் பறிகொடுத்துவிட்டனர், உனக்குப் பெண்களென்றால் பாகற்காயா?

கனக: அவள் வாழைப்பழத் தோல்தான். அந்தத் தோலில் கால் வைத்து வழுக்கி விழுந்து கா(த)ல் முறிந்தவர்கள் பலர்,

நடரா: எட்டாப் பழமாய் அவள் இருக்கக் கொட்டாவி விடுகின்றனர் பலர், என்னிடம் சிட்டாய்ப் பறந்து வருகின்றாள். மிட்டாய்

வாங்கிக் கொடுத்த குழந்தைபோல என்னோடு பழகுகின்றாள்.

கனக: கன்னி என்பதை மறந்து கனியென்று புசிக்கப் பார்க்கிறாய்' உன்னிஷ்டம். நான் வருகின்றேன். (போதல்)

## காட்சி 2

இடம்: யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி நேரம்: நண்பகல்

[சில நாட்களின் பின் கலா யாழ்ப்பாணத்தில் மின்சார நிலைய வீதியில் நடந்து செல்லல். கனகசுந்தரமும் பின் செல்லல்.]

கலா: (திரும்பி) என்ன மிஸ்ரர் நீங்கள் நிழல்போலத் தொடர்கின்றீர்களே! நீங்கள் செய்வது கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. பெண்கள் வீதியில் தனியே போக முடியாது போல விருக்கின்றது.

கனக: மன்னிக்கவேண்டும். நீங்கள் தவறுதலாக நினைத்து விட்டீர்கள்.

கலா: நான் உங்களை நினைப்பதா? தவறுதலாக என்று எப்படிச் சொல்ல முடியும். பஸ்சிலே ஏறும் பொழுதும், திரும்ப பஸ்சிக்குள் பிறேக் போடும்போதும் வேணும் என்று என்மீது முட்டினீர்கள்.

கனக: நீங்கள் என் மீது கோபிக்கின்றீர்கள். முருக்கங்காய்க் கட்டுப் போட்டு இடையிற் செருகுவது போல இ.போ.ச பஸ்சிலே 1 க்கு 2 என்ற விகிதத்தில் ஏற்றுகின்றார்கள். தவறுதலாகப் பட்டுவிட்டது.

கலா: எப்படி என்றாலும் நீங்கள் என்னைப் பார்த்து இஞ்சி தின்ற குரங்கு போலப் பல்லைக் காட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. எல்லோரும் ஆரம்பத்தில் இப்படித்தான். முதற் [சிரிப்பார்கள். அடுத்த நாள் கதைப்பார்கள். மூன்றாம நாள் காதற் கடிதம் தீட்டுவார்கள். இப்படி நீங்கள் என் பின்னாலேயே வந்தால் நேரே பொலிஸ் ஸ்ரேசனுக்குத் தான் போக வேண்டும்.

கனக: (நடுக்கத்துடன்) நீங்கள் நினைப்பது தவறு. நான் வந்து......

கலா: நீங்கள் வரவும் வேண்டாம், போகவும் வேண்டாம், விசுவாமித்திரர் பரம் பரையா? அவரும்......

கனக: நான் பெண்களைத் தெய்வமாக மதிப்பவன். பெண்களுடன் கதைக்கவோ கால்கள் தந்தி அடிக்கும்.

கலா: எங்கே போகின்றீர்கள்?

கனக: நான் சிநேகிதன் ஒருவனைப் பார்ப்பதற்கு ஆசுபத்திரிக்குப் போகின்றேன்.

கலா: நான் அங்குபோவதை அறிந்துதானே நீங்களும் வருகின்றீர்கள்? ஆசுபத்திரி மேற்பார்வை உங்கள் பொறுப்பா?

(போகிருள். நடராசா வரல்)

நடரா: கனகு! உன் நாடகம் நன்கு தெரிகின்றது. இதற்காகத்தான் என்னை வெறுக்கும்படி புத்தி புகட்டினுய்?

கனகு: நம்பு நட.

நடரா: நடவா? அட துரோகி! என் காதல் வாழ்வில் வில்லன் நீ. ஊருக்கு உபதேசம் செய்த பல்லி கூழ்ப்பானைக்குள் விழுந்ததாம். இனிமேல் உனக்கு எலுமிச்சம் பழந்தான் தலையில் வைக்கவேண்டும்.

கனகு: நட! என்னை நீ இன்னும் புரிந்து கொள்ளவில்லை. புரியும் காலம் வரும்.

நடரா: கைப்புண்ணுக்குக் கண்ணுடி வேண்டுமா?

கனக: நட! உனக்குக் காதற் சுரம் பிடித்துவிட்டது. கிணற்று நீரை வெள்ளம் கொண்டுபோகாது.

நடரா: சுரம்பாடாதே. அவளைக் கேட்டறிந்து கொள்கின்றேன். அதன் பின் நடராசன் நடத்தையைப் பார்.

கனக: மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். நீ அன்பாகப் பண்பான முறையில் பழகும் பெண்ணைத் தவறுதலாகப் புரிந்து கொண்டாய். அவள் பேசும் இன்சொல்லால் உள்ளம் குளிர்ச்சி அடைகின்றது. உண்மையான அன்புவைத்த என்னைச் சந்தேகப்படுகிருய்! நான் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் உனக்கு விபரீதமாகத்தென்படும். நான் வருகின்றேன்.

நடரா: உனக்குக் காதலின் அருமை விளங்கவில்லை. கல்யாணக் காட்டைப் பார்த்துக் கவலைப்படு. போ.

(கனகசுந்தரம் போதல்)

## காட்சி 3.

இடம்: நடராசன் படிப்பறை நேரம்: காலை

[நடராசன் தன் காதலியை நினைத்து இன்பம் கொண்டிருத்தல் திருமண நாளை எண்ணிக்கொண்டிருத்தல்]

நடரா: [தனக்குள்] கலா! எங்கள் காதலைக் கடவுள் வந்தாலும்

தடுக்க முடியாது. கனகு இருந்தான் அன்று நீ அவன் முகத்திற் கரிபூசிவிட்டாய். நீயல்லவா பெண். பாரதி சொன்ன புதுமைப் பெண்.

(தகப்பன் வேலாயுதம் வரல்)

வேலா: டேய்! உதுதானா பாடம் படிக்கிற முறை? அந்தக்காலத்தில் இரவு இரவாய் தண்ணீருக்குள் காலைவைத்து, மூக்குப் பொடி போட்டுக்கொண்டு படிப்பேன். கல்யாணம் செய்யும்போது கூடக் கல்யாணம் என்றால் என்னென்று தெரியாது. நீ யென்னென்றால் ஏதோ கலா கலா என்று, மனப்பாடம் செய்யும் நடிகர் போல நெட்டுருப் பண்ணுகிறாய்.

நடரா: அப்பா! நீங்கள் தலையைத்தான் கொய்தாலும் அவளைத்தான் கல்யாணம் செய்யப்போகிறேன். இதைஉங்களிடம் சொல்லவேண்டும் என்று இருக்கிறேன்.

வேலா: அன்பாய்ப்பழகிற பெண்ணைக் காதல் கொண்டுள்ளாள் என்று நினைப்பது– இன்பங்கொள்வது– கனவுக் கோட்டைகள் கட்டுவது அறியாமை.

நடரா: இல்லையப்பா! அவள் என்மீது உயிரையே வைத்துள்ளாள். நான் கால் முறிந்து கிடந்த நேரத்தில் எத்தனை நாள் வந்து பார்த்தாள். இது ஒன்று போதாதா?

வேலா: அதற்காக, உனக்கு இரத்ததானம் செய்து தன் உடம்பையே உருக்குலைத்த உற்ற நண்பனைப் பகைத்துவிட்டாய்.

நடரா: அவன் ஒரு சாம்பிராணி அப்பா!

வேலா: அவன் சாம்பிராணிதான். தன் உடம்பை அழித்துச் சாம்பிராணி போல் உனக்கு மணம் தந்தானல்லவா? நான் கலாவின் தகப்பனுடன் கதைக்கிறேன்.

(போதல்)

[தபாற்காரன் கடிதமும், திருமண அழைப்பிதழ் ஒன்றும் கொடுத்தல். நடராசா விரித்துப் பார்த்துவிட்டு அண்ணாந்து பார்த்தபடி இருத்தல்.]

கனக: என்னடா! விண்ணை நோக்கியபடி இருக்கின்றாய்? கையில் என்ன?

நடரா: அந்தச் சனியன் கலாவின் கடிதமும், திருமண அழைப்பிதழும்.

கனக. என்ன எழுதியிருக்கின்றாள்? கல்யாண வீட்டிற்கு வந்து நடத்தும்படியா?

நடரா: கனகு! என்னை மன்னித்துவிடு. அன்பாகப் பழகும் பெண்களை —அவளைப் புரியாமல் புரிந்துகொண்டு நடந்தது என் அறி

யாமை. அது அவர்கள் தவறல்ல. எண்ணும் எங்கள் தவறே யாம். ஆசைக்கு அறிவைப் பலி செய்து விட்டேன். அவளை நினைத்து உண்மை நண்பனுயிருந்த உன்னை உதாசீனம் செய்தேன்.

கனக: நடப்பது நடந்து விட்டது. நீயல்ல உன்னைப் போல் எத்தனையோ பேர் இருக்கின்றனர்கள் கா(த)ல் முறிவு ஏற்பட்டவர்கள். ஆசை மனிதனைப் பிறவியெடுக்கச் செய்கின்றது. புடைவைக் கடையில் இருக்கும் உருவங்களைக் கண்டு மரமாகின்றவர்கள் பலர்.

நடரா: அவள் எனது கண்ணைத் திறந்துவிட்டாள்.

கனக: எப்படி?

நடரா: உன்னைப்பற்றி நன்னடத்தைப் பத்திரமும் வழங்கியுள்ளாள். உன் சினேகிதத்தை வெறுத்த எனக்கு...... படிப்பித்து விட்ட கலாதேவி அவள்.

கனக: இன்று "வீர விஜயன்" என்ற படமாம். வா பார்த்துவிட்டு வருவோம். தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்.

(இருவரும் படம் பார்க்கப்போதல்)

——✂——

# கறுப்பு

## கதா பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| குமாரசாமி | (குமார) | ... | வீட்டுக்காரர் |
| செல்லம்மா | (செல்) | ... | மனைவி |
| தெய்வயானை | (தெய்வ) | ... | மகள் |
| மனோன்மணி | (மனோ) | ... | தெய்வயானையின் சிநேகிதி |
| யோகரத்தினம் | (யோக) | ... | தமக்கையின் மகன் |
| செல்வராசா | (செல்வ) | ... | யோகரத்தினத்தின் சிநேகிதன் |

## காட்சி 1

இடம்: குமாரசாமி வீடு நேரம், மாலை

[குமாரசாமி வேதனையுடன் இருத்தல். மனைவி செல்லம்மா அடுக்களையிலிருந்து வருதல்]

செல்: என்னங்க நீங்கள் பிடித்துவைத்த பிள்ளையார் மாதிரி உட்கார்ந்திருக்கின்றீர்கள். அவர்கள் இன்று அல்லவா முற்றுச் சொல்வதாகச் சொன்னார்கள். சென்று விசாரித்து வாருங்களேன்.

குமார: எதை நான் சென்று விசாரிப்பது? அவர்கள் தாமே முகத்தில் அடித்தமாதிரி பெண் பிடிக்கவில்லையென்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

செல்: பெண்ணுக்கு என்ன குறையாம்?

குமார: பெண்ணுக்கு ஒரு குறைவுமில்லையாம், ஆனால் நிறம்தான்......

செல்: மாப்பிள்ளையின் எண்ணம் தான் ஏதோ செம்பாட்டு மாம்பழம் போல என்று. அவரைப்பார்த்தால் ஓட்டுக் கரி......

குமார: உலகம் அப்படித்தானே நடக்கின்றது. வாலிபப் பையன்கள் எல்லாம் கறுப்பு நிறம் என்றால் உடனே வேண்டாம் என்று சொல்லிவிடுகின்றார்கள். அவர்கள் தங்கள் நிறத்தைப் பற்றி அக்கறையே கொள்வதில்லை.

செல்: நான் தெரியாமற் கேட்கின்றேன் உலகத்தில் உள்ளவர்கள் எல்லோரும் கறுப்பு நிறத்தை வெறுத்தால் கறுப்பு நிறமுள்ள குமர்ப்பெண்களின் கதி என்ன? அவர்கள் வீட்டிலேதான் எப்போதும் குமராக இருக்கவேண்டியதுதானே.

குமார: சாதாரணமாகச் சொல்லுவார்கள் "ஐந்தாறுபெண் பிறந்தால்

அரசனும் ஆண்டியாவான்" என்று. ஆனால் ஐந்தாறு பெண் கறுப்பாகப் பிறந்துவிட்டால் அவன் வாழ்க்கை கவலைக்கிடமானது தான்.

செல்: நீங்கள் அடிக்கடி சொல்லுவீர்கள் இராமபிரான் உமாதேவி யார் யாவரும் கறுப்பு நிறமென்று. இராமனைக்கண்ட பெண்கள் எப்படிக் கஷ்டப்பட்டார்களாம். அவர்கள் எல்லோரையும் புகழும் உலகம் கறுப்பென்றால் வெறுக்கின்றது.

குமார: எல்லோரும் அப்படித்தான். உனது மகள் கறுப்பில்லாவிட்டால் இந்த எண்ணம் எண்ணமாட்டாய். எல்லாவற்றிற்கும் நாம் நியாயம் கண்டுபிடித்து பேசிவிடலாம். தலையிடியும் தனக்கு வந்தாற்றான் தெரியும்.

செல்: நாலு பணம் கையில் இருந்தால் என்ன குறையையும் நிவிர்த்தி செய்யலாம். கடவுளாகப் பார்த்து இப்போது எங்கள் கையையும் வறளச் செய்துவிட்டார். படலையைத் திறந்து சென்றவர்கள் எத்தனை பேர்?

குமார: நான், செய்வது என்னவென்று தெரியாமல் கஷ்டப்படுகின்றேன். வெளியிலே கூடத் தலைகாட்ட முடியாமல் இருக்கின்றது.

செல்: அக்காவின் பிள்ளை பிள்ளையென்று சொல்லிச் சொல்லி உள்ள காணி பூமி நகை நட்டு எல்லாவற்றையும் அடகு வைத்துப்படிப்பித்தீர்கள். அக்கா மகனாலேதான் இப்போது எங்களுக்கு இக் கதிவந்தது. அவனுக்குச் செலவுசெய்த பணமிருந்தால் இப்போது எத்தனைபேர் பறந்தடித்து வருவார்கள்.

குமார: குணத்திற்கு மரியாதை கொடுத்தகாலம் மலையேறிவிட்டது. இந்தக் காலத்தில் பணமிருக்க வேண்டும். அல்லாவிட்டால் அழகிருக்க வேண்டும். இலந்தைப்பழப் புழுப்போல் இருந்தால் இளைஞர்கள் கடத்திச்செல்ல முயற்சி செய்வார்கள்.

செல்: எனக்கு எந்நேரமும் மகளைப்பற்றிய யோசனை தான். கடவுள் எப்போது தான் கண்விழிப்பாரோ தெரியவில்லை.

குமார: உனக்கு என்ன? எனக்கும் தான் அந்த எண்ணம். கலியாணம் ஒன்று செய்து கண்ணாற் பார்க்கவேண்டும் என்ற ஆசை. அக்காவின் மகனைத்தான் கேட்கலாம் என்று யோசிக்கின்றேன்

செல்: அந்தப்பிள்ளையை நம்பித்தானே நீங்களும் காசைச் செலவு செய்தீர்கள். பையன் கடைசியில் கையை விரித்துப்போட்டு மயில் வாகனம் வீட்டில் அடுகிடை படுகிடையாய்ப் படுத்துவிட்டான் அவர்களாவது அதைப்பற்றி எள்ளளவும் நினைக்கவில்லை.

குமார: அவர்கள் தங்களுக்கு ஒருபொடியன் கிடைத்துவிட்டானே என்று மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ளார்கள். பாடுபட்டுப்

படிப்பித்தவனை ஏன் யோசிக்கப்போகின்றீர்கள்? தாங்கள் தப்ப வழிபார்க்கின்றீர்கள்.

செல்: எப்படியென்றாலும் நீங்கள் பையனை ஒருகாற்கண்டு கதைத்துப் பாருங்கள். நன்றியுள்ளபையன் என்றால் சம்மதிக்கும். அல்லா விட்டால் என்ன செய்வது?

குமார: சரி நான் கேட்டுப் பார்க்கின்றேன்.

## காட்சி 2

இடம்: தையல் நிலையம் நேரம்: காலை

மனோன்: வா, வா. இரண்டு மூன்று நாட்களாகக் காணோம்.

தெய்வ: வீட்டிலே வேலையிருந்தது. அதனால் வரவில்லை.

மனோன்: வேலையதிகமாகத்தான் இருக்கும். மிஸ்சிஸ் ஆகப்போகின்றாய் அல்லவா? மகிழ்ச்சியினால் ஆனந்தக்கண்ணீர் வருகின்றது

தெய்வ: மனோன்! உனக்கு என்ன தெரியப் போகின்றது? எத்தனை இளைஞர்கள் எல்லாம் அண்ணன் சாட்டிலே பாற்பானையைப் பூனை சுற்றுவது போல் உங்கள் வீட்டைச் சுற்றுகின்றார்கள்.

மனோன்: ஏதோவெல்லாம் கதைக்கின்றாய்? விஷயத்தைச் சொல்

தெய்வ: மனோன்! மன்னித்துக்கொள். ஆத்திரத்திலே ஏதோவெல்லாம் பேசிவிட்டேன். வருகின்றவர்கள் எல்லோரும் பணத்தையும் நிறத்தையும் தான் விருப்புகிறார்கள். இரண்டும் என்னிடம் இல்லை. பெரும்பாலும் நிறம் கறுப்பென்றுதான் சொல்லித் தட்டிக் கழித்துவிடுகின்றார்கள்.

மனோன்: இந்த விடயத்தைக் கேட்டதையிட்டு மன்னித்துக்கொள். இரண்டொரு வெண்மயிரைக் கண்டு நரையென்று வெறுத்துத் தள்ளும் உலகம் கருமையைக் கண்டு ஏன் வெறுப்புக்கொள்கின்றது? கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்? மைத்துனன்தானே மலைபோலவிருக்கின்றார்.

தெய்வ: அவர்தானே தன்மீது கட்டி அடித்துவிடுவார்கள் என்று வீட்டையே விட்டு வெளியேறினார். என்முன்பாகவே கறுப்பு நிறமுள்ள கன்னியரை கழுவின நெருப்புத்தணல் என்று கிண்டல் செய்வார்.

மனோன்: அப்படியா சங்கதி? உன்பெற்றார் செய்தநன்றியையும் மறந்து உன்னையும் உதாசீனம் செய்து திரிகின்ற நாய்களை வீட்டை விட்டுத் துரத்தவேண்டும்.

தெய்வ: அப்படியாயின் அவர்மீது உங்களுக்கு விருப்பமில்லையா?

மனோன்: நான் அந்தரங்க சுத்தியுடன் சொல்கின்றேன். உண்மையில் அவர்மீது எனக்கு விருப்பமில்லை. எனக்கு அவர் வீட்டிலே இருப்பதுகூட விருப்பமில்லை. வெள்ளை உள்ளம் படைத்தவபோல் நடித்து அப்பாவை மயக்கி விட்டார்.

தெய்வ: நீங்கள் அவரை விவாகம் செய்ய மாட்டீர்களா? அப்படியாயின் அவர் ஏன் அங்கே தங்குகின்றார்?

மனோன்: நிச்சயமாகச் சொல்கின்றேன். நான் அவரை விவாகம் செய்யமாட்டேன். அவர் தகப்பனாருடன் சேர்ந்து திரிகின்றார். நான் என் செய்வது? நீ சந்தேகப்படுகின்றாய் போலவிருக்கின்றது.

தெய்வ: அவர் அங்கேயிருக்கட்டும். நான் விவாகம் செய்வதில்லை என்று எண்ணியிருக்கின்றேன். நேசாகச் சேர்ந்து பணியாற்ற விரும்புகின்றேன்.

மனோன்: சிநேகிதி! நீ யொன்றுக்கும் யோசியாதே. நான் எதுவிதத்திலும் அவர் உன்னைக் கல்யாணம் செய்யும்படி செய்கின்றேன்.

தெய்வ: அவருக்கு என்மீது விருப்பமில்லை. அவரை விவாகம் செய்து என்ன சுகத்தைக்காணப் போகின்றேன்.

மனோன்: அந்த விருப்பமின்மை படித்துப் பட்டம் பெற்றபின் ஏற்பட்டதுதானே? செய்நன்றி மறந்தவர்களைச் சும்மா விடக்கூடாது. நான் முயற்சி செய்கின்றேன்.

தெய்வ: மனோ! உன்னிஷ்டம். மற்றவர்களும் வருகின்றார்கள்

## காட்சி 3

இடம்: மனோன்மணி வீடு நேரம்: மாலை

(மனோன்மணியும் தந்தையும் தாயும் படம் பார்க்கப் போய்விட்டார்கள். யோகரத்தினம் கதைப்புத்தகம் வாசித்துக் கொண்டிருத்தல்)

குமார: யோகம்! இவர்கள் ஒருவரையும் காணவில்லையே?

யோக: அவர்கள் எங்கேயோ போய்விட்டார்கள். அவர்கள் ஒருவரும் இங்கேயில்லை.

குமார: நன்றாய்ப்போச்சு. உன்னோடு தனிமையாகக் கதைக்கவேண்டும் என்று இருந்தேன்.

யோக: நீங்கள் ஏன் வந்தீர்கள் என்று எனக்குத் தெரியும். அதற்கு வேறு யாரையும் பார்க்கவேண்டும். அந்த விடயத்தைத் தவிர வேறு எந்த விடயத்தைக் கேட்டாலும் செய்யத் தயாராகவிருக்கின்றேன்.

குமார: நீ எனக்கு வேறு ஒன்றும் செய்யவேண்டாம். இந்த ஒரு உதவியையும் செய்தாற் போதும். எவ்வளவுகாலமாகப் பெண்ணை வீட்டிலே வைத்திருக்கிறது. வயதும் ஏறிக்கொண்டல்லவா போகின்றது.

யோக: நான் என்ன செய்கிறது? நீங்கள் வேறு எங்கேயாவது பார்த்துச் செய்தால் நன்று. நானும் வேண்டிய உதவி செய்கின்றேன்.

குமார: தம்பி எங்கள் கையும் வறண்டுவிட்டது. இருந்த பணத்தையும் உன்னை நம்பிச் செலவுசெய்து விட்டோம். வேறு யாருக்கும் செய்யலாம் என்றால் சிலர் கறுப்பு என்கிறார்கள். சிலர் பணமில்லை என்கிறார்கள்.

யோகம்: எனது படிப்பிற்காக நீங்கள் பணம் செலவுசெய்தது உண்மைதான். அதற்காக நான் உங்கள் மகளைக் கட்டி வீட்டிலே பூட்டி வைத்துத்திரிய விருப்பமில்லை. உங்கள் பணத்தை உழைத்துத் தருகின்றேன்.

குமார: நீ சொல்வதைப் பார்த்தால் கறுப்பு நிறமுள்ளபெண்களைக் கட்டியவர்கள் எல்லோரும் வீட்டிற்குள் பூட்டிவைத்துவிட்டு திரிகின்றார்கள் போலல்லவா இருக்கின்றது? நான் பணத்தைத் தரும்படி கேட்கவில்லை.

யோக: மற்றவர்களைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. எனக்குளத்தனையோ சினேகிதர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரும் என்னைக் கேலிசெய்வார்கள்.

குமார: நீதானே இப்போது எனக்கு மற்றவர்களைப்பற்றி அக்கறை இல்லை என்று சொன்னாய்? மற்றவர்கள் பகிடி பண்ணுவார்கள் என்று அக்கறை கொள்கின்றாய்?

யோகம்: அதற்கெல்லாம் விளக்கம் சொல்ல நான் தயாராகவில்லை? நீங்கள் வேறெங்காகிலும் பார்த்துச் செய்யுங்கள்.

குமார: உன்பெற்றோர்கள் என்னிடம் ஒப்படைத்த குற்றத்திற்காக நான் எனது கடமையைச் செவ்வனே செய்துமுடித்தேன். நீ உன் கடமையை உதாசீனம் செய்தால் உலகம் தூற்றும்.

யோகம்: உலகம் நன்றாகத் தூற்றட்டும். நீங்கள் இத்தகைய நோக்கத்தை மனதில் வைத்திருந்ததை அறிந்துதானே வீட்டைவிட்டு

வெளியேறினேன். நீங்கள் இத்தனை பாடுபட்டது சுயநலத்திற் காகத்தானே?

குமார: உன்னுடன் கதைப்பதில் பிரயோசனம் இல்லை. மகளின் பெருமூச்சு உன்னைச் சுட்டுப் பொசுக்காமல் விடாது. அவள் எவ்வளவு அன்பாக 'அத்தான்', 'அத்தான்' என்று உன்மேல் உயிர் வைத்திருந்தாளே. அதற்கு நீ செய்யும் கைம்மாறு இது தானு?

யோக: உங்களிலும் பார்க்க நான் நாலைந்து புத்தகம் கூட வாசித் திருக்கிறேன். அவள் மூச்சு என்னைச் சுட்டுப் பொசுக்கட்டும். அப்போது நீங்கள் பார்த்துச் சந்தோஷம் கொண்டாடுங்கள்.

குமார: நிறத்திலே இவ்வளவு பேதம்காட்டத் துணிந்துவிட்டாய், நிறம்தானே உன்னையும் எங்களையும் பிரித்துவிட்டது.

யோக: நீங்கள் ஏன் கஷ்டப்படுகின்றீர்கள்? எத்தனைபேர் பெண் ணுக்காகத் தவண்டை அடிக்கின்றுர்கள். சொத்தியோ, குருடோ. கிழமோ ஒன்றைக் கட்டிக்கொடுங்கள். நானும் முயற்சி செய்கி றேன்.

குமார: அநாவசியமாக ஆத்திரத்தைக் கிளப்பாதே. தெய்வயானை உன்னைத்தான் செய்தால் செய்கிறதாம். இல்லாவிட்டால் ஆசுப் பத்திரித் தாதியாகச்சேர்ந்து தொண்டுசெய்வதெனத் தீர்மானித்து விட்டாள்.

யோக: அதுவும் நல்ல தீர்மானம். அதற்குவேண்டிய உதவியை நான் செய்கிறேன்.

குமார: உன்னை யோசனைகேட்க நான் வரவில்லை. கடைசிமுறை யாகக் கேட்கிறேன். நீ என்மகளைக் கல்யாணம் செய்வாயா? இல்லையா?

யோக: செய்யமுடியாது.

குமார: வருகின்றேன்.

## காட்சி 4.

இடம்; மனோன்மணி வீடு. நேரம்: இரவு

செல்லை: என்ன யோகம். மாமா வந்துவிட்டுப் போகின்றுர்.

யோக: மாமாவாம். மாமா. அந்தக் கதையை ஏன் பேசுவான்?

செல்வ: ஒருவரும் இல்லாத நேரமாகப்பார்த்து வந்துவிட்டுப்போகிருரே.

யோக: அவர் தனது கருங்குயிலை என்மீது கட்டியடிக்கப் பார்க்கின்ருர்.

செல்வ: நீ அதற்கு என்ன சொன்ஞய்?

யோக: நான் மாட்டேனென்று முடிவாகச் சொல்லிவிட்டேன்.

செல்வ: நீயென்ன முற்றந்துறந்த முனிவர்போலப் பெண்களை வெறுக்கின்ருய்.

யோக: நான் விவாகம் செய்யத்தான்போகின்றேன். ஆனல் அந்தக் கழுவின நெருப்புத்தணலை அல்ல.

செல்வ: கழுவின நெருப்புத்தணல் என்று கதைக்கின்ருயே? என்னையும் அப்படித்தானே சொல்லுவாய்?

யோக: செல்வம்! ஆண்களை நான் ஏன் வெறுக்கப்போகின்றேன்? அந்தப்பெண்ணை நான் கட்டிக்கொண்டு எப்படி வெளியிற் செல்வது? நினைக்கவே வெறுப்பாகவிருக்கின்றது.

செல்வ: நீ என்ன முன்பு படிக்கவில்லையா? "கறுப்பின்கண் மிக்குள்ளது அழகு" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கின்ருர்கள். கறுப்பென்ருலும் நல்ல முகவெட்டும் இலட்சணமும் உள்ள பெண்ணல்லவா? அவள் குணம் தங்கப்பவுண். அவளை நீ கட்டாயம் கல்யாணம் செய்யவேண்டும்.

யோக: செல்வா! இந்த விடயத்தில் நீ என்னைத் தொந்தரவு செய்யாதே. எனக்குக் கறுப்பென்ருல் உயிரைக் கொண்டுபோவது மாதிரியிருக்கின்றது.

செல்வ: தெய்வயானை உன்மீது உயிரையல்லவா வைத்திருக்கின்ருள். உனது செலவுக்கெல்லாம் வீட்டுக்காரருக்குத் தெரியாமல் எவ்வளவு பணத்தைத் தந்தாள். உனக்கு வருத்தம் வந்தபோது அனற்புழுப்போலத் துடித்தவளை நீ மறக்கலாமா?

யோக. செல்வா! விருப்பம் இல்லாத பெண்ணை விவாகம்செய்து என்னத்தைக் காண்பது? எப்பொழுதும் கீரியும் பாம்புமாய்ச் சண்டையல்லவா போடவேண்டும்?

செல்வ: நீ பெற்ருேரை இழந்தநாட்தொடக்கம் தங்கள் மகன்போல எவ்வளவு பாடுபட்டு வளர்த்தார்கள்; படிப்பித்துப் பட்டதாரியாக்கினர்கள். உனது படிப்பிற்குத் தந்த பணத்தை இப்போது வைத்திருந்தால் அதைக்கொடுத்தாவது அவளை யாருக்கும் கட்

டிக் கொடுப்பார்களே. அவர்கள் உன்னை நம்பித்தான் இருந் தார்கள். இப்படி நம்பிக்கைத்துரோகம் செய்யலாமா?

யோக: அவர்கள் நம்பியிருந்தால் நான் அதற்குப் பொறுப்பாளியா? அவர்கள் எனக்காகப் பணம் செலவழித்தார்கள் என்று சொல்கின் றுயே. அது உண்மைதான். அவர்கள் பணத்தைக் கொடுக்க இப்போது என்னிடம் பணம் ஏது? ஆறுதலாகக் கொடுக்கலாம். அவர்கள் இப்படிக் கதைக்கும்படி உன்னிடம் சொன்னார்களா?

செல்வ: அவர்களை நான் காணவும் இல்லை. கதைக்கவும் இல்லை. ஊரில் உள்ளவர்கள் யாவரும் உன்னைச் செய்ந்நன்றி மறந்த வன் என்று பேசுகின்றார்கள்.

யோக: அவர்களுக்கு என்ன தெரியும்? செய்ந்நன்றி மறந்த வன் என்று சொன்னாற் சொல்லட்டும். எனது மனமோ அவளை விரும்பவில்லை.

செல்வ: அப்படியாயின் நீ யாரையோ மனதில் நினைத்துவைத்திருக் கின்றாய். என்னிடம் ஒளியாமற்சொல்.

யோக: இப்போது அதையெனக்கு வெளியிற்சொல்ல விருப்ப மில்லை. போகப்போக எல்லாம் தெரியும்.

செல்வ: நீ போகப்போக எல்லாம் தெரியும் என்கிறாயே, நீ விரும் பும் பெண் உன்னை விரும்பாவிட்டால் என்ன செய்வாய்?

யோக: இதற்காகவா யோசிக்கவேண்டும். "காதல்போயிற் சாதல் நன்று" என்று பாரதியார் சொன்னார்.

செல்வ: பாரதியார் காதல் என்று சொன்னது அன்பையே. ஒருவ னிடத்தில் அன்பு இல்லாவிட்டால் அவன் அன்றே இறப்பது மேல் என்ற பொருளிற்றான் பாரதியார் பாடியுள்ளார். இப்போது அதற்குத் தப்பான அர்த்தம் கொடுக்கின்றார்கள்.

யோக: இது உன்னுடைய புத்துரையா?

செல்வ: இது என்னுடைய பொருளல்ல. எத்தனையோ இலக்கியங் களிலெல்லாம் காதல் என்ற சொல் அன்பையே குறிக்க எடுத் தாளப்பட்டது.

யோக: சரி அது போகட்டும். நண்பனைச் சந்திப்பதற்கு உனது மோட்டார் சையிக்கிளை நாளை தரவேண்டும். சிலவேளை இரண்டு மூன்று நாட்கள் செல்லும் திரும்புவதற்கு.

செல்வ: அதற்கென்ன. நான் வருகிறேன்.

## காட்சி 5.

இடம்: மனோன்மணி வீடு. நேரம்: காலை

மனோன்மணி: யோகம்! எனக்காக ஓர் உதவி செய்வீர்களா?

யோக: நீங்கள் கேட்டவைகளில் நான் எதைச் செய்யாமல்விட்டேன்!

மனோ: கட்டாயம் செய்வேன் என்று வாக்குப்பண்ணினால் சொல்வேன்.

யோக: நீங்கள் கேட்பதைப் பார்த்தால் ஓம் என்று சொல்லவே பயமாக இருக்கின்றது. இயலுமானால் செய்கின்றேன்.

மனோ: இயலுமானால் என்ற பேச்சைவிட்டு ஓம் அல்லது இல்லை என்று சொல்லுங்கள்.

யோக: விடயத்தைச் சொல்லுங்கள்.

மனோ: நீங்கள் தெய்வயானையைக் கட்டாயம் ..........................

யோக: தயவுசெய்து அதைமாத்திரம் கேட்காதீர்கள்.

மனோன்: தயவுசெய்து அந்த உதவியை மாத்திரம் நீங்கள்.........

யோக: அவர்கள் நோக்கம் அறிந்த உடனேதான் நான் வீட்டைவிட்டு வெளியேறினேன்.

மனோ: வீட்டைவிட்டு வெளியேறினால் போதாது. செய்யாமற் செய்த உதவிக்கு நீங்கள் செய்யும் கைம்மாறு என்ன? தெய்வயானையில் என்ன குறை?

யோக: அவர்கள் செய்த நன்றியை ஏன் மறக்கப்போகின்றேன்? அந்தப்பெண்ணைக் கட்டியழவா?

மனோ: நிறத்திலும் குணம்தானே பெரிது.

யோக: ஆறுதலாகக் கதைப்போம். செல்வரும் வந்துவிட்டார். அவசரமாக ஓர் இடத்திற்குப் போகவேண்டும்.

(யோகரத்தினம் சயிக்கிளை எடுத்துக்கொண்டு போதல்.)

மனோ: (சிரித்துக்கொண்டு) நல்ல எலுமிச்சம்பழ நிறப்பெண் தேவையாம்.

செல்வ: நிறம் நிறமென்று யோகம் உயிரையே விடுகின்றான். நிறத்தில் என்ன இருக்கின்றதென்றே தெரியவில்லை.

மனோ: அது யோகத்தைத்தான் கேட்கவேண்டிய கேள்வி.

செல்வ: சுத்த நன்றிகெட்டவனுக இருக்கிறனே. அவர்கள், உள்ள பணமெல்லாவற்றையும் இவனை நம்பியல்லவா செலவழித்தார்கள்? அவனுக்கு உன்னில் ஒரு கண்போலத் தெரிகிறது.

மனே: ஒரு கண்ணென்று எப்படிச் சொல்வது? இரண்டு கண்களையுமே வைத்திருக்கின்றார். அவருக்கு நான் அன்பாக நடப்பது விபரீதமாகத் தெரிகின்றது. ஆசை யாரைத்தான் விட்டது?

செல்வ: உங்கள் தகப்பனுர் எதற்காக அவரை அணைத்து வைத்திருக்கின்ருர்?

மனே: அநாதையாக இருக்கின்ருர் என்ற காரணத்தால் அப்பா அணைத்துவைத்திருக்கின்ருர். எத்தனையோ தடவை எடுத்துச் சொன்னுர். யோகம் மாட்டேனென்று சொல்கின்ருர். நாங்கள் அடித்தா துரத்துவது?

செல்வ: நான் அடித்துத் துரத்தச் சொல்லவில்லை. உலகம் என்னென்னவெல்லாம் கதைக்கும்.

மனே: உலகம் அதே கண்ணேடுதான் கதைக்கும். சகோதரியுடன் சென்ருலும் விபரீதமாகக் கதைக்கின்ற கண்கெட்ட உலகமிது.

செல்வ: இன்னும் சில நாட்களில் விபரம் தானுகவே புரியும். என்னுடன்கூட நன்ருகக் கதைப்பதில்லை. காரணம் ................

மனே: காரணம் எனக்கும் விளங்கும். நீங்கள் எப்போது கொழும்புக்குப் போகின்றீர்கள்? நீங்கள் விண்ணப்பம் அனுப்பிய பாடசாலையினின்று இன்னும் மறுமொழி வரவில்லையா?

செல்வ: வருகிறமாதம் முதலாந்தேதி தொடக்கம் உத்தியோகத்தை ஏற்கச் சொல்லியிருக்கிருர்கள். அதையும் அறிவிக்கத்தான் வந்தேன்.

மனே: சந்தோஷம்.

செல்வ: யோகம் வந்தால் இங்கே மோட்டார் சயிக்கிள் இருக்கட்டும். நான் வந்து எடுக்கின்றேன். [போதல்]

## காட்சி 6.

இடம்: குமாரசாமி வீடு. நேரம்: மாலை.

(மோட்டார் சயிக்கில் விபத்துக்குள்ளாகி மூன்றுமாதகாலமாக யோகம் ஆசுபத்திரியில் இடக்கையும் குறையாகப் படுத்திருத்தல்)

தெய்வயானை: அத்தான் நீங்கள் தப்பவேண்டும் என்று எத்தனை கோவில்களுக்கு நேர்த்திக்கடன் செய்தேன். கடவுள் இப்படியாக வாவது உங்களைக் காணச்செய்தார்.

யோக: தெய்வம்! எனக்கு இது போதாது. இன்னும் வேண்டும். செய்ந்நன்றி மறந்தவனுக்கு இன்னும் வேண்டும்.

தெய்வ: அத்தான் அதெல்லாம் போகட்டும். நீங்கள் உயிரோடு இருப்பதே போதும்.

யோக: இது கடவுள் தண்டனை. அநாதையான என்னைத் தங்கள் மகனைப்போற் பேணி, காணி பூமி, நகைநட்டு எல்லாம் விற்றுப் படிப்பித்துப் பட்டதாரியாக்கினார்கள்.

தெய்வ: நீங்கள் துக்கப்படாதீர்கள். கழிந்ததற்கிரங்கிக் கவலைப் படுவதில் என்ன பயன்?

யோக: என்ன பயனா? அவர்கள் செய்ந்நன்றியையும் மறந்த தல்லாமல் எத்தனை முறை உதாசீனமாகக் கதைத்தேன்.

தெய்வ: அழாதீர்கள்.

யோக: அழுது அழுது நான்செய்த குற்றங்களைக் கண்ணீரால் கழுவவேண்டும்.

தெய்வ: மனோன் வருகின்றது.

யோக: தங்கச்சி மனோன், வா வா.

மனோ: எப்படியிருக்கின்றது?

யோக: இருக்கவேண்டியமாதிரி இருக்கின்றது.

மனோ: இந்தாருங்கள் உங்கள் சிநேகிதர் இதை உங்களிடம் கொடுக்கும்படி அனுப்பியிருக்கின்றார்.

(காகித உறையை உடைத்துப் பார்த்தல். காசு 50 ரூபாவும் கடிதமும் கிடத்தல். கடிதத்தை வாசித்தல்.)

யோக: தங்கச்சி உத்தியோகமும் அவர்கள் பாடசாலையில் கிடைத்து விட்டது.

மனோ: அப்படியா சங்கதி? சந்தோஷம். எங்கே அவர்களைக் காணோம்.

யோக: அவர்கள் நல்லூர்க் கந்தனிடம் சென்றுவிட்டார்கள். எல்லோரையும் கூட்டிவரும்படி எழுதியிருக்கின்றார்.

தெய்வ: தேனீர் கொண்டுவருகின்றேன். இருந்து கதையுங்கள்.

மனோ: எப்போது போக யோசனை?

யோக: 26-ந் தேதி புறப்படலாமென்றிருக்கின்றேன். உங்கள் சிநேகிதியைக் கறுப்பு கறுப்பு என்று சொன்ன எனக்குக் கூழங்கை கிடைத்துவிட்டது. (தேனீர் குடித்தல்)

மபனு: எப்போது எங்களுக்குச் சோறு தருவீர்கள்?

யோக: (தெய்வயானையைப் பார்த்து) சினேகிதிக்குச் சோறு கொடு.

மனோ: நான் கேட்டது கல்யாணச்சோறு!

யோக: இப்போது இருக்கும் நிலையில் சோறுகொடுக்க வழியில்லை எல்லோரும் ஒரே வீட்டிற்தானே இருக்கப்போகின்றோம்.

மனோ: நான் போய்வருகின்றேன். இன்றுதான் என்மனம் சந்தோஷம் அடைந்தது.

யோக: கடமையை மறந்தேன், தண்டனை பெற்றேன். உணர்ந்தேன். திருந்தினேன்.

மனோ: வருகின்றேன்.

யோக—தெய்வ: போய்வாருங்கள்.



# சகோதர பாசம்

## கதா பாத்திரங்கள்

நடராசா : (நட) ... ஒரு தற்காலிக எழுதுகோல் வினைஞர
நாகம்மா : (நாக) ... எழுதுகோல் வினைஞர் நடராசாவின் மனைவி (ஆசிரியை)
விமலா தேவி : (விமலா) ... நடராசாவின் சகோதரி (ஆசிரியை)
குமாரசாமி : (குமார) ... நாகம்மாவின் சகோதரன்.
பொன்னுத்துரை : (பொன்) ... விமலாதேவியின் கணவர் (ஆசிரியர்)

## காட்சி 1

இடம் : விமலகிரி ( நடராசாவின் வீடு ) காலம் : மாலை :

(விமலாதேவி அண்ணன் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு வாசலில் நிற்கின்றாள். அண்ணன் பணிமனையிலிருந்து திரும்பிவருவதைக்கண்டு ஓடோடியும் சென்று காப்பி தயாரித்துக்கொண்டுவந்து கொடுக்கின்றாள். நடராசா அங்கிகளைக் கழற்றிக் கால்முகம் கழுவிக காப்பியருந்திவிட்டுப் பத்திரிகையைக் கையில் எடுத்துச் சாய்வுநாற் காலியில் சரிகின்றான் )

விமலா : (கண்களை முந்தானையால் துடைத்துக்கொண்டு) அண்ணா !.

நட : தங்கச்சி என்ன நடந்தது சொல், ஏன் அழுகின்றாய் ?

விமலா : பெற்றோர் இறந்தநாள் தொடக்கம் என்னைப் பேணிவளர்த்துப் பெரியவளாக்கிய நீங்கள்கூட இற்றைநாள்வரை "எடீ" என்று ஒருவார்த்தை மறந்தும்கூடச் சொல்லவில்லை, ஆனால்......

நட : அவள் உனக்கு என்ன செய்தாள். சொல்.

விமலா : சொல்லி என்ன அண்ணா விமோசனம் கிடைக்கப்போகின்றது,

நட : விமோசனம் அளிக்க இந்த நடராசன் இருக்கின்றான். பயப்படாமற் சொல்.

விமலா : மலைபோல் நீங்கள் இருக்கும்போது நான் ஏன் நிலைகுலைந்து பயப்படவேண்டும். ஆனால் தங்கள் இல்லற வாழ்வுக்கு இடையூறு ஏற்படுமோ என்றுதான் பயப்படுகின்றேன்.

நட : ஏக்கத்தைவிட்டு எடுத்துச்சொல் விரைவில்.

விமலா : மச்சாள், தன்னிஷ்டப்படி நான் நடக்கவேண்டுமாம். இந்த வீட்டில் தனக்குத்தான் அதிகாரம் உண்டாம். தான் காலாற்

கீறியதை நான் நாவால் அழிக்கவேண்டுமாம். வாயில் இருந்து வரும் வார்த்தைகள் கர்ணகடூரமாக விருக்கின்றது. குடியிருத்திப் படியளப்பவர்கூட இப்படி அடிவருடி வாழச்சொல்லி வற்புறுத்த மாட்டார்கள்.

நட: வந்து ஒருவருடம் ஆகவில்லை. அதற்குள் வாலையாட்டத் தொடங்கிவிட்டாள். அவள் காலை முறித்துப்போட்டுவிட்டுக் காய்ச்சுகிற கஞ்சியில் கொஞ்சம் ஊற்றினால்தான் பதப்படுவாள். அவளுக்கு என்ன அதிகாரம் உண்டு? நீ அழுவதைப் பார்த்தால் வயிறுபற்றி எரிகின்றதே. நீ அழாதே.

விமலா: அண்ணா! என்னால் உங்களுக்கு ஒரு தொந்தரவும் வேண்டாம். என்னைப் பாடசாலை விடுதிச்சாலையில் சேர்த்துவிடுங்கள்.

நிமலா; தங்கச்சி! நீ விடுதிச்சாலையில் இருக்க உன்பெயருள்ள வீட்டை நான் கட்டியதில் என்ன பயன்? நீ துன்பப்படுவதை நான் பார்த்துக்கொண்டிருக்கமாட்டேன், அவளைப்பற்றி எனக்கு எள்ளளவும் அக்கறையில்லை. உனது வாழ்வே எனது இலட்சியம். உன்னை அலட்சியம் செய்தால் பெற்றோருக்குக் கொடுத்த வாக்குத் தவறியவன் என்று உலகம் என்னைத் தூற்றும்.

விமலா: அண்ணா! உங்களுக்கு என்ன தெரியும்? நீ படாத பாடு பட்டு உழைக்கின்றாய். மச்சாள் மாதந்தோறும் ஐம்பது ரூபா சகோதரருக்கு அனுப்புகின்றாள். எனக்கு நீ நல்ல சேலை சட்டையும், தனக்குக் கூடாத சேலைசட்டையும் வாங்கித்தருவதாகத் தூற்றுகின்றாள். எப்படியென்றாலும் நான் இந்த வீட்டில் இருக்கமாட்டேன்.

நட: நீ வீட்டைவிட்டுப்போனால் நான் உனக்காக வீட்டைக் கட்டியதன் பலன் என்ன? நீ போகவேண்டாம். அந்த நாய் இப்போது எங்கே?

விமலா: அந்தநாய் எங்கே போய்விட்டதோ தெரியாது?

நட: சரி வரட்டும். இன்று ஒரு முடிவு காண்கின்றேன், என் எண்ணப்படி, உன்னுடன் மரியாதையாக நடக்கட்டும். இல்லாவிட்டால் நாய் எங்கேயாவது போய்த்தொலையட்டும். வருகிற நேரமாச்சு, நீ எங்கேயாவது போய்விட்டுவா.

விமலா: சரியண்ணா.

## காட்சி 2

இடம்: விமலகிரி. நேரம்: இரவு

(நடராசா கோபத்துடன் விருந்தையில் உலாவிக்கொண்டிருத்தல். நாகம்மா வந்து படியில் ஏறல்)

நட: நாயே! எத்தனை வீட்டுக்கு நக்கப்போனாய்? பச்சைக் குழந்தைக்குப் பால்கொடாமல் பரிதவிக்கவிட்டு எங்கே போனாய்?

நாக: பால்கொடுத்து மச்சாளிடம் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுத்தானே சென்றேன். என்மீது ஏன் எரிந்துவிழுகின்றீர்கள்?

நட: எரிந்துவிழவில்லை எடி, எரிந்து விழவில்லையடி. வீட்டைவிட்டு இப்போதே வெளியேசெல் நாயே.

நாக: நாய் கீய் என்று ஏன் ஏசுகின்றீர்கள்? விடயத்தைச் சொல்லுங்கள்.

நட: விடயத்தை விபரமாகச்சொல்ல நான் ஆள் இல்லை. வெளிக்கிடு.

நாக: அன்பு ததும்ப ஆசைக்கிளியே! என்று பேசிய வாயாலே நாயே என்று ஏசுகின்றீர்கள். பெற்ற தாய் தந்தையரை இழந்த நான் தஞ்சம் என்று தங்களை அடைந்தேன். என்னை வெஞ்சினம் கொண்டு வெருட்டுவது நியாயமா? நான் என்ன பிழைசெய்தேன்?

நட: அருமை பெருமையாக வளர்த்த அன்புத் தங்கையை அடி என்றுபேச நீ யார்? அவள் பெருமைக்காக எருமை மாடுபோல் உழைக்கின்றேன். அவள் வாழ்வே என் வாழ்வு. நீ போனால் ஆயிரம் ஆயிரமாம் பெண்களை ஆசைநாயகியாக்க என்னால் முடியும். உனக்காகத் தங்கையை இழக்க முடியாது?

நாக: ஐயோ! என்ன அநியாயம். நான் உங்கள் தங்கைக்கு என்ன தீங்குசெய்தேன்? மனத்தாலும்கூடத் தீமைசெய நினைத்திலேன். நீங்கள் ஏன் தங்கையை இழக்க வேண்டும்?

நட: படாதபாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தைத் திரட்டி உருட்டி உன் சகோதரனுக்கு அனுப்புகின்றாயே. இப்படி நீ செய்தல் கூடாது தங்கையைத் தக்கமரியாதையாக நடத்தவேண்டும்.

நாக: தங்கள் தங்கையை என் தங்கையிலும் மேலாகவே மதித்து நடத்துகின்றேன். அண்ணன் ஐம்புலவாசைகளையெல்லாம் அடக்கி, தன்பெருவாழ்வைத் தியாகம்செய்து, அல்லும் பகலும்

அயராது உழைத்து என்னை ஓர் ஆசிரியை ஆக்கினார். அவர் இப்போது பாயும் படுக்கையுமாகப் பரிதவிக்கின்றார். அவரைப் பாதுகாக்க உற்றார் உறவினர் ஒருவரில்லை. அதனால் மாதா மாதம் ஏதோ சொற்ப பணம் அனுப்புகின்றேன். அந்த விடயத்தில் நீங்கள் தலையிடக்கூடாது. தயைகூரவேண்டும்.

நட: நீ பணம் அனுப்பக்கூடாது. அண்ணனை வேண்டுமா? அல்லது வெறுங்கையோடு இருந்த உன்னைக் கரம்கொடுத்துக் கடிமணம்புரிந்த என்னை வேண்டுமா?

நாக: நீங்கள் இப்படிக் கூறினால் அவர்கதி?

நட: அதைப்பற்றி எனக்கு அக்கறையில்லை. அவருடன் ஒருவித தொடர்பும் வைத்தல்கூடாது.

நாக: நீங்கள் என்னை வெறுத்தாலென்? கண்டதுண்டமாக வெட்டிச் சித்திரவதை செய்தாலென்? அவருக்குப் பணமனுப்பத் தீர்மானித்துள்ளேன்.

நட: அண்ணன்மீதுள்ள பாசம் உன் கண்ணை மறைக்கின்றது. இன்றே வெளிக்கிடு வீட்டைவிட்டு.

நாக: பாசம் கண்ணை மறைக்கவில்லை. கடமையைச் செயச்சொல்கின்றது. நிசமாகத்தான் வெளிப்படச் சொல்கின்றீர்களா?

நட: ஆம். நிசமாகத்தான்.

நாக: இற்றைநாள்வரையும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன் பொறுமை இழந்துவிட்டேன். தங்கையின் வார்த்தைகளைத் தங்கமாக மதித்து, மங்கலநாண் கட்டிய மங்கையை மதியாது நடக்கும் உங்களுடன் வாழ்வதிலும் அண்ணனைப் புறந்தருதல் சிறந்ததென எண்ணுகின்றேன். உங்கள் தவற்றை உணரும் காலம் ஒல்லையில் வந்துறும். நான் வருகின்றேன்.

நட: போடீ போ. மங்கலநாண் என்று சொன்னாயே. அதை மரியாதையாகக் கழற்றிவை. நீ எக்கேடு கெட்டாலும் எனக்குத் தங்கைதான் பெரிது. சனியனே போ. (தாலிக்கொடியை அவிழ்த்துக்கொடுத்து வெளியேறல்).

## காட்சி 3

இடம்: குமாரசாமி குடிசை. நேரம்: காலை

[குமாரசாமி தனது குடிசையில் கட்டிலில் படுத்திருக்கின்றான். அன்புத்தங்கை வருவாள் என்ற ஆனந்தம்; தங்கை மூட்டை முடிச்சுகளுடன் வருகின்றாள்.]

குமார: என்ன மூட்டை முடிச்சுகளுடன் வந்துவிட்டாய்?

நாக: எனக்குக் கிட்ட உள்ள பள்ளிக்கூடத்தில் இடம் கிடைத்து விட்டது. வருகிற தைமாதம் தொடக்கம் இங்கே வேலை.

குமார: சந்தோஷம். அவர் எங்கே?

நாக: அவர் வரவில்லை. அவரையும் கொழும்புக்கு மாற்றிவிட்டார்கள்.

குமார: கழுத்தான் எங்கே?

(நாகம்மாவின் கண்களில் இருந்து இருசொட்டுக் கண்ணீர் விழுதல்)

குமார: ஏன் அம்மா அழுகின்ருய்?

நாக: அவர் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு என்னையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்.

குமார: அவ்விதம் அவர் செய்வதற்கு நீ என்ன தவறுசெய்தாய்?

நாக: அவர் சகோதரியின் சொற்களை வேதவாக்கியமாக நம்பி, என்னை நாயினும் கேவலமாக நடத்தி வீட்டைவிட்டு வெளியே துரத்திவிட்டார்.

குமார: எப்படியிருந்தாலும் கணவரின் சொற்படி நடத்தலே மனைவியர்க்கழகு.

நாக: அண்ணு! பெற்ற தாயினும்பார்க்கப் பெருமையாகப் பேணி வளர்த்த உனக்குச் செம்புச்சதம்கூட அனுப்பவேண்டாமாம், எப்படி அண்ணு மனம் ஒப்புக்கொள்ளும்? வேறு என்ஞல் என்ன செய்யமுடியும்? மற்றவற்றையெல்லாம் பொறுத்து நடந்துவந்தேன். இதை என்ஞல் பொறுக்கமுடியாது.

குமார: தங்கச்சி கணவன் சொற்படி நடப்பதே காரிகையர்க்கு அழகு. என்ன இருந்தாலும் கணவன் சொற்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அரசினர் எழுப்பிய ஆசுபத்திரிகள் இருக்கின்றன. அவை எனக்குத் தஞ்சமளிக்கும். அஞ்சிப் பயனில்லை. உன் வாழ்வு பாழ்பட்டுப்போவதை நான் விரும்பவில்லை. கணவனிடம் மன்னிப்புக் கோரி அவர்சொற்படி நடந்து சந்தோஷமாகவிரு.

நாக: நீங்கள் ஊட்டிவளர்த்த உடம்பின் உழைப்பாலே நான் ஓர் ஆசிரியையாகவிருக்கின்றேன். என் உழைப்பில் உங்களுக்கு உரிமை இல்லாவிட்டால் என் உழைப்பால் என்ன பயன்? என் வாழ்விற்காக உங்கள் ஆசைகளைக்கூட அலட்சியம் செய்தீர்கள்.

இல்லற வாழ்வு, இடாம்பீகம் எல்லாவற்றையும் உதறித் தள்ளி னீர்கள். ஊண் உறக்கமின்றி உழைத்து, உருக்குலைந்த உடம் பைப் பெற்றீர்கள். அவ்வுடம்பிற்கு என் உழைப்புச் சுவறத்தான் வேண்டும். கணவனும் வெறுத்து, நீங்களும் வெறுத்தால் நான் என்ன செய்வது? ஈற்றில் கிணறுதான் வர............

குமார: அந்தக் கோழைத்தனத்தை மாத்திரம் செய்யாதே. உன் இஷ்டம். சொல்லவேண்டியதைச் சொன்னேன் கணவனே கண் கண்ட தெய்வம்.

நாக: நான் கணவனை வெறுக்கவில்லை. கணவர்தான் என்னை வெறுக்கின்ருர். தனக்குள்ள சகோதரபாசம் எனக்கு இல்லாமற் போகவேண்டுமென்ருல் எப்படி முடியும்? மனிதாபிமானமற்ற கணவருடன் வாழ்வதிலும் தனித்திருப்பது மேல்.

குமார: உன் மனதைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. உனது விருப்பம். எனக்கு வெந்நீர் கொஞ்சம் தா.

நாக: சரியண்ணு.

## காட்சி 4.

இடம்: பொன்னுத்துரை வீடு நேரம்: காலை

[பொன்னுத்துரை விமலாவை விவாகம் செய்து மூன்றுமாதம் இருவரும் இன்பமாகக் காலம் கழிக்கின்றனர். ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை பொன்னுத்துரை யோசித்துக்கொண்டிருக்கின்ருர்.]

விமலா: என்ன நீங்கள் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கின்றீர்கள்? கோப்பி ஆறி அல்லவா போய்விட்டது, குடியுங்கள்.

பொன்: (குடித்துக்கொண்டு) ஆழ்ந்து சிந்திக்கவேண்டிய காலம் இது. உலகம் போகிற போக்கைப் பார்க்கச் சிரிப்புக்கூட வருகின்றது.

விமலா: சிரிக்கக்கூடியதாக என்ன இருக்கின்றது? சொல்லுங்கள் சேர்ந்து சிரிப்போம்.

பொன்: உம். சேர்ந்து சிரிப்போம். ஒரு நண்பன் இருக்கின் ருன். மற்றவர்கள் பணத்தைப் பார்த்துவிட்டுத் தருகிறேன் என்று கேட்டாலும்கூடக் காட்டமாட்டான். இப்போது அவசர தேவையென்று இருநூறு ரூபா கடன் கேட்டான். தனக்கு வரும்

கஷ்டம் மற்றவர்களுக்கும் வரும் என்பதை யோசனை செய்யமாட்டான். நான் கட்டாயம் கொடுக்கவேண்டும். உனது சம்பளத்தை அப்படியே தா.

விமலா: நான் என்ன செய்வேன்? அண்ணா சுகமில்லாமல் இருக்கின்றார். அவர் வேலையினின்றும் நீக்கப்பட்டார். வழக்கமாக அனுப்பும் 50 ரூபாவுடன் இன்னும் 100 ரூபாகூட அனுப்பச் சொல்லி எழுதியிருக்கின்றார். நீங்கள்தான் கருணைகாட்டவேண்டும்.

பொன்: உன் அண்ணனுக்காக நான் தருவதாகச்சொன்ன வாக்கை மாற்றலாமா? என்னை நம்பியிருப்பவனுக்குத் துரோகம் செய்யலாமா?

விமலா, அண்ணன் பாவம். உதவியில்லை. நீங்கள் மறுத்தால் அவா கதி?

பொன்: என்னிடம் மன்றாடிப் பயனில்லை. அண்ணன் மனைவி தானே உழைக்கின்றாள். நீ ஏன் அனுப்பவேண்டும். இம்முறை அனுப்பவேண்டாம். மற்ற மாதம் அனுப்பலாம்.

விமலா: ஐயோ, அவர் என்னை நம்பியல்லவா எழுதியுள்ளார். அவர் மனைவியைவிட்டு இரண்டுவருடமாகின்றதே. இற்றைநாள் வரையும் உங்களுக்குச் சொல்லவில்லை.

பொன்: அவர் ஏன் மனைவியை விட்டார்? பணம் எனக்குத் தேவை.

விமலா: அண்ணர் பாடுபட்டு உழைத்துச் சம்பாதித்தமையாற்றான் நான் படித்தேன். இப்போது நாலுபணம் சம்பாதிக்கின்றேன். நான் இல்லாதது பொல்லாததைச் சொல்லி மச்சாளை வீட்டை விட்டுக் கலைப்பித்தேன்.

பொன்: உங்கள் அண்ணன் என்ன சொல்லி மனைவியைக் கலைத்தார்?

விமலா: மச்சாளைச் சகோதரனுக்குப் பணமனுப்பவேண்டாம் என்று கண்டிப்பாகச் சொன்னார். மச்சாள் கெஞ்சி மன்றாடினாள். அண்ணன் என்மீதுகொண்ட பாசத்தினால் கொஞ்சமேனும் சம்மதிக்கவில்லை. மச்சாளும் அண்ணன் சொல்லை இந்த ஒரு விடயத்தில் கேட்கவேண்டாம் என்று பிடிவாதம் பிடித்தாள். அண்ணர் மச்சாளை வெளியே தள்ளிவிட்டார்.

பொன்னு: உன் அண்ணனுக்குப் பணம் அனுப்பவேண்டாமென்று சொல்ல உன்மனம்பட்ட வேதனைபோற்றானே அப்பெண் மனமும் வேதனைப்பட்டிருக்கும். உனக்கு உள்ள சகோதர பாசம்

அப்பெண்ணுக்கு இராதா ? உனக்கு உன் அண்ணன் எப்படியோ அதேபோலத்தான் அவளுக்கும் அவள் அண்ணன். அவள் அண்ணன் அவளுக்காக எவ்வளவு தியாகம் செய்துள்ளான். அவன் காசநோயால் கஷ்டப்படப் பணமனுப்பத் தடைசெய்தது நியாயமா ? நீயே யாவற்றிற்கும் காரணம். யோசித்துப்பார்.

விமலா : (காலில் விழுந்தழுதுகொண்டு) என்னை மன்னித்துவிடுங்கள். நான் துரோகி, மனிதத் தன்மையற்றவள். எனக்கு ஒரு நீதியும்; மற்றவர்களுக்கு ஒரு நீதியும் கொண்டேன். சீரும் சிறப்புமாக வாழவேண்டிய குடும்பத்தைச் சீர்குலைத்துவிட்டேன். என்னை மன்னியுங்கள்.

பொன் : மன்னிப்பினல் பயனில்லை. அப்பெண்ணை இன்றே மண்டியிட்டு உனது கண்ணீரால் அவள் களங்கத்தை நீக்கு. அண்ணனை உடனே புகையிரத நிலையத்தில் சந்திக்கச்சொல்லித் தந்தியடி. குடும்பம் ஒன்றுசேர ஒழுங்குசெய். அன்றேல் உன் கதியும் அதோகதிதான்.

விமலா : நீங்கள் என்கண்ணைத் திறந்துவிட்டீர்கள். அண்ணனுக்கு இப்போதே தந்தியடித்துப் புறப்படுவோம். நீங்களும் ஒருகிழமை லீவு எடுங்கள்.

பொன் : எல்லாம் நேற்றே ஒழுங்கு செய்துவிட்டேன். பிரயாணத்திற்கு ஆயத்தம்செய்.

விமலா : மாணவர்க்கன்றி மனிதருக்கும் ஆசிரியராக இருக்கின்றீர்கள்.

## காட்சி 5.

இடம் : குமாரசாமியின் குடிசை. நேரம் : காலை

[ குமாரசாமி வீட்டிற்கு விமலா, பொன்னுத்துரை, நடராசா ஆகிய மூவரும் சேர்ந்துவரல், நாகம்மா வீட்டுவேலைகளைக் கவனித்துக் கொண்டிருத்தல் ]

குமார : தெய்வங்கள்போலத் திடீரெனப் பிரசன்னமாகின்றீர்களே!

பொன் : நாங்கள் தெய்வங்களல்ல. இங்குள்ள பக்தர்கள் பாசவலையினலே பிணித்துப் பிரசன்னமாகச் செய்துவிட்டார்கள். என்ன செய்யமுடியும்?

குமார: தங்கச்சி! உன்னைப் பார்க்க வந்திருக்கின்றார்கள்.

நாக: யார் அண்ணா? (வருதல்) இருங்கள்.

விமலா: (நாகம்மாவின் காலைப்பிடித்துக்கொண்டு) மச்சாள் என்னை மன்னித்துவிடு. எனது அறியாமை, அண்ணாவையும் உங்களையும் பம்பரம் ஆட்டிவிட்டது. உங்களிடம் உள்ள சகோதர பாசத்தை அறியாது அல்லல் பல இழைத்தேன். சகோதர பாசத்தை உணரவைத்த உங்கள் அண்ணா இதோ இருக்கின்றார். (பொன்னுத்துரையைக் காட்டி) என்னை மன்னித்தேன் என்று ஒருவார்த்தை சொல் அண்ணி. அப்போதுதான் என் மனம் சாந்தி அடையும்.

நாக: (விமலாவைக் கையில்தூக்கிக்கொண்டு) கவலைப்படாதே. அவரும் உன்மீதுகொண்ட பாசத்தால் அப்படிச் செய்தார் நானும் அண்ணன்மீதுகொண்ட பாசத்தால் அவரைப் பிரிந்தேன். போனது எல்லாம் போகட்டும். எழுந்திரு.

நட: நான் சகோதரிமீதுள்ள பாசத்தைப் பொருட்டாக நினைத்து உன்னை மோசம் செய்தேன். மோசத்திற் பிடித்து வெளியே தள்ளினேன், நீ எழுதிய கடிதம் சித்திரவதை செய்தது.

பொன்னு: கழுத்திற் கைவைக்கிற பழக்கத்தைக் கடைசிவரையும் நினையாதே. நாங்கள் வருகின்றோம்.

நாக: அண்ணா! இருந்து சாப்பிட்டுவிட்டுப் போங்கள்.

குமார: தம்பி நீசெய்த உதவியை நான் மறக்கமாட்டேன். இப்போது எனது நோயில் அரைவாசி குறைந்துவிட்டது.

பொன்: நானும் விமலாவும் அம்மாவீட்டிற்குப் போய்வருகிறோம்.

விமலா: அண்ணா, மச்சாள், மச்சான் போய்வருகிறோம்.

குமார—நாக: நல்லது.

# "பெட்டகம் வாழ்க"

## கதா பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| பெரியதம்பி : | ( பெரியதம்பி ) | ... | ஒழுக்கநெறி வாழ்பவர் |
| பெரியநாயகி : | ( பெரிய ) | .. | பெரியதம்பியின் மனைவி |
| சுப்பிரமணியம் : | ( சுப்பிர ) | ... | பக்கத்து வீட்டுக்காரர் |

## காட்சி 1

[ மாலை நாலுமணி, பெரியதம்பி சாய்வுநாற்காலியில் பத்திரிகை படித்துக்கொண்டிருக்கின்றார். பக்கத்துவீட்டுச் சுப்பிரமணியம் அவசரமாக வருகின்றார்.]

பெரியதம்பி: வாவப்பா வா. இன்று மழை வரப்போகின்றதே.

சுப்பிர : மழை வந்தால் நல்லதுதானே. பொல்லாத சூடாயிருக்கின்றதே. சரி ஓர் இடமும் போகவில்லையா?

பெரியதம்பி : என்னப்பா சூடென்றால் நல்ல சூடு, பொல்லாத சூடு என்று வித்தியாசம் உண்டா?

சுப்பிர : அப்பா, கிப்பா என்று கிழவனுக்கப் பார்க்கின்றீர்கள். பரவாயில்லை.

பெரியதம்பி : பெரிய கூட்டமாம். போகமுடியவில்லை.

சுப்பிர : ஏன் போகமுடியவில்லை? வீட்டுக் காவலில் இருக்கின்றீரா?

பெரியதம்பி : ஏன் அப்படிக் கேட்கின்றீர்கள்? வீட்டுக் காவலில் இருந்தாலும் இரண்டு பொலிஸ்காரராவது உதவியாக இருப்பார்கள். நின்மதியாகத் தூங்கலாம். ஏதாவது கதையோ கட்டுரையோ எழுதலாம். நான்தான் வீட்டுக்காவலாக இருக்கின்றேன்.

சுப்பிர : தங்கள் அடுப்படியின் தலைக்கறுப்பையே காணவில்லை.

பெரியதம்பி : ( கேலியாக ) என்ன? எங்களுக்கு வயதும் மூன்று நாலுமணியாகிவிட்டது. கறுப்பேன். பஞ்சுபோல வெள்ளையாக விருக்கின்றது. வயதைக் குறைக்கிற யோசனைதானே.

சுப்பிர: ஏதோ மனைவி எங்கே என்று கேட்டால் சுத்திவளைத்துப் பேசுகின்றீர்கள்.

பெரியதம்பி: சுத்திவளைச்சுப் பேசினுற்றுன் கேட்கிறவர்களுக்கு இன்பம் உண்டென்று சொல்லுவார்கள். அவங்க அண்ணன் வீட்டுக்குப் போட்டாங்க.

சுப்பிர: மகனும் இல்லையா?

பெரியதம்பி: கேட்கிற கேள்விகளைப் பார்த்தால் ஆளைச்சரிக்கட்டத் திட்டம்போட்டு வந்ததுபோலத் தெரிகின்றது. தண்ணீர் வெந்நீர் குடிக்க என்கைதான் ஆடவேண்டும்.

சுப்பிர: என்ன உங்களுக்குக் கைநீட்ட மனம் வருமா? நல்லாய்ப் போச்சு; சதியென்று ஏன் யோசிக்கின்றீர்கள்?

பெரியதம்பி: உங்களுக்குச் சந்தோஷமாயிருக்கு. அந்திய காலத்தில் வேளாவேளைக்குக் கஞ்சியோ கூழோ குடித்து உறங்கலாம். நல்ல காரியங்களில் ஈடுபடலாம் என்றுல் முடியாமல் இருக்கின்றது. வந்த விடயம் என்ன? நாலு பத்துத் தேவையா?

சுப்பிர: (சிரித்துக்கொண்டு) நாலு பத்தல்ல. நானூறு கேட்டாலும் தாராளமாகத் தருவீர்கள். நீங்களோ நல்ல மனுசர், உங்களிடம் எங்கள் துன்பத்தைச் சொல்லலாம் என்றுல்.........

பெரியதம்பி: தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர் வாக்காளரை வாக்காளப் பெருமக்களே எனத் தூக்கிக் கதைக்கிறதுபோலக் கதைக்கிறீர்களே. என்னென்று விஷயத்தைச் சொல்லுங்கள்?

சுப்பிர: வந்து உங்கள் சம்சாரத்தின் தொல்லையாலே குடியிருக்கக் கூட முடியவில்லை.

பெரியதம்பி: மனைவி உங்களை வீட்டைக் காலிசெய்யும்படி நோட்டீஸ் கீட்டீஸ் அனுப்பியிருக்கின்றுளோ? எனக்குத் தெரியாதே.

சுப்பிர: (கோபத்துடன்) அப்படி ஒன்றும் அனுப்பவில்லை. எங்களை விரட்ட ஒருவராலும் முடியாது. உங்கள் சம்சாரத்தின் வாய்க்குத்தான் "மாஸ்ரர் லொக்" வாங்கிப் பூட்டவேண்டும். என்னுடைய பிள்ளையைத் தாய் இல்லாப் பிள்ளையென்று கேலியாகப் பேசித்திரிகின்றது.

பெரியதம்பி: கோபிக்காதே மணியம். பாவம் அப்படிச் செய்யாதே' ஏதாவது அவள் சாப்பிடவேண்டும். தகப்பன் இல்லாப் பிள்ளையென்று கேள்விப்பட்டிருக்கின்றேன். தாயில்லாப் பிள்ளையென்று கேள்விப்படவில்லை. அதில் என்ன குறை? எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கிறேன்.

சுப்பிர: உங்களுக்குச் சொல்லவேண்டிய கடமைக்குச் சொல்லிவிட்டேன். நானும் என்னால் ஆனதைச் செய்வேன். உங்கள் முகத்திற்காகப் பார்க்கின்றேன்.

பெரியதம்பி: கோபம் பாபத்தைத் தேடும். எல்லாம் எனக்கும் தெரியும். என்ன செய்வதென்று தெரியவில்லை. நூறுநாள் போய்விட்டது. இன்னும் ஆறுநாள் இருக்கின்றது. அதற்குள் ஏன் தொந்தரவு என்று பார்க்கிறேன். சிலவேளை இப்போது வந்தாலும் வருவாள். நீ போ.

சுப்பிர: நான் போய்வருகிறேன். கவனித்துக்கொள்ளுங்கள்.

பெரியதம்பி: சரி போய்வா.

( சுப்பிரமணியம் போதல் )

## காட்சி 2

[ மாலை 5 மணி, பெரியதம்பியின் மனைவி தமையன் வீட்டால் வருதல் ]

பெரியதம்பி: வருக! வருக!! உன் வரவு நல்வரவாகுக.

பெரிய: வந்ததும் வராததுமாக நாடகபாணியில் வரவேற்பளிக்கின்றீர்களே!

பெரியதம்பி: வரவேற்பிற்கு வாழ்த்துப்பத்திரமும் எழுதித் தந்திருக்கிறார்கள். இதற்குமுன் உன்னுடைய நாடகம்தான் நடந்தது. பெரியநாயகி மரியாதையாக இருக்க விருப்பம் என்றால் இரு.

பெரிய: ஏன் எரிந்துவிழுகின்றீர்கள்? நான் என்ன செய்துவிட்டேன். நாயே என்றும் கூசாமல் பேசுகின்றீர்களே!

பெரியதம்பி: கொண்டுவந்ததை வைத்துவிட்டுவா. நான் நாயகி என்றழைக்க நாய் என்று குற்றம் சாட்டுகின்றாய். உன்னால் என்மானம், மரியாதை எல்லாம் கப்பலேறிவிட்டதெடி, எரிந்து விழுந்தால் மூன்றுகுடம் தண்ணீர் கொண்டுவந்து அபிஷேகம் செய்.

பெரிய; என்னால் உங்கள் மானம் மரியாதை எல்லாம் கப்பலேறினால் நீங்களும் கப்பலில் ஏறிக் கடலில் விழுவதுதானே! நான் என்ன தவறுசெய்தேன்? ஏவற்பேய் கூரையைப் பிடுங்குது.

பெரியதம்பி: வாய்க்குவாய் கொடுக்கின்றாய். பெண் அரசாட்சியாய்ப் போய்விட்டது.

பெரிய: உண்மைதானே. பண்டார நாயகி பெண்சொல்ல ஆண்கள் எல்லோரும் சொற்களைக்கேட்கக் கைகட்டி வாய்பொத்தி நின்றார்கள்தானே.

பெரியதம்பி: இந்தவீடும் பெரியநாயகியின் ஆட்சிக்குட்பட்டதாக மாறிவிட்டதோ? அதெல்லாம் சரி. அக்கம் பக்கத்திருக்கிறவர்கள் எல்லோரும் முறையிடுகின்றார்கள்.

பெரிய: பதிவு செய்துவைத்து விளங்குங்களேன். அவங்களுக்கெல்லாம் நம்மீது பொறாமை. நாங்கள் பணம், பண்டம், நிலம், புலம் எல்லாம் வைத்திருக்கின்றோம். எல்லோரும் கொளுத்திச் சுடப்பார்க்கின்றார்கள்.

பெரியதம்பி: நான் நாலு பத்துப்பேர் தேவையென்று நடக்கின்றேன். நீயென்னென்றால் எல்லோரையும் முறிச்சுக்கொட்டப் பார்க்கிறாய்!

பெரிய: முறிச்சுக்கொட்டினால் ஒட்டகப்புலத்துக்குக் கொண்டுபோய்ப் பத்துப் போடுங்கள்.

பெரியதம்பி: உனக்கும் பத்துப் போட்டாற்றான் பதப்படுவாய்.

பெரிய: ஒன்றுதானும் ஒருவராலும் போடமுடியாது.

பெரியதம்பி: உன்னால் வெளியிற் தலைகாட்ட முடியவில்லை.

பெரிய: வெளியிற் தலைகாட்ட முடியாவிட்டாற் தலையைக் கழற்றி வைத்துவிட்டுத் திரியுங்களேன். இல்லாவிட்டால் முற்காலத்துக் குமர்ப்பிள்ளைகள்போல வீட்டிற்குள் இருங்களேன்.

பெரியதம்பி: சூரன்போரில் சூரனின் தலையைக்கழற்றி மாற்றுவது போலக் கழற்றமுடியும் என்றால் அப்படிச் செய்யலாம்.

பெரிய: சூரன் தலையை மாற்றுவதுபோல உங்கள் தலையையே எல்லோரும் மாற்றிவிட்டார்கள். கடைசியில் உங்களையும் அழித்துவிடுவார்கள். உங்களைப்போலத் தலையைக் கீழேபோட்டு நடக்கிறவள் அல்ல நான். தலை நிமிர்ந்த தமிழர் பரம்பரை.

பெரியதம்பி: தலைநிமிர்ந்த தமிழ்த் தலைவர்களே, நாம் இனி உனக்குத்தான் தஞ்சம் என்று பூமாதேவியைப் பார்க்கிறார்கள். நீ என்னென்றால் வீட்டில் இருக்கும் ஓடுகளைக் கணக்கெடுப்பவர் போல் அண்ணார்ந்து பார்த்துக்கொண்டு திரிகின்றாய்.

பெரிய: இது என் குற்றம் அல்ல, நீங்கள் கல்யாணம் செய்யும் போது உயரப்பொருத்தம் பார்த்துச் செய்தாலென்ன? உலகத்திலே உயரப்போட்டி நடத்தினால், முதலாவது இடத்திற்குப் போட்

டியிடும் உங்களை நான் குனிந்து எப்படிப் பார்க்கமுடியும்? அது என் குற்றமா?

பெரியதம்பி: அதெல்லாம் சரி. பக்கத்திலிருப்பவர் உதவியிருந்தாற்றான் நல்லது. ஒரு கருமம் செய்வதாக இருந்தால் பணத்தைக்கொண்டு எல்லாம் சாதிக்கமுடியாது. மற்றவர்களின் உதவியும் தேவை.

பெரிய: நான் ஒரு கடதாசிபோட்டால் அண்ணன் பட்டாளக்கணக்கில் ஆட்களைக் கூட்டிக்கொண்டு வருவார்.

பெரியதம்பி: அதிருக்கட்டும். நான் ஓர் இடத்திற்குக் குடும்பச் சச்சரவு ஒன்று தீர்க்கப்போகின்றேன். தம்பியைக்கொண்டு மரவேலை செய்பவனைக் கூப்பிட்டுப் பெட்டகத்தைத் திருத்து. நான் வருகின்றேன். (போதல்)

## காட்சி 3

[அடுத்தநாள் மாலை. பெட்டகம் திருத்திய மரவேலை செய்பவன் சம்பளம்பெற்றுச் செல்லல். கணவனும் மனைவியும் சந்தோஷமாகக் கதைத்தல்]

பெரிய: (சிரித்துக்கொண்டு) இஞ்சேருங்கோ, நீங்கள் சரியான ஆள்.

பெரியதம்பி: சரி, சரி. இன்றுவரையும் நீ பிழையான ஆளென்று தானே நினைத்துக்கொண்டாய். உனக்கு இப்போது தெரிந்ததா?

பெரிய: மன்னித்துவிடுங்கள். இத்தனை நாளாகப் பணத்தாலே எல்லாத்தையும் சாதிக்கலாம் என்றிருந்தேன். நேற்றுத்தான் அது பிழையென்று உணர்ந்தேன். நான்பட்ட கஷ்டம் ஒன்று இரண்டல்ல.

பெரியதம்பி: என்ன கஷ்டப்பட்டாய்?

பெரிய: கஷ்டமா? மரணவேதனை. எங்கள் பெட்டகத்தை வெளியே தூக்குவதற்குக் [illegible]தவர்கள் இல்லை. அவருக்காகவென்றால் வருவோம். உன்னுடைய பணத்திமிர் எங்களை ஒன்றுஞ் செய்ய மாட்டாது என்று முகத்தில் அடித்தமாதிரிச் சொல்லிவிட்டார்கள்.

பெரியதம்பி: கூலிக்காரர்கள் என்ன சொன்னார்கள்?

பெரிய: நாங்கள் பணப்பேய்கள் அல்ல. நாய்தின்ருப் பணம். அது வரும் போகும். அன்பும் பண்பும் இல்லாத வீட்டு வாசற் படியில் அடி எடுத்து வைக்கமாட்டோம் என்ருர்கள்.

பெரியதம்பி: அண்ணன் ஆட்கள் எங்கே?

பெரிய: அவர்கள் தூரத்திலிருக்கின்ருர்கள்.

பெரியதம்பி: தூரத்துத் தண்ணீர் ஆபத்துக்குதவாதே!

பெரிய: உண்மைதான். நீங்கள் சொன்னவுடன் பறந்தடித்துவந்து பெட்டகத்தைத் தூக்கி வெளியே வைத்தார்கள்.

பெரியதம்பி: நான் எத்தனை நாள் சொல்லியும் உன் செவியில் ஏறவில்லை. பெட்டகம் உனக்கு நல்லபாடம் படிப்பித்துவிட்டது. பெட்டகத்துக்குப் பொங்கல் வைக்கவேண்டும். வாழ்க பெட்ட கம்!

பெரிய: கட்டாயம் செய்வோம். பெட்டகத்திற்கு ஜே! (இருவரும் சிரித்தல்)



மா மோகணப்பிரியா.

# சந்தேகம்

## கதாபாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| பரமசிவம் | (பரம) | ... | ஒரு சந்தேகப் பேர்வழி |
| பார்வதி | (பார் | ... | பரமசிவம் மனைவி |
| இராசம்மா : | (இரா) | ... | பக்கத்து வீட்டுக்காரி |
| முத்தையா : | (முத்) | ... | கலியாணத்தரகர் |
| சுப்பிரமணியம் | (சுப்) | ... | பரமசிவம் மகன் |
| நடராசா | (நட) | ... | சுப்பிரமணியத்தின் நண்பன் |

## காட்சி 1.

இடம்: பரமசிவம் வீடு. காலை-10மணி

(பரமசிவம் தோட்டத்தினின்று வருதல்)

பரம: பார்வதி! பார்வதி!

பார்: என்னங்க ?

பரம: கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா. களைப்பாயிருக்கு.

பார்: சுடுதண்ணி கொண்டுவரட்டுமா ?

பரம: இருந்தால் கொண்டுவாவேன்.

பார்: நீங்க முகத்தைக் கழுவிவிட்டு வாருங்கோ.

பரம: சும்மா போவப்பா. தம்பி கொழும்பாலவந்து நிற்கு[illegible] போது அவன் கண்முழிக்கிறது தேத்தண்ணீரிலதான். அவ[illegible] உத்தியோகம் பார்க்கிற ஆளெண்டுதானே அப்படி?

பார்: இல்லைப்பாருங்கோ அது அவங்க பழக்கமாய்ப்போச்[illegible] எங்களுக்கு அது ஒத்துவராது. நாம் நம்முடைய பழக்க[illegible] ஏன் விடுவான்?

பரம: பின்னை உன்னுடைய எண்ணம். வாய்கொப்பளி[illegible] தண்ணியும் கொண்டுவா

(பார்வதி சென்று கோப்பியும் பனங்கட்டியும் தண்ணீரு[illegible]ாண்டு வருதல்)

ப[illegible]: அப்ப[illegible]ாருங்கோ தண்ணியைப் பிடியுங்களே

ப[illegible]: என்ன [illegible] ஒரு [illegible]துத்தினிசாயிருக்கு.

பார்: சீனி இருந்தது பாருங்கோ. பக்கத்துவீட்டு இராசம்மா வந்து யாரோ தன்னுடைய மகளோடு படிக்கிற பையன் வந்ததாம். கொஞ்சம் சீனிதரும்படி கேட்டுது. நான் கிடந்தது எல்லாவற்றையும் தட்டிக்கொடுத்துவிட்டேன்.

பரம: சரி பறுவாயில்லை. பொட்டைகளும் பொடியளைத் துணிஞ்சு வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு வருகுதுகள். எனக்குப் பனங்கட்டியெண்டால் உயிர். உங்களுக்குத்தானே நான் சீனிவாங்கியாறது. சீனித்தண்ணி அதிகமாகக் குடித்துத்தானே அந்தப் பென்சன்காற வைத்திலிங்கம் இப்ப தவிட்டுப்பாணும் பழஞ்சோத்துத் தண்ணியும் குடிக்குது.

பார்: இஞ்சை பாருங்கோ. இப்போ ஏதோ நாகரிகம் எண்டு சொல்லிச் சொல்லிக் குரக்கன்பிட்டு, பனுட்டுத் தின்னுமல் டாக்குத்தர்மாருக்குப் பச்சைத்தாள் தாளாய் அள்ளி இறைக்கினம்.

பரம: அதெல்லாம் சரி. இப்ப சாப்பாடு எல்லாம் ஆயத்தமாயிருக்கா?

பார்: இப்பதான் குரக்கன்பிட்டு அவிச்சு முடிஞ்சுது. மரவள்ளிக் கிழங்குக்கறி அடுப்பிலை இருக்குது. நீங்க முகங்கழுவிவிட்டு வாருங்கோ. எல்லாம் சரியாய்ப்போய்விடும்.

பரம: சரி நீயெல்லாம் ஆயத்தப்பண்ணு. நான் முகங்கழுவி வாறன். (முகங் கழுவிவிட்டு வருதல்) சரி. கெதியாய்க் கொண்டுவா. நாரியுளையுது. சாப்பிட்டுவிட்டு ஒருக்காச் சரியவேணும்.

பார்: சரி சாப்பிட்டுவிட்டுச் சரியுங்கோ,
(சாப்பிட்டுவிட்டுப் பரமசிவம் படுத்தல்.)

## காட்சி 2.

இடம்: பரமசிவம் வீடு. நேரம்-நண்பகல்

[பரமசிவம் படுத்திருத்தல்]

பார்: இஞ்சேருங்கோ இஞ்சேருங்கோ.

பரம: மனுசன் ஏதோ அலுப்பெண்டு படுத்திருக்கவிடாமல் கரச்சல் பண்ணுகிறுய், சொல்லன் விஷயத்தை.

பார்: நான் கரச்சல் பண்ணவில்லை, சின்னத்துரையண்ணையின்ரை பொடியனுக்குக் கலியாணம் பேசினமாம். இண்டைக்குப் பொம்பிளை பகுதியார் வருகினமாம். என்னையொருக்கால் வந்துநிக்கச் சொன்னுங்க. பொடியன் நேத்துத்தான் கொழும்பாலை வந்தான்.
[பரமசிவம் எழுந்திருத்தல்]

பரம: நீ என்னெண்டால் மற்றைவேன்ரை அலுவல் என்றவுடன் சுடுகுது மடியைப்பிடி என்று நிற்கின்ருய். எங்கடை வீட்டலுவலைப் பற்றிக் கடுகளவும் எண்ணமில்லை. அதெல்லாம் சரி. ஏன் இவ் வளவுகெதியாய் இருந்தாப்போலை கலியாண எணணம் வந்தது.

பார்: அவங்க அதைப்பற்றி யோசியாமல் இருந்தாங்க. முந்தனுள் முத்தையா எண்டு ஒரு தரகர் இருக்கிருர். உங்களிட்டை இடைக் கிடை வருவார். அவர் நல்ல இடத்திலை ஒரு சம்பந்தம் இருக் கெண்டு சொன்ஞராம். பின்னை சின்னத்துரை அண்ணைபெண் சாதி அண்ணையைக் கரைச்சல் குடுத்து வளைச்சுப்போட்டுது. நல்ல சீதனமாம். காணிபூமியிருக்காம். 25 ஆயிரம் காசாய்க் கொடுக் கினமாம் (இரகசியமாய்) இராசம்மா அக்கா சொன்ஞ பொடியன் இருக்கிற இடத்திலை ஒரு வீட்டிலை சாம்பிடுகிருனும். அந்த வீட் டிலை ஒரு பெட்டை இருக்குதாம். தாய் ஒரு மாதிரியாம். தாயும் மோளுமாய்ச் சேர்ந்து பொடியனை வசியம் பண்ணிப்போட்டினை மாம். இதைக் கொழும்பாலை வந்தவை யாரோ சொல்லிச்சினை மாம்.

பரம: சீதனம் சீதனம் எண்டு சாகினம். போகேக்கை யாரேன் கொண்டுபோகப் போகினமோ? தங்கடை பிள்ளைக்கு விரும்பியதைக் கொடுக்கட்டன். பெண் வீட்டுக்கு ஏத்தவளாய், குணமுள்ளவளாய் மாமன் மாமியைக் கவனிக்கக் கூடியதாயிருக்க வேண்டும். கதைக்கை கதையாய் பெண் எந்த ஊராம் ?

பார்: உங்களுக்குப் பணத்தின்ரை அருமை தெரியாது. பணம் பாதா ளம் மட்டும் பாயும். குணத்தைக் கரைச்சுக் குடிக்கிறதோ. ஏதோ தொலையூராம்.

பரம: உனக்குப் பார்வதி பணப்பேய் பிடிச்சுவிட்டுது. உழுகிறமாடென் ருல் உள்ளூரிலை விலைப்படாதா? இவ்வளவு காசைக் கொடுத்து இந்த மாப்பிள்ளை எடுக்க பொட்டை பிள்ளைகிள்ளை வயித்திலை வாங்கியிருக்கவேண்டும். அவன் என்ன பெரிய உத்தியோகமோ? ஒரு கொம்பனியிலை தானே வேலை செய்கிருன். எங்கடை பொடி யனிலும் குறைஞ்ச சம்பளம்தானே. பெட்டையிலை ஏதோபிழை யிருக்கவேணும். சந்தேகம்தான்.

பார்: எப்ப பார்த்தாலும் உங்களுக்குச் சந்தேகந்தான். என்னள விலைதான் சந்தேகம் இல்லை. இருந்தால் இரண்டுபேரும் வேறை தான். அவங்க இரண்டுமணிக்கு வருவாங்க. அப்பபோறது சரி யில்லை. இராசம்மா அக்காவும் வாற என்று சொன்ஞ. நான் போட்டுவாறேன். நீங்க வீட்டிலை நில்லுங்கோ.

பரம: சரி போட்டுக் கெதியாய் வா.

## காட்சி 3

இடம்: பரமசிவம் வீடு. நேரம்: மாலை

(பரமசிவம் திண்ணைக்குந்தில் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருத்தல் இராசம்மாவும் பார்வதியும் போய்த்திரும்பி வருதல்)

பரம: இவ்வளவு நேரமும் அங்கை என்ன செய்தீர்கள்? கலியாணத்தை முடிச்சு விட்டுத்தான் வருகிறியள்போலவிருக்கு. பார்வதி உனக்கு வீட்டிலையுள்ள மாடுகண்டுகளைப் பற்றி எண்ணம் எள்ளளவும் இல்லை.

பார்: நீங்கள் என்ன முகத்தை காட்டிவிட்டு வரச் சொல்லுகிறியள் போல விருக்கு. சின்னத்துரையண்ணர் சொன்னார் நிண்டுவிட்டு அவர்கள்போனபிறகு போகச்சொல்லி. அப்ப நாங்கள் என்ன செய்கிறது?

பரம: சரி போய்த் தொலையுது. பெண் வீட்டார் எப்படி? எல்லாம் முற்றுகிவிட்டதா?

இரா: அதெல்லாம் சரிபாப்ப் போச்சு அண்ணை. பெட்பிளையும் கூட வந்தது. ஆனால் குமர்ப்பிள்ளைபோலத் தெரியவில்லை. மூண்டு நாலு பிள்ளைபெத்த மனிசிபோலத் தெரியுது. நல்லாய் இங்கிலீசு கதைக்குது. அந்தப் பெண்தான் காரும் ஓட்டிக்கொண்டு வந்தது களரிகண்ட பெண்போலவிருக்கு.

பரம: எனக்கு எல்லாம் விளங்குது பெண்ணின்ரை குணம் எப்படி எண்டு. அந்தப்பெண்ணைப்பற்றிச் சந்தேகப்பட வேண்டியிருக்கு அந்தக் காலத்திலை ஒரு பெண்ணைப்பாக்க ஆடு மாடு வாங்கிற சாட்டிலை வேறே எத்தனை சாட்டுச் சொல்லிப் போய்ப் பார்க்க வேணும். எத்தனை நாள் உலைஞ்சாலும் பெண்ணின்ரை முகத்தைப் பார்க்க முடியாது. இப்ப என்னெண்டால் பெம்பிளை மாப்பிளையைப் பார்க்கவருகுது. இவ்வளவு சீதனத்திலை மாப்பிளையின்ரை சம்பளத்திலையோ பெண்ணைக் கொடுக்கினம். பெண்ணும் வடிவெண்டு சொல்லுகிறியள். நல்ல மாம்பழத்திலை கட்டாயம் புழு விருக்கும். சந்தேகமான விஷயம்தான்.

பார்: உங்களுக்கு எந்த விடயத்திலும் பிழையாய்ச் சந்தேகப்படுவியள். அதெல்லாம் அந்தத் தரகர் முத்தையா அண்ணரை கைவரிசை தான். அவங்க கொடுத்துவைத்தவங்க

இரா: என்ன இருந்தாலும் அண்ணை எனக்கு அந்தப் பெண்ணிலை பிடிக்க்வில்லை. அவள் ஒரு ஆட்டக்காரி மாதிரித்தான் தெரியுது. எல்லாம் போகப் போகத் தெரியும். அவரும் தேடப்போறார். நான் போட்டு வாறேன்.

பரம: கொஞ்ச நேரம் இருந்திட்டுப்போ. இப்ப என்ன அந்தரம்? எனக்கு இந்த இங்கிலீசு படிச்ச பொட்டை பொடியளிலே சந்தேகம்தான். பள்ளிக்கூடத்திலே வாத்திமார் படிக்கிறபோது கண்ணிலே பறைவினம். விளையாட்டுப் போட்டி, பெற்ருேர் தின விழா வந்தால் அவையின்ரை திருவிளையாட்டை ஏன் பறைவான்? நான் பார்த்திருக்கிறன். தபால் கிபால் எழுதிப் புக்தகம் கொப்பிக்கை வைச்சுக் குடுக்கினமாம். இந்தக்காலப் பொட்டை பொடியளைப் பற்றிச் சந்தேகப்படத்தான் வேணும்.

இரா: அண்ணை சொல்லுறதுசரிதான். என்ரை பெட்டையும் ஒரு பொடியனைப்பற்றிப் புளுகுது. என்ன செய்கிறது. அவர் வந்தால் நெருப்பெடுப்பார். நான் போறேன். (போதல்

பார்: நானும் உலே வைக்கப்போறேன். நீங்க போய்த் தம்பியைப் பற்றிக் கேட்டுக் கொண்டு வாருங்கோ சின்னத்துரை அண்ணையின்ரை பொடியனிட்டை.

பரம: நான் இப்ப போகவில்லை, நீயந்தப் பொயிலையையும் நெருப்பெட்டியையும் எடுத்துக்கொண்டுவா. வாய் புளிக்குது.

(பார்வதிபோய் புகையிலையும் நெருப்பெட்டியும் கொண்டு வருதல்)

பார்: இந்தாருங்கோ.

பரம: நீ போய்ச் சமை.

## காட்சி 4.

இடம்: பரமசிவம் வீடு நேரம்: இரவு

(பரமசிவமும் பார்வதியும் சாப்பிட்டுவிட்டு வெற்றிலை போட்டுக்கொண்டு கதைத்தல்)

பார்: நீங்க என்ன பொடியனைப்பற்றி நினைக்கிறதேயில்லை. அவனுக்கு நாலு வயசு குறைஞ்சவன்தானே சின்னத்துரை அண்ணையின்ரை பொடியன். அவனுக்குக் குதிரைறேஸ் அடிச்சமாதிரிக் கிடைச்சிருக்கு. தம்பியையும் பார்த்து நல்ல இடமாய்ச் செய்தால் போச்சு எங்கடை சீவியம் நிச்சயமா? ஒரு பேரப் பிள்ளை இருந்தால் பொழுது போகும். மற்றவங்க பார்த்தால் பகிடியல்லை பண்ணப் போறுங்க.

பரம: நான் இப்ப நினைத்ததைத்தான் நீ சொல்லுகிருய் எனக்கு என்ரை பொடியனிலையும் நம்பிக்கையில்லை, எந்தப் பொட்டை

யைச் சுத்திக்கொண்டு திரிகிருனே தெரியாது. அவனுக்கு இந்தப் பக்கம் வர மனமுமில்லை. எனக்கு அக்காவின் இளைய பொட்டை டையைச் செய்யலாம் என்று யோசனை. பொடியன் என்ன சொல்லுகிருனே தெரியவில்லை.

பார்: உங்களுக்கு அக்காவின்ரை எண்ணம். அவையிட்டை தம்பிக்குக் கொடுக்க என்ன கிடக்குது? குடியிருக்க ஒரு குழி நிலத்துக்கு வழியில்லாமல் இரவல் கோடியிலை இருக்கினம். மாத்திக்கட்ட உடுத்த சீலைக்கு அடுத்த சீலையில்லை. ஆளைப்பார்த்தால் அறுத்துவிட்ட ஆண்பனை மாதி கழுத்திலை காதிலை ஒன்றும் இல்லை. சின்னத்துரை வீட்டுக்காரரைப்போல் நாங்களும் அதிகம்வாங்கவேண்டும்.

பரம: (கோபத்துடன்) கோடீஸ்வரன் வீட்டுப்பிள்ளை சொல்கிறதைப் பாரேன். நீ வரக்கை என்னதான் கொண்டுவந்தனீ? உன் பழைய நிலையை மறந்துவிட்டாய். நான் அடியன் அடிச்சு உன்னை நல்லாய் வைச்சிருக்கவில்லையா? பழைய நிலையை மறந்துதான் உலகத்திலே இத்தனை பசியும் பட்டினியும். உனக்குக் கண்கடை தெரியவில்லை. பணக்கார வீட்டுப்பெண்வந்தால் எங்களைக் கவனிக்குமா? அவவைக்கவனிக்க ஆள் ஒண்டு வேணும்.

பார்: நீங்க ஏன் என்மேல் எரிஞ்சுவிழுகிறீர்கள்? கலியாணம் செய்து 25 வருஷத்திற்கு மேலாகிறது. நீங்கள் காலால் இட்டத்தை நான் தலையால் செய்யவில்லையா? இத்தனை காலத்திலும் உங்கள் வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசினேனே? தம்பியின் நன்மைக்காகத்தான் சொன்னேன். நீங்க சம்மதப்படாவிட்டால் நான் என்ன செய்வது? சொல்லிப் பயனென்ன? கோடீஸ்வரன் வீட்டுப் பெண்ணுயிருந்தாலல்லவா?

பரம: (கோபத்தை அடக்கிச் சிரித்துக்கொண்டு) நான் சொன்னது கோபம் போலவிருக்கு. நான் கோபத்திலை கனக்கப் பேசிப் போட்டேன். எல்லாத்தையும் மறந்துவிடு. பொடியன்ரை தபாலையும் கனநாளாய்க் காணவில்லை. நானும் படுக்கப் போறேன். ஆடு மாட்டுக்கு வைக்கலைப்போட்டுவிட்டு படு.

பார்: நீங்க படுங்க.

# காட்சி 5.

இடம்: பரமசிவம் வீடு நேரம்: காலை

(பரமசிவம் காய்பிஞ்சு விற்றுவிட்டுச் சந்தையால் வருதல்)

பார்: (சிரித்துக்கொண்டு) தம்பி ஒருபாசல் அனுப்பியிருக்கிருன். முதல் சாப்பிடுங்கோ எடுத்துக்கொண்டு வாறேன்.

பரம: நான் கடையிலை சாப்பிட்டுவிட்டேன். இஞ்சை கொண்டுவா பார்ப்பம்.

பார்: இந்தாருங்கோ. (இருவரும் பாசலை அவிழ்த்தல்)

பரம: (கோபத்துடன்) எடியே! பாத்தியா. இந்தக்காலப்பொடியளை நம்பப்படாது என்று நேத்துத்தானே சொன்னேன். நீ நம்ப மாட்டேன் என்ருயே. பார் பார் இந்தப் படாதபாடுபட்டு வாயை வயிற்றைக் கட்டி படிப்பிச்சுவிட பெத்த தகப்பன் இருக்கிருன் என்று ஒரு சொல்லுக் கேட்காமல் தன் எண்ணத்துக்குக் கலியாணம் முடித்துவிட்டுப் படத்தையும் துணிந்து இஞ்சை அனுப்பிவிட்டானே. என்ன துணிவு? புழுக்கைப்பயல்.

பார்: நீங்க பேசுகிறீங்க. எனக்கு இன்னும் நம்பிக்கையில்லை. எண்டாலும் தம்பிக்குத் தபால் எழுதிக் கேட்டுப்பாப்பம். எப்படியிருந்தாலும் இனி என்ன செய்கிறது? பெட்டையும் நல்ல வடிவாய்க் கிடக்குது! அவனுக்கு ஒண்டு தேவை தானே. அதிலை இப்ப என்னவந்தது? நீங்களும் உங்கடை தகப்பன் ஒத்துக்கொள்ளாமலே என்னைக் கலியாணம் செய்தீர்கள்.

பரம: அதெல்லாம் இருக்கட்டும் அவனை நான்சும்மாவிடமாட்டேன் காணி பூமியெல்லாவற்றையும் விற்று கோயிலுக்குக்கொடுத்து விடுவேன். அக்காவுக்குக் நான் என்னசெய்யப்போகிறேன்? கலியாணம் செய்தாலும் பறவாயில்லை. ஒரு சொல்லுக்கேட்டானு?

பார்: நீங்க எப்பவோ செய்துவைக்கவேண்டிய கலியாணத்தை இன்னும் செய்யாவிட்டால் அவன் என்னசெய்வான்? நீங்கபோய் அவனையும் அவளையும் கூட்டிக்கொண்டு வாருங்கோ.

பரம: அதுதான் எனக்கு இப்பவேலை. அந்தச் சனியன் இனிமேல் இந்தப் படலை திறக்கப்படாது. (இராசம்மா வருதல்)

இரா: என்னண்ணை ஒருமாதிரியாய் இருக்கிறியள்.

பரம: பார் இந்தப்படத்தை நான் நேற்றுச் சொன்னது சரியோ இல்லையோ என்று

இரா: நீங்க அண்ணை நேத்துச் சொன்னது நடந்துபோச்சுது சின்னத்

துரை வீட்டார் விஷயம் முத்தமுன் காரியத்தை முடித்துவிட்டினம். (முத்தையா வருதல்)

பரம: முத்தையா வா வா.

முத்: வீடு பெரிய அமர்க்களமாயிருக்கு.

பரம: நீயுமிந்தாபார். இந்தக் காலப் பொடியளை நம்பமுடியாது.

முத்: தம்பிவிடயமாய்த்தான் வந்தனான். உங்கடை அவ என்னோடை கதைத்தவ. நல்லசம்மந்தம் தவறிப்போச்சு நீங்க குடுத்துவைக்கவில்லை.

பார்: அண்ணை! எல்லாம் குடுத்துவைக்கவேணும். அவரைப் போய்த் தம்பியைக் கூட்டி வரச்சொல்ல, சீறிவிழுகிருர்.

முத்: நான் போய்க் கூட்டிவருகிறேன். நீங்க ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். அவளை வெருட்டிவிட்டுப் பொடியனை இழுத்துக் கொண்டு வாறேன்.

பரம: நீ கஷ்டப்பட வேண்டாம். தந்தியடிச்சவனைக் கூப்பிடுவோம்.

முத்: அதுதான் சரி வந்தவுடன் விஷயத்தை முடித்துவிடுவம்.

பரம: இந்தத் தந்தியை அடித்துவிடு (விலாசம் கொடுத்தல்) நாளைக்குவா.

பார்: அண்ணை நீங்க இந்தவிஷயத்தில் உதவிபுரியவேணும்.

## காட்சி 6.

இடம்: பரமசிவம் வீடு நேரம்: பி. ப. 2மணி

(மகன் கொழும்பிலிருந்து வருதல்)

சுப்: அம்மா, அம்மா அப்பா எங்கே?

பார்: உங்கைதான் இருக்கிருர்.

சுப்: அவருக்கு என்னம்மா வருத்தம்?

பார்: உன்னைப்பற்றிய வருத்தம்தான்ரா.

சுப்: என்ன வருத்தம் சொல்லுங்கள்?

பார்: வருத்தம் ஒண்டும் இல்லை நீ போய் உடுப்புகளைக் கழற்று.

சுப்: அப்போ ஏன் தந்தியடித்தார்?

பரம: தார் உங்கை கதைக்கிறது?

பார்: அது நம்ப தம்பி தான்

பரம: எங்கையாம் அந்தக் குட்டி.

சுப். அம்மா ஏன் இப்படிக் கேட்கிறீர்?

பார்: நீ முந்தநாள் நீயும் ஒரு பெட்ட
அனுப்பினுய். அதன் பிறகுதான் இ
ஒண்டுமில்லை.

சுப்: அப்பா கோபம் கொண்டது அந்தப் படத்தைக் கண்டுதானே. (பரமசிவம் ஒற்றுக்கேட்கிருர்) எனக்குப் பக்கத்திலையிருக்கிறது என்னுடைய சினேகிதன் (சிரித்துக்கொண்டு) பெண்ணல்ல.

பார்: சொல்லு சொல்லு

சுப்: நாங்கள் கொழும்பில் தமிழ் மொழிப் பாதுகாப்பு நிதிக்கு ஒரு நாடகம் நடித்தோம். சினேகிதன் ஒருவன் பெண்வேஷம் போட்டான் நானும் அவனும் நடிக்கும் போது படம் எடுத்தார்கள்? அந்தப் படத்திலே ஒன்று வேருெரு சினேகிதனுக்குக் கொடுத்தேன். அவன் ஒரு குறும்புக்காரன். முசுப்பாத்தி பார்க்க உங்களுக்கனுப்பிவிட்டான்.

பார்: எடே! அப்படியா சங்கதி? இஞ்சேருங்கோ தம்பி அப்படிச் செய்ய மாட்டான் என்று சொன்னேன் எப்படி? எப்படி? அவனுடன் இருக்கிறது பெண்ணல்ல அவனுடைய சினேகிதனும்
(நண்பன் நடராசா வருதல்)

சுப்: மச்சான் வா வா. ஏன் இந்தப்பக்கம்?

நட: நீ தாய் தந்தையருக்கு எழுதிய கடிதமும் காசும் எனக்குத் தவறிவந்துவிட்டன. நான் யாழ்ப்பாணம் போகிறேன். வீட்டிலை குடுத்திட்டுப் போகலாம் என்று வந்தேன். நீ ஏன் நானும் நீயும் சேர்ந்து எடுத்த படம் அனுப்பவில்லை?

சுப்: நான் உனக்கென்று ஒரு கொப்பி வைத்திருக்கிறேன். கனகு ஒரு கொப்பி வாங்கி இஞ்சை வீட்டுக்கு அனுப்பினுன் அந்தப் படம்தான் என்னை இங்கை நிற்கப்பண்ணிவிட்டது.

நட: எங்கே அந்தப் படத்தைப் பார்ப்போம்

சுப்: அம்மா அந்தப் படத்தைக் கொண்டு வாருங்கோ.

பார்: நீங்க சந்தேகம் கொண்டு எவ்வளவு கரைச்சலையுண்டு பண்ணிவிட்டீர்கள். தம்பியின்ரை மரியாதையையும் கெடுத்துவிட்டீர்கள். அந்தப் படத்தையும் கொண்டு இப்படி வாருங்கோ.
(பரமசிவம் வெட்கத்தினுல் தலைகுனிந்து கொண்டு வருதல்)

சுப்: அம்மா அதைப்பற்றி பறுவாயில்லை. எல்லாருக்கும் கோப்பி போட்டுக்கொண்டுவா. [இராசம்மா, முத்தையா வருதல்]

துவிட்டான். தம்பியும் அதிலே இருக்கிற
நடிக்கிறபோது எடுத்த படமாம். பெண்

ும் கோப்பிகுடித்தல்]

பரம: ... நான் ஒரு சந்தேகப்பேர்வழி. எதற்கெடுத்தாலும் சந்தேகம் கொள்வேன். ஆலோசிப்பதில்லே. அதனுல் மனத்திலே நிம்மதியில்லே. இப்போது என்ரை பொடியனுடைய மரியாதையையும் கெடுத்து விட்டேன் இது ஒரு பாடமாகவிருக்கும். இனிமேல் சந்தேகத்திற்கு எள்ளளவும் இடம் கொடுக்க மாட்டேன். இன்றுடன் சந்தேகத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டேன். பார்வதி தம்பி என்னே மன்னித்துவிடு.

சுப்: அது போகட்டும்.

# நல்ல பாடம்

## கதா பாத்திரங்கள்

| | | | |
|---|---|---|---|
| பாலச்சந்திரன் | ( பால ) | ... | ஓர் உத்தியோகஸ்தன் |
| பிரேமாவதி | ( பிரே ) | ... | பாலச்சந்திரன் மனைவி |
| சரோஜா | ( சரோ ) | ... | ,, மகள் |
| சுப்பன் | ( சுப் ) | ... | ,, வீட்டு வேலைக்காரன் |
| நாகரத்தினம் | ( நாக ) | ... | ,, சிநேகிதன் |
| நல்லையா | ( நல் ) | ... | ஒரு கமக்காரன் |
| சரசுவதி | ( சரசு ) | ... | நல்லையா மனைவி |
| வீரசிங்கம் | ( வீர ) | ... | நல்லையாவின் மகன் |

## காட்சி 1

இடம்: பிரேமவாசம் (பாலச்சந்திரன் வீடு) நேரம்: மாலை

(கணவனின் வருகையை எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்ருள் பிரேமாவதி. பாலச்சந்திரன் வருதல்)

பிரே: பாலா! நீங்கள் ஆபிசிலிருந்து வர ஏன் இவ்வளவு நேரம் சென்றது? பாலும் பழமும் படம் பார்க்கப் போகவேண்டும் என்று போட்டபிளான் கெடவல்லவாபோகின்றது! சுப்பா! ஐயா வந்துவிட்டார். டீ கொண்டுவந்து கொடு.

பால: நான் டீ குடித்துவிட்டு வந்துவிட்டேன். அப்படம் நாளைய தினம்தான் ஆரம்பம். நாளைக்குப்போவோம்.

பிரே: சரி அதைப்பற்றிப் பறவாயில்லை கதைக்குள் கதையாக இந்த ஊரில் உள்ளவர்கள் எல்லோரும் என்னைப்பற்றிக் கேவலமாகக் கதைக்கிருர்கள், நீங்கள் எனக்கு வேண்டியதெல்லாம் வாங்கித் தருகின்றீர்களாம். நேரத்திற்கு நேரம் மாறி மாறிச் சேலையுடுக் கின்றேனும். படம் பார்க்க எல்லாம் போகின்ருேமாம். இவர்களுக் கெல்லாம் ஏன் இந்தப் பொருமை? நீங்கள் என்னைச் சீமாட்டி யாக வைத்திருக்கின்றீர்கள், எனக்கு என்ன குறை?

பால: உன்னைப்பற்றிக் கேவலமாகக் கதைத்தவர்கள் யார்? அவர் களுக்கு நல்ல பாடம் கற்பிக்கின்றேன்.

பிரே: நீங்கள் அவதிப்படாதீர்கள், இனிமேல் இத்தகைய கதை கதைக்கின்றவர்களின் 32 ஐயும் கையிலே எண்ணிக் கொடுக்கின்

J

றேன், என்ன செய்வது? சுத்த பட்டிக்காடு. தெரியாத்தனமாக இந்த இடத்தில் வீடுகட்டிவிட்டோம்.

பால: நானும் கொழும்பில் ஓர் வீடு வாங்கலாம் என்றுதான் யோசிக்கின்றேன். இந்த வீட்டை யார் வாங்கப்போகின்ருர்கள்?

பிரே: நீங்கள் என்ன கதைக்கின்றீர்கள்? உடுத்த சீலேக்கு அடுத்த சீலே இல்லாத அன்னக்காவடிகள் இருக்கின்ருர்கள். யாரிடம் பணம் இருக்கின்றது?

பால: எல்லாம் யோசித்துப் பார்ப்போம். சரோஜா எங்கே?

பிரே: பிள்ளே அறையிலே கதைப்புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கின்றது. எனக்கும் பொழுது போகிறதில்லே. சினிமாநேசன், காதல், குண்டூசி, பேசும்படம் போன்ற பத்திரிகைகளேவாங்கி வாருங்கள் நானும், வாசிக்கலாம். பிள்ளேயும் ஆசைப்படுகின்றது

பால: எல்லாவற்றிற்கும் பணம் கட்டியிருக்கின்றேன். வருகிற மாதத்திலிருந்து ஒழுங்காக வரும்.

பிரே: நான் உங்களுக்கு நினேவூட்ட மறந்து விட்டேன். நாளே இன்றைக்குப் பிள்ளேயின் பிறந்தநாள் வருகின்றதல்லவா? நீங்கள் அதைப்பற்றி யோசிக்கவில்லே. யன்னல், கதவு, கதிரை எல்லாவற்றிற்கும் நல்ல துணி வாங்கிப்போட வேண்டும். வருகின்றவர்கள் எப்படி நினேப்பார்கள்?

பால: பிள்ளேயில் எனக்கு அக்கறையில்லேயா? உங்கள் சந்தோஷம் தானே எனது சந்தோஷம். வேண்டிய ஒழுங்கெல்லாம் செய்துவிட்டேன். இரண்டாயிரம் ரூபா வரையில் வந்துவிட்டது நான் எனது நண்பர்களுக்கெல்லாம் சொல்லிவிட்டேன். நீ உனது சினேகிதிகளுக்கெல்லாருக்கும் சொல்லிவிடு. பின்பு என்னேக் குறைசொல்லவேண்டாம்.

பிரே: நாய் தின்னுக்காசு எதற்கு? இருக்கும்மட்டும் உண்டு உடுத்து உல்லாசமாய் இருந்தாற்போதும் போகும்பொழுது கட்டிக் கொண்டா போகப்போகிருேம்? நீங்கள் மாத்திரம் உங்கள் தாய் தந்தையருக்குச் சொல்லாதீர்கள். அவர்கள் அநாகரிகமானவர்கள். இங்கு வருகின்றவர்களுக்குப் பிடிக்காது. மாமா, மாமி என்று சொல்லவே எனக்கு வெட்கமாயிருக்கின்றது.

பால: அது நான் எப்போதே நினேத்தது. வயது வந்தகட்டைகளுக்கு இங்கு என்ன வேலே. நான் முன்பு படிக்கும்போதே காற் சட்டை என்னத்திற்கு என்று திட்டுவார்கள். நான்குமுழத் துண்டு கட்டி

னுந் போதாதா என்பார்கள். மானத்திற்கு உடுத்தாற் போதும் என்பது அவர்கள் கொள்கை, சரி இங்கு வருகின்றவர்களுக்கு உணவு தயாரிக்கச் சுப்பனுக்குக் கஷ்டமாகவிருக்குமே ?

பிரே: நீங்கள் ஏன் யோசிக்கின்றீர்கள்? எங்களுடைய காணியில் தோட்டம் செய்யும் நல்லேயாவையும் மனைவியையும் வரச்சொன்னுற் போதுமே.

பால: அவன் காலை தொடக்கம் மாலைவரை தோட்டத்திற்குள் இருந்து வெயில் குடிப்பான். மனைவியை மாத்திரம் சொல்லிவிடு சுப்பனோடு உதவியாக இருந்து சமைக்கட்டும்.

பிரே: அவர்கள் நாகரிகமில்லாதவர்கள். என்றாலும் வேறுயாரைப் பிடிப்பது? இந்த ஊரில் நாம் ஒருவருக்கும் சொல்லவில்லையே! சொல்லிவிடுகின்றேன். சரோஜா இங்கேவா, பப்பா கூப்பிடுகின்ருர். (சரோஜா வரல்)

பால: உனக்கு என்ன வேண்டும் சரோஜா?

சரோ: எனக்கு என்ன பப்பா குறை· எனக்கு ஒன்றும் தேவையில்லை. நீங்கள் தானே எனக்கு என்னென்ன தேவையோ அவையெல்லாம் வாங்கித் தந்துள்ளீர்கள்,

பால: } பிள்ளை நீ சரசுவின் பையன் நல்லையாவுடன் விளையாடப்
பிரே: } போகாதே. இங்கு வந்தாலும் கதைக்காதே. அவர்கள் தாழ்ந்தவர்கள்.

சரோ: அம்மா அவன் நல்லவன். ஏன் அம்மா அப்படிச் சொல்கிறீர்கள்? என்றாலும் நீங்கள் சொன்னால் மறுக்கமுடியுமா? (போகிருள்)

பிரே: நீங்கள் என்ன மற்றவர்கள் புகழ்ந்து பேசக்கூடியதாக ஒன்றும் செய்வதில்லை. எத்தனையோ பேருடைய படங்கள் எல்லாம் பத்திரிகைகளில் வெளியாகின்றது. தங்கச்சியினுடைய பிறந்த தின விழாவை ஒட்டி இருவரும் 500, 500 ரூபா லேடிஸ் கிளப்புக்குக் கொடுத்தால் இருவருடைய படமும் பத்திரிகையில் வரும்.

பால: அப்படிச்செய்வோம், மறந்துபோகாமல் சரசுவிடம் சொல்லிவிடு.

பிரே: நிலவாக இருக்கின்றது பிள்ளையையும் கூட்டிக்கொண்டு சந்திவரையும் சென்று வருவோம்.

## காட்சி 2.

இடம்: நல்லையாவின் சிறுவீடு. நேரம்: காலை

(சரஸ்வதி வீட்டுவேலைகளைக் கவனித்துக் கொண்டிருத்தல். பிரேமாவதி வருதல்)

பிரே: சரசு! சரசு! என்ன செய்கிறாய்?

சரசு: அம்மா! என்ன செய்கிறது? குரக்கன் பிட்டு அவிக்கிறேன் தம்பி பள்ளிக்கூடத்திற்குப் போக ஓடிவரப் போகிறான். நேரம் போய்விட்டது.

பிரே: எங்கே படிக்கிறான்? எந்த வகுப்பு படிக்கிறான்?

சரசு: கிட்ட உள்ள தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் தான் படிக்கின்றான் ஒன்பதாம் வகுப்புச் சோதனை எடுத்தவன். என்னவோ கடவுள் செயல்?

பிரே: இப்போது தானே சும்மா எங்கும் படிக்கலாம். இங்கிலீசு படிப்பித்தால் என்ன?

சரசு: என்னம்மா இங்கிலீசு படித்து. வீண் செலவுதானே. நமது அருமையான தமிழைப் படித்தாற் போதும். எல்லாரும் இங்கிலீஸ்படித்தால் தமிழையாரம்மா படிக்கிறது. இங்கிலீஸ் பள்ளிக் கூடங்களிலே இப்போது தமிழ்தானே படிப்பிக்கிறார்கள். நான் தமிழ் எட்டாம் வகுப்புப்படித்தேன், எனக்கென்னம்மா குறை?

பிரே: மற்றவர்கள் மதிக்கமாட்டார்கள். இது உனக்குத் தெரியாதா?

சரசு: ஏன் அம்மா தெரியாது? தமிழ் எங்கள் தாய்ப்பாஷை. தமிழை விட்டு ஆங்கிலம் படிப்பது தாய் பிச்சை எடுக்க தம்பி கோதானம் செய்கிற மாதிரியல்லவா இருக்கும். இப்போது எல்லோரும் அப்படித்தானே அம்மா செய்கிறார்கள். பேப்பரில் வாசித்தேன் மேடைகளிலே நின்று தமிழுக்காக உயிர்விடுகிறேன். 'என்று சொல்லுகிறார்கள். வீட்டிலே பேசுவது ஆங்கிலம். பிள்ளைகுட்டி நாய்களுக்குக்கூட ஆங்கிலப் பெயர் வைக்கிறார்கள் நடை, உடை பாவனை எல்லாம் ஆங்கிலமயம். தமிழில் உள்ள எழுத்துக்களே சரியாக எழுதத் தெரியாது. பேச்சு ஒன்று. செயல் ஒன்று இதுதான் உலகம்.

பிரே: நீயும் பேப்பர் வாசிக்கிறாய் போலவிருக்கின்றது. இங்கிலீசில் உனக்குப் பிடியாது போலவிருக்கிறது.

சரசு: அம்மா! உங்களுக்கு கோபம் வந்து விட்டது போல் தெரிகிறது. நான் ஆங்கிலம் படிக்க வேண்டாமென்று சொல்லவில்லை தமிழை நன்றாகப் படிக்கவேண்டும். பின் வேண்டுமானால் ஆங்

கிலம் படிக்கலாம். தம்பி வீரகேசரி, தினகரன், கல்கி, கலைமகள் என்ற தமிழ்ப்பத்திரிகைகள் எடுக்கின்றவன். நான் சும்மா வாசிப்பேன். அதெல்லாம் போகட்டும். ஏன்வந்தீங்க?

பிரே: நாளைக்கு எங்களுடைய பிள்ளையின் பிறந்தநாள். அதற்கு அநேகம் பேர் வருவார்கள். எல்லோருக்கும் எங்கள் வீட்டிலே தான் சாப்பாடு. சுப்பனுக்கு உதவிசெய்ய ஒரு ஆள் தேவை?

சரசு: அம்மா! அப்படியும் ஒரு கொண்டாட்டம் உண்டா? நான் ஏன் அம்மா அங்கே? வேறுயாரையும் கூப்பிட்டால் நல்லது.

பிரே: உனக்கென்ன சரசு தெரியும்? நாங்கள் ஒவ்வொரு வருடமும் பிள்ளையின் பிறந்த நாள் கொண்டாடுவது வழக்கம். நீ வந்து பார். நாங்கள் இந்த ஊரில் வேறு யாரையும் கூப்பிடவில்லை நீ கட்டாயமாக வரவேண்டும். வரும்போது நல்ல சீலை உடுத்துக்கொண்டு நகைகளும் போட்டு வா.

சரசு: அம்மா! நான் அவரிடம் சொல்லிவிட்டு வருகிறேன். நீங்கள் உடுப்பது போல நல்ல சீலைகள் இல்லை. நாங்கள் சேலையுடுப்பது மானத்தைக்காக்க. அதனால் குறைந்த விலையிலுள்ள உடைதாங்கக் கூடிய சீலைகளே நான் வாங்குவது வழக்கம்.

பிரே. (பொருமையால் பேசுகின்ருள் என எண்ணி) எட்டுமணிபோல் எல்லாரும் வருவார்கள். எட்டுமணிக்கு முன் எல்லாவற்றையும் முடித்து விட்டு, விருப்பமானால் நீ உன் வீட்டுக்கு வரலாம்.

சரசு: அம்மா! நான் மறந்துவிட்டேன். அவர் நாளைக்குத்தான் குரக்கன் நடவேண்டும் என்று சொன்னவர். தோட்டத்திலே வேலை செய்கின்றவர்களுக்குச் சாப்பாடு தேடவேண்டும். நான் என்ன செய்ய?

பிரே: என்ன இருந்தாலும் எனக்குத் தெரியாது. நாளைக்காலையில் வந்து எல்லாம் ஒழுங்கு செய்துவிட்டுவா. வராவிட்டால் என்ன நடக்கும்பார். எங்கள் காணியில் தோட்டம் செய்து நாலுகாசு கையில் பிடித்துவிட்டீர்கள் போலும். நான் போகிறேன்.

சரசு: அம்மா கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் உள்ளதைச் சொன்னேன். உங்களுக்காக அவரிடம் சொல்லி நடுகையை மாற்றச் செய்கின்றேன்.

பிரேமா: ஏதோ கணக்கப் படித்தவள் போல் கதையளக்கிருய். கட்டாயம் வரவேண்டும்.

சரசு: சரியம்மா. (பிரேமாவதி போதல்)

## காட்சி 3.

இடம்: நல்லையா வீடு நேரம்: இரவு

(நல்லையாவும் மனைவியும் இராப்போசனம் முடித்து இருந்து கதைத்தல்)

சரசு: உங்களுக்கல்லவா சொல்ல மறந்து விட்டேன்.

நல்: என்ன அது?

சரசு: காலையிலே பிரேமா வந்து தங்களுடைய மகளினது பிறந்த நாள் நாளைக்காம். சமையல் வேலை செய்ய வரச்சொல்லிப் போயிருக்கின்றது. சிநேகிதர்கள் வருவார்களாம்.

நல்: நீ என்ன சொன்னாய்?

சரசு: நான் உங்களைக் கேட்டு வருவதாகச் சொன்னேன்.

நல்: நல்ல காலமாகப் போய்விட்டது. குரக்கன் நடுகையும் நாளையின்றைக்கு நடலாம் என்று இருக்கின்றேன். அவர்கள் எப்படியிருந்தால் என்ன? நாம் எப்படி முகத்தை முறிப்பது?

சரசு: நான் குரக்கன் நடாவிட்டாற்றான் வருவேன் என்று சொன்னேன். பாருங்கள் இவர்கள் எல்லாம் இடாம்பீகமாகச் செலவழிக்கின்றார்கள். இவர்களுக்கு எப்படிப் பணம் வருகின்றது?

நல்: பணம் வரும் வருவாய் கந்தோரிலும் உண்டாக்கும். பணம் என்பது ஒரு சாமானிய பொருளல்ல. நண்பர்களுக்கிடையில் பகையையுண்டாக்கும் நீதி நியாயம் பார்க்கச் சொல்லாது.

சரசு: எப்படியென்றாலும் பாருங்கோ, போனமாதம் ஒரு திருவிழாவிற்கு வாணத்திற்கே ஆயிரத்துக்கு மேல் செலவழித்தார்கள்.

நல்: உனக்குத் தெரியாது ஊரவர்கள் எல்லாரும் சேர்ந்து சாவி கொடுத்துவிட, மனைவியும் தூண்டிவிட அள்ளி இறைத்தார் பணத்தை. மனைவியோ பேரையும் புகழையும் விரும்பும்ஒரு பெண், பணத்தை நல்ல வழியில் செலவழிக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லை.

சரசு: பணத்தைப் பாழாக்கினால் புகழா கிடைக்கும்? எத்தனையோ பேர் "சீக்கறெற்" என்று சோக்குக் கட்டி மாதிரி ஒன்றை வாயில் வைத்துப் புகை புகையாகக் கக்குகிறார்கள். அவர்களும் அப்படித்தான் நினைக்கிறார்கள். ஆகாய வாணத்திற்கே ஆயிரம் ரூபா செலவழித்தார்கள் என்று கேட்டபொழுதே வயிற்றைப் பற்றி எரிந்தது. இந்தப்பணத்தை நல்லவழியில் செலவு செய்தால் எவ்வளவு பிரயோசனம்?

நல்: கேளேன் கதையை. நீ பார்த்திருப்பாய் அவர்களுடைய யன்னல் கதவு எல்லாவற்றிற்கும் அதிகபணம் செலவழித்து துணி

களை வாங்கி அலங்காரம் என்று கட்டியிருக்கின்றார்கள். ஒரு நாள் ஒரு பிச்சைக்காரன் பழந்துணியொன்று கேட்டபொழுது மனைவி நாயைச் சூக்காட்டிவிட்டது. அந்த ஏழையே தற்செயலாக பல பேர் இருந்தசமயம் வந்து துணியொன்று கேட்டான். அவர்கள் சாப்பாடும் கொடுத்து நல்லதொரு பட்டுவேட்டியும் கொடுத்தார்கள்.

சரசு: இவர்கள் மற்றவர்கள் தங்களைக் கொடைவள்ளல் என்று நினைப்பதற்காகவே செய்கிறார்கள். அன்பினால் செய்வதில்லை. ஏன் பாருங்கோ அவருடைய மனைவி எங்கு போனாலும் ஒரு நாயைக் கட்டி இழுத்துக் கொண்டு திரிகின்றா?

நல்: பிராணிகளிடத்தில் அன்பு இருக்கத்தான் வேண்டும். ஏழைகளை ஏறெடுத்தும் பாராமல் நாயைக் குளிப்பாட்டி நல்ல உணவு கொடுத்து தன்னுடன் படுக்கையில் வைத்திருப்பதால் என்ன பிரயோசனம்? நாயிலும் மனிதன் கேவலமாக நடத்தப்படுகிறான்.

சரசு: ஒரு நாளைக்கு ஒரு சேலை உடுத்துகிறாளே இந்தச் சேலைகளை எங்கே வைத்திருக்கிறார்கள்?

நல்: அதை ஏன் கேட்கின்றாய்? தற்செயலாக ஒரு நாள் ஒருபொருள் தூக்குவதற்காக வீட்டிற்குள் போனேன் இரண்டு அலுமாரி நிறையச் சேலை இருந்தது. நான் அது ஒரு புடைவைக் கடையென்றே நினைத்தேன். எவ்வளவு மடைமைத்தனம். ஓர் ஊருக்கே போதுமான உடுப்புகளை வீட்டிலே வைத்திருப்பது பெரிய சுயநலம். உடுப்பது மானத்துக்கு உடுத்தவேண்டும். மரியாதையாய் மலிவாய் உடுத்தவேண்டும். அரை குறை உடைகளை அலங்கோலமான உடைகளை அதிக பணம் கொடுத்துவாங்கி என்ன கண்டார்கள். எனக்கு நித்திரை வருகின்றது.

சரசு: நான் நாளைக்குப் போகட்டுமா?

நல்: நீ போய்வா. அங்கு வருகின்றவர்கள் யாபேரும் பணத்தைப் பாழாக்குகின்றவர்கள். குடித்துப்போட்டு கும்மாளம் போடுவார்கள். நீ வேலையைப் பார்த்துவிட்டுவா. அவர்கள் சில வேளை உன்னையும் கேலி செய்வார்கள். அங்கே அதிகநேரம் நில்லாதே.

சரசு: சரியுங்க.

நல்: நான் காலையில் வேளைக்குத் தோட்டத்திற்குப் போகவேண்டும் நீயும் படுத்துக்கொள் தம்பி எங்கே?

சரசு: இன்று "சிக்கன வாழ்வு" என்னும் விடயத்தைப்பற்றி ஒரு கூட்டத்தில் பேசப்போயிருக்கின்றான். அவர்கள் காரிலே கொண்டு வந்துவிடுவார்கள்.

நல்: சரி நீயும் படுத்துக்கொள்.

சரசு: நீங்கள் படுங்கோ. நான் தம்பிவந்தவுடன் படுக்கின்றேன்.

(படுத்தல்)

## காட்சி 4.

இடம்: பிரேமவாசம், காலம்: காலை

(சரசுபோதல்)

சுப்: அக்கா, வா, வா,

சரசு: அம்மாவைக்காணேம்,

சுப்: அதை ஏன் அக்கா பேசுவான். இராத்திரி அம்மாவினுடைய சினேகிதியும் புருஷனும் வந்தார்கள் எல்லாரும் சேர்ந்து குடித்து விட்டுக் கூத்தாடினர்கள்
நேரமும் 12க்கு மேலாகிவிட்டது. வழக்கமாக அம்மா ஐயா கந்தோருக்குப் போனபின்புதான் எழும்புவா.

சரசு: சரி, அம்மாவும் குடிக்கின்றவா?

சுப்ப: உங்களுக்குத் தெரியாது அக்கா, அம்மா ஐயாவிலும் நல்லாய்க்குடிப்பா, கந்தோரால் வரும்போது கையில் ஒன்று கொண்டு வராவிட்டால் ஐயாவுடன் சண்டைதான். இவ்வீட்டுப் பொட்டுக்கேடெல்லாம் வெளியிற் றெரியாது. (அக்காகிட்டவா)

சரசு: என்ன?

சுப்: உங்களுக்கென்ன தெரியும், பெரிய கோடீஸ்வரன் வீடுமாதிரி எல்லாம் நடக்குது. விசயம் பெரிய பீத்தல். ஐயா கந்தோர்க் காசில் 10 ஆயிரம் ரூபா விளையாடி, இந்தக் காணியையும் வீட்டையும் ஈட்டுக்குவைத்து, ஒரு விதமாய் ஆட்களைப் பிடித்துவிடயத்தைச் சடைஞ்சாச்சு, இது நடந்து ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது. காணியும் வீடும விலைப்படப்போகின்றது கொஞ்சநாட்களில். இது உங்களுக்கானபடியால் சொன்னேன். இரகசியமாகவிருக்கட்டும்,

சரசு: அப்படியா சங்கதி? அம்மாவுக்கு விசயம் தெரியாதா?

சுப்ப: ஏன் தெரியாது? அம்மாவுக்கும் தெரியும். அவவுக்கு அதைப்பற்றி எள்ளளவும் கவலை இல்லை. அவவது ஆட்டத்திற்கு ஆடுகிற பம்பரம்தானே அவர். அவருக்கு இப்போது சரியான யோசனை. வெளிக்குக் காட்டுவதில்லை. அம்மா போட்டிருக்கிற நகைகளும் போலி நகை

சரசு: உலகம் அப்படித்தானே. ஏழைகள் ஒன்று இரண்டு .நல்ல நகைகள் போட்டால் போலி என்பார்கள். பணக்காரர் என்று பேர்எடுத்தவர்கள் எப்படிப் போட்டாலும் அசல் தங்கம்தான்; எல்லாம் வெளிவேசம்தான், எச்சிற்கையாற் காக்கை துரத்தமாட்டாங்க. பேருக்கும் புகழுக்கும் பாடுபடுகிறுங்க. ஐயாவுக்குத் தாய் தகப்பன் இல்லையா?

சுப்: அது ஒரு வேடிக்கைதான். இந்த அம்மா அவங்க இங்குவந்தால் மரியாதைக்குறைவென்று ஐயாவைக் கொண்டு இங்கு வர வேண்டாம் என்று சொல்லச் செய்து விட்டாங்க, பெற்ற தாய் தந்தையைக் கூட வெறுக்கச் செய்துவிட்டாங்க' அவங்க தோட்டக்காரர்களாம்.

சரசு: அம்மா உடைய தாய் தகப்பனும் வருகிறதில்லையா?

சுப்: அவர்கள் அடிக்கடி வருவார்கள். அம்மா வீட்டில் உள்ளவைகளைத் திரட்டி உருட்டிக் கொடுப்பாங்க.

சரசு: பாவம்! உங்க ஐயாவும் ஏமாந்துபோனுர். நல்லபாடம் படிப்பார். இப்படி எத்தனை நாளுக்குச் சீவிக்கமுடியும்?

சுப்: அக்கா! ஐயாவிடம் வருகிற கடன்காரர்களை ஐயா இருந்தாலும் இல்லை என்று சொல்லி அனுப்பிவிடுவேன்.

சரசு: நீ ஏன் இந்த வீட்டில் இருக்கின்ருய்?

சுப்: ஐயாவின் அம்மா, ஐயாதான் என்னை வளர்த்தார்கள். அவர்களிடம் வளர்ந்த உடம்பு அவர்களுடைய மகனுக்குப் பாடுபடுகின்றது. போகவும் மனம் இல்லை.

சரசு: சமையல் முடிந்துவிட்டது, நான் வீட்டிற்குப் போகவேண்டும்,

சுப்: அம்மாவும் அப்படித்தான் சொன்ஞ, வேலை] முடித்தவுடன் அனுப்பிவிடச் சொல்லி. வருகின்றவர் உங்களை விரும்பார்களாம்.

சரசு: எல்லாவற்றிற்கும் கடவுள் இருக்கின்ருர். கமக்காரர் என்று ஏளனம் செய்கினம். எங்களுக்கு வேஷம் போடத் தெரியாது. மரியாதையாகச் சீவிக்கத்தான் தெரியும். நான் வருகிறேன்.

சுப்: அக்காகுறை நினைச்சுக்கொள்ளாதீர்கள். அம்மா சொன்னதைச் சொன்னேன். அவவின் எண்ணம் பெரிது. நீங்கள் வந்ததேதவறு. நான் சொன்னதை மாத்திரம்—.........

சரசு: தவறல்ல. இது நான் செய்த உதவியாக விருக்கட்டும். வருகிறேன்.

---

## காட்சி 5.

இடம்: பஸ் நிலையம். காலம்: மாலை

(பஸ் நிலயத்தில் [பாலச்சந்திரனும் நண்பன் நாகரத்தினமும் சந்தித்தல்)

நாக: எப்படிச் சுகம்?

பால: மிஸ்ரர் நாகரத்தினம் சுகத்திற்கு என்னப்பா குறை? (பிச்சைக்காரன் பிச்சைகேட்டல்) போடா ஆளைப்பார்த்தால் புற வெட்டுத்தள்ளி 5, 6, தீராந்திவெட்டலாம் பிச்சையாம் பிச்சை.

நாக: ஏனப்பா இங்கேவா. இதைப்பிடி (என்று பத்துசதம் கொடுத்தல்)

பால: ஏன் மிஸ்ரர் நீங்கள் நம்ம மகளது பிறந்த தின விழாவிற்கு வரவில்லை. மிஸ்சிஸ் கூடத்தேடினு?

நாக: எனக்கு அப்படியான வைபவங்களில் பங்கு பற்ற விருப்பமில்லை. எல்லோரும் மூக்குமுட்டக் குடித்துவிட்டுக் கூத்தாடுவார்கள். அதனுற்றுன் வரவில்லை. என்றுற் சொல்லக்கூடியமட்டும் சொல்லிவிட்டேன். அநாவசியமாகப் பணத்தைச் செலவு செய்யாதீர்கள். ஊசிபோகிற இடம் பார்ப்பீர்கள். உலக்கை போற இடம் பார்க்கமாட்டீர்கள். பிச்சைக்காரருக்கு ஒரு சதம் கொடுக்க மாட்டீர்கள். லேடீஸ்கிளப்புக்கு பணத்தை அள்ளிக் கொடுப்பீர்கள். திருவிழாக்களில் பணத்தை கரியாக்குவீர்கள். நெருப்புச் சுடும் சுடும் என்ருல் நம்பார்கள். ஒரு கால் அனுபவம் கிடைத்தால் நெருப்புக்குக் கிட்டத் தலைகாட்டமாட்டார்கள். நான் அவசரமாக ஓர் இடம் போகவேண்டும். வருகின்றேன்.

பால: மிஸ்ரர் நாகு!என்ன செய்வது? பணத்திற்காக ஒரு பணக்காரப் பெண்ணைக்கட்டினேன். அவள் எண்ணத்திற்கு ஆடினேன். கடன் தலைக்குமேல் வந்துவிட்டது. இரண்டு மூன்று நாட்களாக மூளை சரியில்லை. நல்லபாடம் படித்துவிட்டேன். எனக்குஒரு உதவி செய்யவேண்டும்,

நாக: என்னப்பா செய்யவேண்டும்? சொல்லு.

பால: நீங்கள் போகவேண்டிய அலுவலுக்கு நாளைக்குப் போகலாம். கடன் தொல்லை தாங்கமாட்டாமல் கந்தோரில் ஒரு பத்து ஆயிரம் ரூபா விளையாடிப்பிடிபட்டு காணியை ஈடுவைத்துக் கட்டிவிட்டேன். இது ஒருவருக்கும் தெரியாது. நடந்து ஒருவருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. இந்தக்கிழமைக்குள் எடாவிட்டால் அறுதியாகப் போய்விடும். இதற்கு ஏதாகிலும் ஒழுங்குசெய். இதுதான் நான் கடைசியாக உன்னிடம் கெஞ்சிக்கேட்பது. இனிமேல் உன் சொற்படி நடக்கின்றேன்.

நாக: நீங்கள் வீட்டுக்குப் போங்கள், இரவு நல்லையாவைக் கேட்டுச் சொல்கிறேன்.

பால: அது யாரப்பா நல்லையா?

நாக: வீரசிங்கம் என்றெரு பையன் கூட்டங்களில் பேசித்திரிவான்.

மிகவும் கெட்டிக்காரன். நல்ல குணமுள்ள பையன், அவனது தகப்பன்.

பால: ஓ! எங்களுடைய தோட்டத்தைச் செய்கின்றவனு? அவனிடம் அவ்வளவு பணமிருக்கா?

நாக: ஆச்சரியப்படுகின்ருய். கமக்காரர்களை நீ கேவலமாக நினைத்துள்ளாய். அவனிடம் 20,000 ரூபாய் வரையில் இருக்கின்றது. நான் போனமாதம் ஒரு ஆளுக்கு 5 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொடுத்தேன்.

பால: ஆச்சரியப்படாமல் என்ன செய்வது? எப்படி இவ்வளவையும் சம்பாதித்தார்கள்?

நாக: அவன் நெற்றி வெயர்வை நிலத்தில் சிந்தப்பாடுபட்டான், பூமாதேவி கண்விழித்தாள். அவனது இல்லாளும் நல்லாளாய் இருக்கின்ருள். அவர்கள் நல்லொழுக்கம் உள்ளவர்கள், பணம் சேர்ந்தது. அவனது மகனின் பேச்சுகளைக் கேட்டால் அதன்படி நடந்து பணம் சம்பாதிக்கலாம். பேரும் புகழுடனும் வாழலாம்

பால: பையன் ஆங்கிலத்திலா? தமிழிலா பேசுகிருன், ஆங்கிலம் என்ருல் கேட்டுப்பார்க்கலாம்.

நாக: உனக்கு இன்னும் ஆங்கில மோகம் போகவில்லை. உலகிற்குப் பணக்காரன் என்று காட்டிக்கொள்ளும் மனப்பான்மை மாறவில்லை. நல்ல விடயம் எதிற்பேசினுல் என்ன?

பால: பழக்கம் வந்து விடுகின்றது. கட்டாயம் நம்பியிருப்பேன். வட்டியும் முதலுமாகப் பன்னிரண்டு தேவை. சில்லறைக் கடனையும் சேர்த்து ஒரு பதினைந்து ஒழுங்கு பண்ணினுல் நல்லது. வட்டியில் கொஞ்சம் குறைத்துக் கதைத்துப்பார். அவர்களிடம் பணம் இருப்பது ஒருவருக்கும் தெரியாதே!

நாக: நான் சொல்லுகின்றேன், வாழ்வதெப்படி என்று நல்லையாவின் மகனிடம் போய்ப்படி. நீ ஒரு நாளைக்கு 40 சீக்றெற் அளவில் குடிக்கின்ருய். நீ குடிப்பதன் விலை சதம் 10, ஒருமாதத்தில் 120 ரூபாவரை வரும். நீ சீக்கறெற் குடிக்கத் தொடங்கி 10 வருடத்திற்கு மேலாகிவிட்டது. அதிற் செலவழித்த பணம் 14 ஆயிரத்திற்கு மேல் இருக்கும். குடியாவிட்டால் இவ்வளவும் மிச்சம் வராதா? இப்படியாகத் தேவையற்ற செலவுகளைக் குறைத்தால் எவ்வளவு பணம் மிச்சம் பிடித்திருப்பாய். அவர் நீதிக்குமிஞ்சி எதுவும் செய்வதில்லை.

பால; நண்பா! நீ என் கண்ணைத் திறந்தாய், இன்று தொடக்கம் நான் புது மனிதன். இப்படியான தன்மைகளை இனிமேல் கண்டால் செருப்பால் அடி. காத்திருப்பேன்.

நாக: நான் கண்ணைத் திறக்கவில்லை, அனுபவம் தான் உன் கண்ணைத் திறந்தது. நான் கட்டாயம் ஒழுங்குபண்ணி வருவேன். நான் வருகிறேன்.

## காட்சி 6

இடம்: நல்லையா வீடு நேரம்: இரவு 7 மணி

(சரஸ்வதி பெட்டி இழைத்துக் கொண்டிருத்தல்)

நாக: அக்கா!

சரசு: வா தம்பி வா. என்னவிசேடம்? இப்படி இருங்கள்.

நாக: அவரிடம்தான் வந்தனுன். எங்கே மகனையும் தகப்பனையும் காணவில்லை?

சரசு: தம்பியை யரோ வந்து காரில் கூட்டிக்கொண்டு போய்விட்டார்கள். ஏதோ கூட்டமாம். அவர் தோட்டத்தால் இன்னும் வரவில்லை.

நாக: அவர் வரட்டும். நீங்கள் கொடுத்துவைத்தவர்கள். உங்கள் மகன்போல் ஒருபிள்ளையைக் கோடிதவம் செய்தாலும் பெறமுடியாது. முந்தநாள் ஒரு கூட்டத்தில் உங்கள் மகன் பேசினுர். சபையில் இருந்த எல்லோரும் அணில் ஏறவிட்ட நாய்போல் இருந்தார்கள். ஆயிரம் ரூபா கொடுக்கலாம் அந்தப் பேச்சுக்கு என்று பெரியோர்கள் கதைத்தார்கள.

சுரஸ்: இருங்கோ நான் பால் கொஞ்சம் கொண்டுவருகின்றேன்.

நாக: உங்கள் மகனைப்பற்றிப் பேசியவாய்க்குப் பால்கொடுக்கவா போகின்றீர்கள்.

சரசு: இல்லைத்தம்பி எங்களுடைய பசு ஒன்று கன்று போட்டது. அதை நாங்கள் குடிக்கின்ருேம்.

நாக: கொஞ்சமாகக் கொண்டுவாருங்கள். (சரஸ்வதி சென்று செம்பும் தண்ணீரும் பாலும் கொண்டுவருதல்)

சரசு: இந்தாருங்கோ குடியுங்கோ. மாடு அழுகிறது. அவர் வருகிருர் போல் இருக்கின்றது.

நாக: அதோ வருகிருர் (நல்லையா புல்லுக்கட்டுடன் வருதல்)

நல்: தம்பி இருங்கோ. கால்முகம் கழுவிவிட்டு வருகின்றேன். தம்பிக்குக் கொஞ்சம் பால்கொடு.

நாக: அக்கா தந்துவிட்டா. உங்களிடம் ஒரு விசேடகருமமாய் வந்தேன். பிரேமாவதியென்ற பெண்ணைத் தெரியுமல்லவா? அந்தப்

பெண் பெரிய எடுப்பாய் நடந்தது, புருஷனையும் ஆடாத ஆட்டங்கள் ஆடச்செய்து குடும்பத்தையே திண்டாட்டம் போடச் செய்துவிட்டது. காணியும் வீடும் 10 ஆயிரம் ரூபாவிற்கு ஈடாம். இந்தக்கிழமைக்குள் மீளாவிட்டால் அறுதியாகிவிடும். பாலச்சந்திரன் என்னை வந்து கெஞ்சி மன்றாடுகிறான். அவரிடம் பணம் கேட்கலாம் என்று வந்தேன்.

சரசு: தம்பி நான் எல்லாம் கேள்விப்பட்டேன். மகளின் பிறந்த தின வைபவத்திற்குப் பிரேமாவதி சமைக்கவரச்சொல்லிச் சமைக்கச்சென்றேன். அங்குள்ள சுப்பையாயாவும் சொல்லிற்று நீனைக்க மனவருத்தமாக விருக்கின்றது. ஒரு குமரும் இருக்கின்றது. பணத்தை வீணாகச் செலவு செய்கின்றார்கள். பெற்ற தாய் தந்தையரை உதாசீனம் செய்கின்றார்கள். அவருக்கு எல்லாம் தெரியும். (நல்லையா கால்முகம் கழுவி வருதல்)

நாக: அண்ணை வரவேண்டும். (எழுதல்)

நல்: என்ன தம்பி விசேடம்?

நாக: எனது நண்பன் புகழ் விரும்பி பாலச்சந்திரனுக்குப் பணம் தேவையாம். உங்களிடம் வாங்கலாம் என்று நினைத்தேன்.

நல்: எல்லாவிடயமும் மனைவி சொன்னா. பாவம் எவ்வளவு வேண்டும்.

நாக: ஒரு பதினையாயிரம்.

நல்: நீ கேட்கும் போது யார் இல்லை என்று சொல்வார்கள்.

நாக: பொறுப்பாக வீடும் வளவும் தருவார்கள்.

நல்: தம்பி எப்போது வேண்டுமாம்.

நாக: நான் சொல்லியனுப்புவேன். வட்டி.........

நல்: தம்பி இதுவும் ஒரு கேள்வியா? பணம் வீட்டில் இருந்தால் குட்டி போடுமா? மிகவும் குறைந்தவட்டிக்குக் கொடுக்கலாம். பிறரின் பணம், எங்களுக்கு ஏன்? நீதியான முறையில் பணத்தைச் சம்பாதிக்க வேண்டும்.

நாக: நான் வருகின்றேன்.

நல்: பணம் எங்களிடம் எடுப்பதென்றால் அவர்களுக்குப் பிடியாதே.

நாக: இப்போது பாலச்சந்திரன் நன்றாகப் பதப்பட்டு விட்டார். வலை தோளில் பொறுத்துவிட்டது.

நல்: சரி நீங்கள் வாருங்கள். பிறக்கிருசியை ஒழுங்குபண்ணுங்கள்.

நாக: நான் போகலாம் என்று நினைத்தேன். உங்கள் மகனைக்கண்டுவிட்டுப் போனால் நல்லது போலவிருக்கின்றது. அவனில் எனக்கு ஒரு விருப்பம்.

நல்: அவன் இப்போது வரமாட்டான். கூட்டம் முடியப் பன்னிரண்டு மணியாகும் என்று தோட்டத்தில் சொன்னான். நாளைக்குக் காணலாமே.

நாக: நின்று என்ன பிரயோசனம்? உங்கள் மகனிடம் நான் தேடிய தாகச் சொல்லுங்கள்.

நல்லை: ) சரிதம்பி. இருட்டாக இருக்கின்றது. விளக்கைக் கொண்டு
சுரசு: } போங்கள். (விளக்கை வாங்கிக்கொண்டுபோதல்)

## காட்சி 7.

இடம்: பிரேமவாசம். காலம் மாலை

(பாலச்சந்திரன் நாற்காலியில் இருந்து யோசித்துக்கொண்டிருத்தல். சுப்பையா பத்திரிகை வாசித்தல்)

பால: சுப்பையா என்ன கையிலே?

சுப்: (பத்திரிகையைப் பின்னேமறைத்துக்கொண்டு) ஒன்றும் இல்லை ஐயா.

பால: பத்திரிகையா? அதில் என்ன விசேடம் இருக்கின்றது?

சுப்: ஐயா, நல்லையா அண்ணனின் மகன் வீரசிங்கம் ஒரு கூட்டத்தில் பேசும்போது எடுத்தபடமும், பேச்சும் போடப் பட்டிருக்கின்றது. அதைத்தான் ஐயா வாசிக்கின்றேன். (ஒருபோதும் சுப்பையா என்று சொல்லாதவர் இன்று சுப்பையா என்கிறாரே என்று எண்ணிக்கொண்டு)

பால: சுப்பையா! நான் முந்திய ஆள் அல்ல, எங்கே அதைக்கொடு நண்பன் நாகரத்தினம் சொல்லக் கேள்விப் பட்டிருக்கின்றேன் அப்பையனைப்பற்றி. (சுப்பன் பத்திரிகையைக் கொடுத்தல்)

சுப்: ஐயா, நீங்கள் அதைக் கட்டாயம் வாசிக்கவேண்டும். எப்படிப் பணத்தைச் செலவழிக்க வேண்டும் என்று, எப்படி நேர்மையாக வாழவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

பால: சுப்பையா நீ சொல்வது சரி. (பாலச்சந்திரன் பத்திரிகை படித்துக்கொண்டு) நானும் அனுபவப்பட்டு நல்லபாடம் படித்து விட்டேன். எவ்வளவு அழகாகப் பேசியிருக்கிறான் பையன்.

சுப்: ஆமாம் ஐயா, பையனும் நல்ல குணமுள்ளவன்.

(பிரேமாவதி வருதல்)

பிரே: மிஸ்டர் பாலா! நீங்கள் வேலைக்காரருடன் இப்படியா கதைக்கிறது? இப்படிக் கதைத்தால் எப்படி மரியாதையாக நடப்பார்கள்?

பால: மரியாதை எது என்பது விளங்காமல் நடந்து பட்ட கஷ்டம் போதும். இனிமேல் அந்தக் கதையை விட்டுவிடு. சுப்பையா அம்மாவுக்குத் தமிழ் செவ்வையாகத் தெரியாது, எப்படியாக என்னென்ன விடயங்களில் பணத்தைக் செலவு செய்ய வேண்டும் என்று நல்லையாவின் மகன் பேசியிருப்பதை வாசித்துக் காட்டு. சரோஜா! நீயும் வந்து கேள்.

(சரோஜா! வருதல். சுப்பையா வாசித்தல்.)

பிரே: எல்லாம் எங்களைப்பற்றியல்லவா பேசியிருக்கின்றான் பையன். எங்களைப்பேச அவனுக்கு என்ன துணிச்சல்? எங்கள் தோட்டத்தில் கமம் செய்துகொண்டு அந்தப் பயல் இப்படிப்பேசலாமா? இதை நீங்கள் கட்டாயம் கவனிக்கவேண்டும்.

பால: பிரேமா! இந்தப்பல்லவியை இனிமேல் விடு. அவர்களுக்குத் தான் வாழத்தெரியும், எங்களைப்போன்றவர்களின் வாழ்க்கைக் கேட்டைத்தான் பேசியுள்ளான். என்னதப்பு?

சரோ: அப்பா! வீரசிங்கம் பேசுவதில் உண்மையிருக்கப்பா. நான் அவர் எழுதிய கதைப்புத்தகங்களை வாசித்திருக்கிறேன் வாழ்க்கையில் நடைபெறும் சீர்கேட்டை எல்லாம் எடுத்துக்காட்டி எப்படி நடக்கவேண்டும் என்பவற்றைப் பொதிந்து நல்ல அழகாய் எழுதியிருக்கிறார்,

பால: புத்தகங்களும் எழுதியிருக்கிறானா பையன்? மிகவும் கெட்டிக் காரனாயிருக்கிறான். அந்தப் புத்தகங்களை எனக்கும் தா. வாசிக்க வேண்டும்.

சரே: தருகிறேன் அப்பா.

பால: பிரேமா! நீ அவர்களைக் கேவலமாக நினையாதே. நேர்மையாகக் கஷ்டப்பட்டுப் பணம் சம்பாதிக்கிறார்கள். நான் இப்போது அவர்களிடம் தான் கடன் வாங்கப் போகின்றேன்.

பிரே: (ஆச்சரியத்துடன்) இவ்வளவு பணத்தையும் அவர்கள் கமம் செய்தா சம்பாதித்தார்கள்? தோட்டம் செய்து இவ்வளவுபணம சம்பாதிக்கலாமா?

பால: தோட்டம் செய்தல் கேவலமான தொழில் என்று தான் இற்றைவரையும் நான் நினைத்தேன். இப்பொழுது கமக்காரன் பெருமை விளங்கிவிட்டது. சரி இனிமேல் நீயும் அவர்களை என்றாலும், வேறுயாரையாகிலும் கேவலமாகக் கதைக்கவோ கூடாது

அள்ளி இறைக்கும்போது நண்பர்கள் துள்ளித்துள்ளி வந்தார்கள். இப்போது கடன்காரராக இருக்கின்றோம் என்று எட்டியும் பார்க்கிறார்கள் இல்லை, ஐந்துசதம் கடன்கேட்டால் கையை விரிக்கிறார்கள்.

பிரே: பணம் இருக்கும்மட்டும். கொடுக்கும் மட்டும் பாற்பானையைப் பூனைசுற்றிய மாதிரி வீட்டைச் சுற்றுகிறார்கள், இப்போது ஒருவரையும் காணோம். எல்லாம் என்னால் வந்தவினை.

சரோ: அப்பா நீங்கள் சொல்வது சரியப்பா.

பிரே: நாங்கள் அவர்களை இதற்குமுன் நடத்திய முறைகளை நினைக்கும் போது வெட்கமாகவிருக்கின்றது.

பால: அதெல்லாம் இப்போது பார்க்கமுடியாது. இன்றோ நாளையோ அவர்கள் இங்கு வருவார்கள். மரியாதையாகக் கதைக்கவேண்டும். அவர்களே எங்கள் மானத்தைக் காப்பாற்றப் போகின்றார்கள். அவர்கள் இல்லாவிட்டால் வீடு ஏலத்தில் கட்டாயம் விலைப்படும். அது எவ்வளவு அவமானம்.

பிரே: சரி உங்கள் சொற்படி நடக்கின்றேன், நீங்கள் கீறியகோட்டைத் தாண்டமாட்டேன்.

பால: நான் சந்திவரையும் சென்று பார்த்துவிட்டு வருகின்றேன், யார் வந்தாலும் மறித்து வைத்திருங்கள்.

## காட்சி 8.

இடம்: பிரேம வாசம். காலம்: இரவு

(பிறக்ரர் வீட்டிற்குச் சென்று, எல்லாம் முடித்துவிட்டுத் திரும்பி வந்து, பாலச்சந்திரன், பிரேமாவதி, சரோஜா, நல்லையா, சரஸ்வதி, வீரசிங்கம், நாகரத்தினம் யாவரும் இருத்தல்)

பால: சுப்பையா, எல்லோருக்கும் தேநீர் கொண்டுவந்து கொடு.

நாக: சுப்பன் என்ற பெயர்கூடச் சுப்பையாகமாறிவிட்டதே.

பால: நாங்களே மாறியது போது அவனது பெயரும் மாறினால் நல்லது. (யாவரும் சிரித்தல்)

நாக: இந்த எண்ணம் முன்பு வந்திருந்தால் இந்தத் தொந்தரவு வராதே.

பால: பிழைவிட்டவர்கள் திருந்தக் கூடாதா?

நாக: திருந்துவது யார் கூடாது என்று சொன்னீர்கள்? முன்பு சிந்தித்து நடத்தல் எல்லாவற்றிலும் நன்று. இனிமேல் நீங்கள்வீரசிங்கத்திடம் எல்லாவற்யையும் கேட்டறிந்தால் நன்று. அவர்களுடைய வாழ்க்கையைப் பின்பற்றி நடப்பது சிறந்ததாகுமென நினைக்கின்றேன்.

பால: நாங்கள் எல்லாவற்றையும் வீரசிங்கம் எழுதிய புத்தகங்களில் நேற்றுத்தான் வாசித்தோம் பிள்ளைசொல்லி. (சுப்பன்தேனீர் கொண்டுவருதல்)

நாக: உங்கள் மகள் தமிழ் படித்திருக்கின்றதா? நான் ஆங்கிலம் தான் தெரியும் என்றிருந்தேன்.

பால: கதைப் புத்தகங்கள் வாசிக்கிறது. வீரசிங்கம் எழுதிய புத்தகங்களும் வாசித்ததாம். எல்லாரும் தேனீர் குடியுங்கள்.

நாக: தேனீர் நல்லது என்றுதான் சொல்லுகிறார்கள். நான் இடைக்கிடை குடிப்பேன். இவர்கள் மூன்றுபேரும் குடிப்பதில்லை. சரசுவதி சொல்லியது ஒருநாள் தேயிலை என்ற பெயர் மனிதன் சுகத்தைத்தேய்ப்பதால் உண்டாயிற்று என்று.

பால: அவர்களுக்குக் குடிக்க என்ன கொடுக்க?

நல்: இவ்வளவும் நல்லசந்தோஷம். எங்களுக்குத் தண்ணீர் கொடுத்தாற் போதும். நாங்கள் சந்தோஷமாகக் குடிக்கிறோம்.

பால: சுப்பையா. செம்பை நன்றாக மினுக்கிக் கழுவித்தண்ணீர் கொண்டுவந்து கொடு. உங்கள் மூவர்க்கும் நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் மானத்தைக் காப்பாற்றினீர்கள். நாங்கள் இதுவரையும் செய்த பிழைகளை மன்னிக்கவேண்டும்.

நல்: எல்லாரும் பிறக்கும்போது நல்லவர்கள். அவர்கள் சேர்கின்ற சேர்க்கையால் மாறுகின்றார்கள். அச்சமயத்தில்தான் நாம் அறிவை உபயோகப்படுத்த வேண்டும். நல்லநீதி நூல்களை ஓய்வு நேரங்களில் வாசிக்கவேண்டும். சிக்கனமாக வாழப்பழக வேண்டும். வரவுக்குத் தக்க செலவு செய்யவேண்டும். ஒரு பழமொழி சொல்லுவார்கள் "காகம் அன்ன நடை நடக்கப்போய்த்தான் தன்னடையும் கெட்டது" என்று. மற்றவர்கள் நடப்பது போல் நாம் நடக்க எண்ணக்கூடாது. எமது வருமானத்தையும் யோசிக்கவேண்டும்

பால: சரியண்ணை. கழிந்ததற் கிரங்கிப்பிரயோசனம் இல்லை. இந்த வீடு உங்கள் மூவர் பெயருக்கும் தானே இருக்கின்றது. நீங்கள் இங்கேயே இனிமேல் இருக்கலாம்.

L

நல்: தம்பி உங்கள் எண்ணத்திற்கு நன்றி. எங்கள் குடிசையில் இருப்பது பெரிய சந்தோஷம்.

பால: உங்களை ஒரு விடயம் கேட்கலாம் என்று இருக்கின்றேன். நீங்கள்.................

நல்: சொல் தம்பி. அதைப்பற்றி ஒன்றுமில்லை.

பால: உங்களுக்கு ஒரு மருமகளைக்கொடுக்க என் மனம் விரும்புகின்றது. வரவுக்குத்தக்க செலவு செய்யாமல் நாம் அடைந்த நிலையையும், ஏழைகளை அவமதித்ததையும், கமக்காரருடன் கதைப்பதே அவமானம் என்றிருந்ததையும், உலகம் அறியும். அதற்கு இது தண்டனையாகவிருக்கட்டும்.

நாக: }
பிரே: } ஆம் அண்ணா. கட்டாயம் நீங்கள் இதற்கு மறுக்கக் கூடாது.

நல்: சரசு என்ன சொல்கிறாய்?

சரசு: உங்கள் விருப்பம்.

நல்: சரி பார்ப்போம்"

பால: தம்பி வீரசிங்கம் எங்கள் வாழ்க்கையை ஒரு நாடகமாக எழுதி விளம்பரப்படுத்து, அந் நாடகம், வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்கின்றவர்களுக்கும், கமக்காரரைக் கேவலமாக நினைப்போர்க்கும், கமம் செய்தும் பணம் சம்பாதிக்க முடியாது என்று எண்ணுவோர்க்கும் நல்ல பாடமாகவிருக்கட்டும்.

நல்: அநுபவமே நல்லபாடம். கூடிய சீக்கிரம் விவாகத்தை நிறைவேற்றுவோம்.

நாக: இது எல்லோர்க்கும் நல்லபாடம்தான். நாங்கள் வருகிறோம்.

பால: உங்கள் நன்றியை ஒருபோதும் மறக்கமாட்டோம். போய் விட்டு வாருங்கள். (நல்லையா, சரஸ்வதி. வீரசிங்கம் ஆகியோர் யாவர்க்கும் வணக்கம் செலுத்தி விட்டுப்போதல்.)



மோகனா